janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2023 ஏப்ரல் 16 - 22 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 02




## ஆளுநர் ஆர்.என்.ரவியின் அத்து மீறிய கருத்துக்களைக் கண்டித்து

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் கண்டனப் பொதுக்கூட்டம்

**தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியின் அத்து மீறிய கருத்துக்களைக் கண்டித்து தி.மு.க. தலைமை யிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சென்னை சைதை தேரடியில் கண்டனப் பொதுக்கூட்டம் நடத்தினர்.**





ஆளுநர் என்பவர் அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி, அமைச்சரவை மற்றும் சட்டமன்றப் பேரவையின் ஆலோசனையை பெற்றும், ஏற்றும் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றி வர வேண்டியவர். ஆனால் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, தனது தனித்த விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்ப பொறுப்பற்ற முறையில் செயப்பட்டு வருகிறார்.

இதன் மூலம் மாநில மக்களின் உணர்வுகளை அலட்சியப்படுத்தியும், அவமதித்தும் வருகிறார். அவரது நடவடிக்கை மக்களாட்சி முறையை சிதைக்கும் அதிகார வர்க்க, சர்வாதிகார முறையில் இருக்கிறது.

தமிழ்நாட்டு மக்களின் நீண்டநாள் கோரிக்கையான "நீட்" தேர்வுக்கு விலக்களிக்க வேண்டும். ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுக்கு தடைவிதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட மக்கள் நலன் சார்ந்த, மாநில வளர்ச்சி மற்றும் நலன் தொடர்புடைய சட்ட மசோதாக்களை நிராகரித்து விட்டதாக கூறியுள்ள ஆளுநர், மாநில அரசிற்கு அது போன்ற சட்டங்களை நிறைவேற்ற உரிமையில்லை என கூறி, ஆணவத்தின் உச்ச நிலைக்கு சென்றுவிட்டார்.

அரசியல் அமைப்பு சட்டத்தின் அதிகாரத்தை அத்துமீறி, ஜனநாயகத்தை மதிக்காதவராக, தமிழக சட்டப்பேரவையை தூக்கிஎறிந்து பேசும் திமிரோடு, செயல்பட்டு வருவதை அனுமதிக்க முடியாது என்பதை தமிழக மக்கள் ஒன்றுபட்டு எச்சரிக்கும் முறையில் கண்டன ஆர்ப்பாட்டம் ஏப். 12 அன்று சென்னை சைதை தேரடியில் நடைபெற்றது.

அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு செயல்பட வேண்டிய ஆளுநர், ஆர்எஸ்எஸ் பாஜக, குடும்பங்களின் (சங்பரிவார்) சேவகனாக செயல்பட்டு, மக்கள் அமைத்துள்ள அரசுக்கு எதிராக ஒரு போட்டி அரசாங்கம் நடத்துவதை ஒரு வினாடியும் அனுமதிக்க முடியாது.

ஆர்.என்.ரவி ஆளுநராக பொறுப்பேற்ற நாள் முதல் ஒவ்வொரு நாளும் சர்ச்சைகளை உருவாக்கும் சர்ச்சைக்குரிய மனிதராக செயல்பட்டு வருகின்றார். தூத்துக்குடி மக்களின் ஆரோக்கியவாழ்க்கையைசீரழித்த, சுற்றுச் சூழலுக்கு கேடு செய்த, வேதாந்த நிறுவனத்திற்கு எதிரான போராட்டத்தையும், உயிர் தியாகம் செய்தவர்களையும் கொச்சைப்படுத்துகின்றார்.

அறிவுலகம் பேரறிவாளர் என போற்றி, பாராட்டும் காரல் மார்க்ஸ், சட்டமேதை அண்ணல் அம்பேத்கர், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் போன்ற தலைவர்களை இழிவு படுத்துகின்றார். தரம் தாழ்ந்து விமர்சிக்கின்றார்.

ஆளுநர் பொறுப்புக்கு துளியும் பொறுப்பில்லாத ஆர்.என்.ரவி ஆளுநராக தொடர தார்மீக உரிமை அனைத்தையும் இழந்துவிட்ட நிலையில் அவரை உடனடியாக குடியரசுத் தலைவர் திரும்பப் பெற வேண்டும், என வலியுறுத்தி கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சு.திருநாவுக்கரசர், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பாலகிருஷ்ணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., மனித நேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சித் தலைவர் இ.ஆர். ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் தி.வேல்முருகன் ஆகியோர் பங்கேற்று கண்டன உரையாற்றினர்.

## "ஆளுநரின் செலவு கணக்கில் விதிமீறல்"

## நிதியமைச்சர் குற்றச்சாட்டு

ஆளுநருக்கு ஒதுக்கப்படும் தொகை ரூ.5 கோடியான பிறகு, தொடர்ந்து விதிமீறல் நடைபெற்று வருவதாக நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஆளுநர் குறித்த தனித் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றது.

கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன், "ஆளு நருக்கு செயலகம், வீட்டு செலவு உள்ளிட்ட 3 வகைகளில் அரசாங்கம் நிதி ஒதுக்குகிறது. திமுக ஆட்சிக்கு வந்த பிறகு, ஆளுநர் பொறுப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படு கிறது. 2 கோடியே 41 லட்சமாக இருந்த நிதி ஒதுக்கீடை, இந்த ஆண்டு 3 கோடியே 60 லட்சமாக முதலமைச்சர் உயர்த்தியிருக்கிறார்.

ஆளுநருக்கு ஒதுக்கப்படும் தொகை 5 கோடியான பிறகு, தொடர்ந்து விதிமீறல் நடைபெற்று வருகிறது.

ஆளுநர் மாளிகைக்கு இதுவரை மொத்தமாக செலவிடப்பட்டிருப்பது 18 கோடி ரூபாய். அதில் 11 கோடி ரூபாய் எங்கே செலவிடப்பட்டது என்ற விவரம் அரசுக்கு தெரியாது. இதை தான் விதிமீறல் என்கிறேன். செப்டம் பர் 2021 வரைக்கும் எங்களுக்கு தெரிந்த அளவு இந்த நிதி எல்லாம் ஏதோ ஒரு நிறுவனத்திற்கு அனுப்பப் பட்ட நிதி என்பது தெரிய வருகிறது.

ஒரே நபருக்கு மீண்டும் மீண்டும், ஒரே செலவுக்கு நிதி ஒதுக்கக் கூடாது என்ற நிதித்துறையின் விதியைமீறி, மாதம்தோறும் 58 ஆயிரம் வீதம், 6 மாதத்திற்கு 3 லட்சத்து 48 ஆயிரம் சென்றுள்ளது. ராஜ்பவனில் அனைத்து பணியாளர்களுக்கும் போனஸ் என்ற பெயரில் 11 லட்சம் மற்றும் 14 லட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது. நிதித்துறையின் விதிக்கு மாறாக, பல செலவுகளுக்கான நிதியை நிதித்துறை வழங்கியிருக்கிறது என்பதை வருத்தத்துடன் பதிவு செய்கி றேன். விதிமுறை மீறல்கள் தடுக்கப் பட்டு இனிமேல் விதியில் இருக்கும் செலவுகளுக்கு மட்டுமே நிதி ஒதுக்கப் படும் என்ற விதிமுறையை கொண்டு வருவேன்" என்று தெரிவித்தார்.

கட்சிக் கடிதம்

# தமிழ்நாட்டில் அனுமதிக்கலாமா? ஆளுநர் ரவியை!



போர்க்குணமிக்க தோழர்களே!

**நாடாளுமன்றத்திற்கான தேர்தல் நெருங்கி வரும் நிலையில், பிரதமரும், அவரது சகாக்களின் உரைகளும் ஜனநாயகத் தன்மையை இழந்து நிற்கிறது.நாடு முழுவதும் கலவரங்களைத் தூண்டவும், மோதலை உருவாக்கவும், மக்கள் வடித்திடும் இரத்தத்தில் தங்களின் குறுகிய அரசியலை நிறைவேற்றிக்கொள்ளவும் துடியாய் துடிக்கின்றனர்.**

கடவுளைக் காரணம் காட்டி, கடவுளின் பெயராலேயே கலகம் விளைவித்து, அக்கலகத்தின் வாயிலாக தங்களின் இருப்பை தற்காத்துக் கொள்ள முனைகின்றனர்.

மக்கள் ஏற்கக் கூடிய வலிமையான கொள்கை தங்களிடத்தில் இல்லாத காரணத்தால், மக்களின் ஆதரவை பெற முடியாது என்பதை உணர்ந்து, அதற்கு மாற்றான வழி தான் கடவுளின் பெயரால் கலகம் என்கிற பித்தலாட்டத்தனமான கொள்கையைப் பின்பற்றி, நாட்டின் வட பகுதியில் பல்வேறு கலவரங்களை உருவாக்கி, சட்டம் ஒழுங்கை சீர்குலைத்து அரசியல் குளிர் காயும் அற்பக் கூட்டமாகக் காவிக் கூட்டம் செயல்பட்டுக் கொண்டுள்ளது.

வட மாநில அரசியல் தென்னகத்தில் குறிப்பாக தமிழகத்தில் ஈடேறாது என்பதனை பன்னெடுங்கால அனுபவத்தின் காரணமாக, இங்கே குட்டையைக் குழப்பி மீன்பிடிக்க ஒரு நபரை டெல்லி மேலிடம் அனுப்பி வைத்துள்ளது.

அவர் வேறு யாரும் அல்ல, ஆர்.எஸ்.எஸ். படையின் செயல்வீரராக செயல்பட்டு வரும் மேதகு ஆளுநர் ஆர்.என். ரவி. டெல்லி அரசால் நியமனம் செய்யப்பட்டு இங்கே பொறுப்பேற்ற அந்த நாள் தொட்டு இன்று வரை, வாயைத் திறந்தால் அத்துமீறலாக, அராஜகமாக திகழ்கின்றது.

அரசியல் அமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட மிக உயர்ந்த பொறுப்பு ஆளுநர் பொறுப்பு.

அத்தகைய உயர்நிலைப் பொறுப்பில் உள்ள பெரிய மனிதர், தான் வகிக்கும் பொறுப்பிற்கு பெருமை சேர்க்கும் வண்ணம் செயல்படுவது, அவருக்கும் அவர் வகிக்கும் பொறுப்பிற்கும் நல்லது.

ஆனால் அவர் எவ்வாறு செயல்படுகின்றார் எனில், தமிழ்நாட்டிற்கு எதிராக, தமிழக மக்களுக்கு எதிராக, தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டு வருகின்றார்.

உலகம் போற்றும் மாமேதை மார்க்சிற்கு எதிராக, அரசியலமைப்புச் சட்டத்தை நமக்கு அளித்திட்ட சட்டமேதை அண்ணல் அம்பேத்கருக்கு எதிராக, சமூக நீதிக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த தந்தை பெரியாருக்கு எதிராக புலம்பி திரிகின்றார்.

நாட்டு மக்களால் நிராகரிக்கப்பட்ட சனாதனத்தை தூக்கிப் பிடித்து தனது ஆர்.எஸ்.எஸ். விசுவாசத்தை வெளிப்படுத்துகின்றார்.

இவரது அத்து மீறல், அராஜகம், அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பான செயல்பாடு குறித்தும், ஒன்றிய அரசு ஆளுநர் பொறுப்பிற்கு தகுதியற்றவர் என்பதனை மிகுந்த பொறுப்புணர்வோடு சுட்டிக் காண்பித்து, அவரை திரும்பப் பெற வேண்டுமென எடுத்துக் கூறி நாட்டின் உயர் பொறுப்பில் உள்ள குடியரசுத் தலைவருக்கு கடந்த பல மாதங்களுக்கு முன்பே, தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு கொடுத்திட்ட விண்ணப்பத்திற்கு இன்று வரை பதில் இல்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, குடியரசுத் தலைவர் மற்றும் ஒன்றிய அரசு மதிப்பளிக்க தவறியதால், ஒன்றிய அரசும், குடியரசுத் தலைவரும் ஆளுநர் ரவியின் அராஜக, அத்துமீறல் அனைத்திற்கும் முழு லைசென்ஸ் வழங்கி விட்டார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

ஆர்.எஸ்.எஸ். கைப்பாவையான ஒன்றிய அரசின் முழு ஆதரவும் தனக்கு இருக்கிறது என்ற காரணத்தால் எதனையும் பேசலாம் என்ற முடிவிற்கு வந்துவிட்டார் திருவாளர் ரவி.

ஆணவத்தின் உச்ச சொரூபத்தில் வீற்றிருக்கும் ஆளுநர் தற்போது திருவாய் மலர்ந்திருப்பது என்ன தெரியுமா?

சட்டமன்றம், அது என்னடா மன்றம்? அது மசோதாக்களை நிறைவேற்றினால் அதற்கு நான் ஒப்புதல் அளிக்க வேண்டுமா? அல்லது திருப்பி அனுப்ப வேண்டுமா? அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டுமா? அவ்வாறு நான் செய்ய முடியாது! அரசியலமைப்புச் சட்டம் கூறுவதை நான் ஏற்க மாட்டேன். உன்னால் என்ன முடியுமோ அதனை செய்து பார் என்று ஆணவத்தின் உச்சத்திற்கு சென்றுள்ளார்.



பேரவை உறுப்பினர்கள் கூடி ஒருமனதாக நிறைவேற்றிய இருபதுக்கும் மேற்பட்ட மசோதாக்கள் மீது எவ்வித தீர்வும் இன்றி ஆளுநர் மாளிகையில் முடங்கிக் கிடக்கின்றன.

> சட்டப்பேரவையில் நிரந்தர சட்டமாக்க மசோதா நிறைவேற்றப்பட்டு, ஆளுநருக்கு அனுப்பப்பட்ட நிலையில், மக்களின் உயிரைப் பறிக்கும் சூதாட்ட நிறுவனத்தைச் சார்ந்த நிர்வாகிகளை ஆளுநர் மாளிகைக்கு அழைத்து விருந்து படைத்ததன் நோக்கம் என்ன? பெற்றது எவ்வளவு? பகிர்ந்து கொண்டோர் யார், யார்?

அது குறித்து ஆளுநர் என்ன சொல்கிறார், அது முடங்கிக் கிடந்தால் நிராகரிக்கப்பட்டதாகப் பொருள்படும் என்று திமிராக கூறுகின்றார். இத்தகைய முடிவு எடுத்திட யார் இவருக்கு அதிகாரம் அளித்தது? இல்லாத அதிகாரத்தை எடுத்துக் கொண்டு இதுதான் என் அதிகாரம் என்று இறுமாப்புடன் பேசுவதற்கு இவர் யார்?

இது மட்டுமா? ஆன்லைன் சூதாட்டக் கொடுமையால் தமிழகத்தைச் சேர்ந்த ஏறத்தாழ இதுவரை 50க்கும் மேற்பட்டவர்களின் விலை மதிக்கவொண்ணா உயிர்கள் பறிக்கப்பட்டு விட்டன. இதனை தடை செய்ய அவசரச் சட்டம் அமைச்சரவை நிறைவேற்றிய போது ஒப்புதல் வழங்கிய ஆளுநர் நிரந்தர சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க மறுப்பது ஏன்? (தற்போதுதான் ஒப்புதல் அளித்துள்ளார்)

சட்டப்பேரவையில் நிரந்தர சட்டமாக்க மசோதா நிறைவேற்றப்பட்டு, ஆளுநருக்கு அனுப்பப்பட்ட நிலையில், மக்களின் உயிரைப் பறிக்கும் சூதாட்ட நிறுவனத்தைச் சார்ந்த நிர்வாகிகளை ஆளுநர் மாளிகைக்கு அழைத்து விருந்து படைத்ததன் நோக்கம் என்ன? பெற்றது எவ்வளவு? பகிர்ந்து கொண்டோர் யார், யார்?

இதற்கு விளக்கம் அளிக்க வேண்டாமா? வெளிப்படைத் தன்மை வேண்டாமா? ஆளுநர் மாளிகை என்ன ரகசிய சதித் திட்டம் தீட்டும் கொள்ளைக் கூடாரமா?

இதனையும் தாண்டி தூத்துக்குடியில் இயங்கி வந்த வேதாந்தா நிறுவனத்தின் ஸ்டெர்லைட் ஆலையால் பல ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட மக்கள், ஆலையை மூட வேண்டும் என்று தொடர்ந்து போராடினார்கள்,

மாத கணக்கில், ஆண்டுக் கணக்கில் போராடிய நிலையில், அன்றைக்கு இருந்த எடப்பாடி பழனிச்சாமியின் தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சி கொடூர அடக்குமுறையை மக்கள் மீது ஏவியது.

அப்பாவி மக்கள் 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான மக்கள் படுகாயமுற்றார்கள். ஜாலியன் வாலாபாக் படுகொலை போன்று கொடூரத் தாக்குதலை ஈவு இரக்கமின்றி காவல்துறை காட்டுமிராண்டித் தனமாக தாக்குதலை மேற்கொண்டது.

அத்தகைய போராட்டத்தை, தியாகத்தை, சிந்திய இரத்தத்தை ஆளுநர் ரவி கொச்சைப்படுத்தும் விதமாக வெளிநாட்டு சக்திகளிடம் பணம் பெற்றுக்கொண்டு, மக்களை தூண்டிவிட்டு போராட்டம் நடத்தினார்கள் என்று நாக்கில் நரம்பின்றி பேசுகின்றார் ஆளுநர் ரவியார்.

தமிழ்நாட்டை மதிக்க மாட்டேன்
தமிழக மக்களை மதிக்க மாட்டேன்
தமிழ்நாடு சட்டப் பேரவையை மதிக்க மாட்டேன்

என்று இறுமாப்புடன் பேசுகின்ற ரவியார் தமிழ்நாட்டில் நடமாடலாமா? ஆணவத்தின் உச்சத்தில் நின்று உறுமிக் கொண்டுள்ள ஆளுநர் ரவி, மக்களை மதிக்காத ஒரு நபர் தமிழகத்தில் நடமாடலாமா?

தமிழகத்திற்கே எதிராக இருக்கும் ஒரு நபர் மாநிலத்தின் ஆளுநராக இருக்க தகுதி உடையவரா? எத்தைகைய தகுதியும் அற்ற நபரை நாம் ஏன் அனுமதிக்க வேண்டும்?

தமிழ்நாட்டு மக்களை கிள்ளுக் கீரையாக கருதும் நபரை அனுமதிக்க நாம் என்ன இளிச்சவாயர்களா?

வந்தாரை வாழவைக்கும் தமிழகத்தில்,

யாதும் ஊரே யாவரும் கேளிர் என உலகத்திற்கே வழிகாட்டிய தமிழகத்தை, தமிழ்நாட்டு மக்களை, தமிழ்நாடு சட்டப்பேரவையை, அது நிறைவேற்றும் மசோதாக்களை அலட்சியப்படுத்தும் நபரை நாம் ஏன் கண்டும், காணாமல் இருந்திடல் வேண்டும்.

இனியும் ஏன் பொறுமை காக்க வேண்டும்?


அநீதியைக் கண்டு, சீற்றம் கொண்டு, அநீதிக்கு எதிராக ஓங்கி குரல் எழுப்பும் தமிழக மக்களே நீங்களே முடிவு செய்து கொள்வீர்!

தமிழ்நாடு சட்டப்பேரவை ரவியின் செயல்பாடுகளைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி விட்டது. குறை இருக்கிறது என்று கூவி வந்த ஆளுநர், சத்தமில்லாமல் மசோதாவில் கையெழுத்துப் போட்டுள்ளார்.

நிராகரித்து விட்டேன் என்ற ஆணவக் குரல் இன்று நிராகரிக்கப்பட்டு விட்டது. முற்றிலும் அவர் மாற வேண்டும். இல்லையேல் மக்கள் மாற்றுவார்கள்!

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க,




(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்



டி.எம்.மூர்த்தி

**இந்தியாவில் சின்னத்துடன் கூடிய முதல் தேர்தல் 1957ல் நடத்தப்பட்டது. அப்போது இருந்து தொடர்ந்து தேசிய கட்சி அங்கீகாரத்தோடு இருக்கும் ஒரே கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே. அந்தத் தேர்தலில் கதிர் அரிவாள் சின்னம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்டது. இப்போது வரை அந்த ஒரு சின்னம் மட்டுமே தொடர்ச்சியாக நிலை பெற்று இருக்கிறது. காங்கிரஸ் உள்பட மற்ற எல்லா கட்சிகளுடைய சின்னங்களும் மாறிவிட்டன.**



# இதையும் எதிர்கொள்வோம்!

முதல் தடவையாக, இப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கட்சி தகுதியை, விலக்கி இருப்பதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

எத்தனை மாநிலத்தில், எத்தனைமாவட்டங்களில்ஒரு அரசியல்கட்சி இருக்கிறது, மக்களின் பிரச்சனைகளில் எவ்வாறு தலையிடுகிறது, இந்திய அரசியல் சாசனம் வரையறுத்துள்ள, மதச்சார்பற்ற, ஜனநாயக, சோசலிச, இறையாண்மைத் தன்மைகளைப் பாதுகாப்பதற்காக அது எந்த வகையில் தொண்டாற்றுகிறது, இதற்கான போராட்டங்களிலும், இந்திய விடுதலைப் போராட்டத்திலும் எத்தகைய சாதனைகளை அது செய்திருக்கிறது, என்பதெல்லாம் தேர்தல் ஆணைய விதிகளில் வரவில்லை. பெறுகிற வாக்குகள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை இவைதான் அதன் அளவுகோல் ஆகும்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிகளின்படி, ஒரு கட்சி தேசிய கட்சியாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றால்

◆ நாடாளுமன்ற மக்களவையில் இரண்டு சதவீத இடங்களில் மூன்று மாநிலங்களில் இருந்து வெற்றி பெற்றிருக்க வேண்டும்

◆ நாடாளுமன்ற அல்லது சட்டப்பேரவை தேர்தலில் குறைந்தபட்சம் 4 மாநிலங்களில் ஆறு சதவீத வாக்கு பெற்று இருக்க வேண்டும்

◆ நான்கு மாநிலங்களில், மாநில கட்சியாக அங்கீகாரம் பெற்று இருக்க வேண்டும்.

பின்வருபவற்றில் ஏதேனும் ஒன்றை நிறைவு செய்ய வேண்டும்.

மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றால்

◆ சட்டப்பேரவைத் தேர்தலில் ஆறு சதவீத வாக்கு பெற்று இரண்டு சட்டமன்ற தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும்.

◆ நாடாளுமன்றத் தேர்தலில் ஆறு சதவீத வாக்குகளை பெற்று குறைந்தபட்சம் ஒரு தொகுதியில் வெற்றி பெற வேண்டும்.

◆ சட்டப்பேரவை உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்று சதவீதம் அல்லது மூன்று சட்டப் பேரவை தொகுதிகள், இவற்றில் எது அதிகமோ அத்தனை தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

◆ அந்த மாநிலத்தில் ஒவ்வொரு 25 நாடாளுமன்றத் தொகுதிக்கும் ஒரு தொகுதி வீதம் வெற்றி பெற வேண்டும்.

◆ எந்தத் தொகுதியிலும் வெற்றி வராவிட்டாலும், செல்லுபடியான மொத்த வாக்குகளில் 8% பெற்றிருக்க வேண்டும்.

மேற்கண்ட விதிகளில் ஏதேனும் ஒன்றை நிறைவு செய்ய வேண்டும்.

ஒரு கட்சி தேசிய அளவில் அல்லது மாநில அளவில் எவ்வாறு செயல்படுகிறது என்பதற்கான தேர்தல் ஆணைய சட்ட விதிகள் இவைதான்.

தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் கொடுத்து வாக்குகளை வாங்கலாம், இன்னும் கொஞ்சம் மேலே போய் மொத்த வியாபாரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்எல்ஏக்கள் அல்லது எம்பிக்களையே விலை கொடுத்து வாங்கிக் கொள்ளலாம் என்பது இன்றுள்ள புதிய சூழல். தேர்தல் என்றால் பணம் கரைபுரண்டு ஓடுகிற நிலை. இந்தியக் கட்சிகளிலேயே மிக மிக குறைவான சொத்துடைய கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தான். அது 97 ஆண்டு காலம் செயல்பட்டு இருந்தால் என்ன, சுதந்திரப் போராட்டத்தில் அரும்பெரும் தியாகங்கள் செய்திருந்தால் என்ன, உழைக்கிற மக்களுக்காகவே தன்னை உருக்கி கொண்ட கட்சியாக இருந்தால் என்ன, இவை யாவும் தேர்தல் ஆணையத்தின் கண்களுக்கு தெரியாது, காதுகளிலும் விழாது.

மேலே கூறிய விதிமுறைகளின் படி தற்போது தமிழ்நாடு, கேரளா, மணிப்பூர் ஆகிய மூன்று மாநிலங்களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில கட்சியாக இருக்கிறது. ஏற்கனவே மேற்கு வங்காளம், ஒடிசா ஆகிய மாநிலங்களில் மாநில கட்சியாக இருந்த நிலை இன்றைக்கு இல்லை.

தமிழ்நாட்டில் இடதுசாரிகள் மட்டும் தனித்து 2014 நாடாளுமன்றத் தேர்தலிலும், 2016 இல் பெரிய மாநில கட்சிகளோடு சேராமல் மக்கள் நலக் கூட்டணி என்ற பெயரிலும் போட்டியிட்டு இருக்கிறோம். அந்த நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், அதன் கூட்டணியில் இருந்த எந்த ஒரு கட்சியும், எந்தத் தொகுதியிலும் வெற்றி பெறவில்லை. அப்போது தமிழ்நாட்டில் மாநில கட்சி என்ற தகுதியை இழந்திருந்தது. அடுத்த தேர்தலில் மீண்டும் மாநிலக் கட்சி என்ற தகுதியை பெற்று இருக்கிறது.

இதேபோல வருகிற சட்டப்பேரவை அல்லது நாடாளுமன்றத் தேர்தலில் வேறு மாநிலங்களில் வெற்றி பெறும்போது, தானாக மாநில கட்சி அந்தஸ்து மட்டுமின்றி தேசியக் கட்சி என்ற தகுதியும் சேர்ந்து கிடைத்துவிடும்.

இப்போதும் தமிழ்நாடு, கேரளா, மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் கட்சி கதிர் அரிவாள் சின்னத்தில் போட்டியிட முடியும். தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பு வந்ததற்கு பின்பும், அடுத்த மாதம் 10ம் தேதி நடைபெறும் கர்நாடக சட்டப்பேரவை தேர்தலில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர்களுக்கு கதிர் அரிவாள் சின்னம் ஒதுக்கப்பட்டு தான் உள்ளது.

இந்தியாவில் மதவெறி, சாதிவெறி, கார்ப்பரேட் கொடூரங்கள் அனைத்தையும் எதிர்த்து சற்றும் சமரசம் இன்றி களத்தில் நிற்பவர்கள் கம்யூனிஸ்டுகள் மட்டுமே. இதன் எதிரிகள் சர்வ பலம் பெற்றவர்கள். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இதனை நசுக்கி அழித்துவிட வேண்டும் என்று துடிப்பவர்கள். இப்போதும் தேர்தல் களத்தில் இடதுசாரிகள், குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேர்தலில் வெற்றி பெற்று விடக் கூடாது என்பதற்காக இந்த எதிரிகள் எடுத்து வரும் முயற்சிகள் சாமானியமானவை அல்ல.

அதன் ஒரு பகுதியாகவே தேசிய கட்சி என்ற தகுதி நீக்கம் செய்யப்பட்டு விட்டது என்ற செய்தியை, தமக்கு வாய்ப்பாக எல்லா முனைகளிலும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியே அழிந்து போய்விட்டது. இனி அதற்கு எதிர்காலமே இல்லை. எல்லாம் முற்றுப்பெற்று விட்டது என்று சாமானிய மக்களுக்கு சகல வழிகளிலும் தகவலை கொண்டு சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மை எது என்று தெரியாமலேயே, எதையும் தெளிவற்றுக் குழப்பி வைப்பதே அவர்களுக்கு அரசியல் லாபம். புதிய பலம் பெற்று எழுந்திருக்கும் வலதுசாரி மதவெறி சக்திகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மீது பாய்ந்து கடித்துக் குதற முயற்சிப்பது எதிர்பார்த்ததே. இதைவிட கொடூரர்களை சந்தித்த கட்சி இவர்களையும் சந்திக்கும்; முறியடிக்கும்.

வலதுசாரிகள் மட்டுமல்ல, இடதுசாரிகள் போல் நடித்துக் கொண்டிருப்போரும் இதுதான் சமயம் என்று ஏகத்துக்கு பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

கட்சியில் இளைஞர்களுக்கு வாய்ப்பு இல்லை; தலைவர்கள் பதவிகளை பல்லாண்டு காலத்திற்கு பிடித்துக் கொண்டு விட மறுக்கிறார்கள்; தேர்தல்களில் போட்டியிட புதியவர்களுக்கு வாய்ப்பளிப்பதில்லை என்று சமூக ஊடகங்களில் சிலர் சரடு விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கிளைச் செயலாளரில் இருந்து பொதுச்செயலாளர் வரை ஒருவர் எத்தனை முறை ஒரு குறிப்பிட்ட பொறுப்பில் இருக்கலாம் என்ற வரையறை கடந்த 10 ஆண்டுகளாகவே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மாநிலச் செயலாளராக மூன்று முறைக்கு மேலும் பொதுச்செயலாளராக இரண்டு முறைக்கு மேலும் இருக்க முடியாது என்ற விதியே வகுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாநாட்டில் கிளைச் செயலாளர் தொடங்கி பொதுச் செயலாளர் வரை, எத்தனை வயதுக்கு மேல் இருக்க முடியாது என்றும் வயது நிர்ணயம் செய்யப்பட்டு விட்டது. அதனால் அனைத்து மட்டங்களிலும் செயலாளர்கள் மாற்றப்பட்டு இருக்கிறார்கள். 75 வயது தாண்டி விட்டால் மாவட்ட, மாநில, தேசிய குழுக்கள் எதிலும் உறுப்பினராக இருக்க முடியாது.

வயது கடந்து போய், பதவி வகித்த முறைகளும் நிறைவடைந்த பிறகு, இனி இந்தக் கட்சியில் பொறுப்புக்கு வர முடியாது என்று கருதி கட்சியிலிருந்து வெளியேறி துண்டு துக்கடா கட்சியில் சேர்ந்து கொண்டவர்கள் உண்டு. தமக்கென்று செங்கொடி வைத்துக் கொண்டு புதுக் கட்சி தொடங்கியவர்களும் உண்டு. அவர்களின் தில்லுமுல்லுகளுக்கு தேவை ஒரு சிவப்பு அடையாளம்.

இளைஞர்கள் கட்சிக்குள் பொறுப்புக்கு வந்து விட்டார்கள் என்று பதறி ஓடிய அவர்கள் தான், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கெட்டுப் போய்விட்டது என்று எங்கோ மூலையில் உட்கார்ந்து கொண்டு, சமூக ஊடகங்களில் ரகசியமாய்ப் டமாரம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தேவை கட்சியின் வளர்ச்சி அன்று. தனக்கு கிடைக்காத பாலை கொட்டிக் கவிழ்க்க வேண்டும் என்ற வன்மம்.

எந்தத் தேர்தலிலும் இரண்டு முறைக்கு மேல் போட்டியிட அனுமதி இல்லை என்று தமிழ்நாடு மாநில குழு தீர்மானம் நிறைவேற்றி இருப்பதையும் அவர்கள் அறிவார்கள். ஆனாலும் பிலாக்கணம் வைப்பார்கள். நமது கட்சி தேசிய கட்சியாக இல்லையா? என்று அதிர்ந்து போய் இருக்கும் பலவீனமானவர்களை அவர்கள் குறி வைக்கிறார்கள். அதை அறியாது அப்பாவித்தனமாக பலியாகும் சிலர் உண்டு.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, முன்னர் வெள்ளையர் ஆட்சியில் 8 ஆண்டுகளும், பின்னர் காங்கிரஸ் ஆட்சியில் 5 ஆண்டுகளும் சட்டவிரோதமான கட்சி என்று தடை செய்யப்பட்டிருந்தது. சிவப்பு நிறம் இருந்தாலே குற்றம், தண்டனை; பொதுவுடமை சம்பந்தமான புத்தகங்கள் வைத்திருப்பதாக தகவல் அறிந்தாலே சிறை தண்டனை என்று 13 ஆண்டு காலம் தலை மறைவு கட்சியாகவே பணி செய்தது.

ஐயோ கட்சிக்கு இப்படி ஆகிவிட்டதே என்று கட்சியின் எந்த உறுப்பினரும் கலங்கவில்லை, புலம்பவில்லை, அழவில்லை. அரச பயங்கரவாதத்திற்கு ஆளாகி நர வேட்டையாடப்பட்ட போதும் நெஞ்சை நிமிர்த்தி எதிர்த்து நின்று, சமரங்கள் புரிந்தனர். இந்தியாவின் வேறு எந்த கட்சியும் இத்தகைய அடக்குமுறைகளுக்கு ஒருபோதும் ஆளானது இல்லை.

மூர்க்கத்தனமான பாசிசம் இந்தியாவை விழுங்கிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், எத்தனை துயரங்களையும் தாங்கிக் கொண்டு, 'நான் இருக்கிறேன் வந்து மோதிப் பார்' என்று நெஞ்சு நிமிர்த்துபவரே உண்மையான கம்யூனிஸ்ட் ஆவார்.

ஆண்களோடு பெண்களும் சரிநகர் சமானமாக செங்கொடி காக்க எழுந்து நின்று களமாடிய செம்மாந்த கட்சியின் பெருமைக்குரிய உறுப்பினர் நாம்.

எல்லாச் சதிகளையும் முறியடிப்போம்!

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 02

## எட்டு மணி நேர வேலை பறிப்பு: தமிழ்நாடு அரசின் மே தின பரிசு.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் 12.4.2023 அன்று தொழிற்சாலை சட்டத்தைத் திருத்தி மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

தொழிற்சாலை சட்டம் ஒரு மத்திய சட்டமாகும். அதன் “51, 52, 54, 55, 56அல்லது 58 ஆம் பிரிவுகளின் வகை முறைகள் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் அனைத்திலிருந்தும் அல்லது எவற்றிலிருந்தும் தொழிற்சாலை அல்லது தொழிற்சாலைகளின் குழு அல்லது வகை அல்லது விவரிப்பு முழுவதற்கும் அறிக்கையில் குறிப்பிடப்படலாகும் அத்தகைய காலத்திற்கு அல்லது காலங்களுக்கு விலக்களிக்கலாம்“ என்பதுதான் அந்த திருத்தமாகும்.

அதாவது மேற்சொன்ன பிரிவுகளில் சொல்லப்பட்டுள்ள எதனையும் முதலாளிகள் கடைபிடிக்க வேண்டியது இல்லை என்று மாநில அரசு விலக்கி வைக்கிறது.

எந்தெந்த தொழில்கள், எவ்வளவு காலத்திற்கு விலக்கு என்பதெல்லாம் இனி அதிகாரிகளின் உத்தரவாக வரும். அந்த விதிகளின் கீழ் இனிமேல் தொழிலாளர்கள் தமது உரிமையைக் கோர முடியாது.

இதனால் தொழிலாளர்களுக்கும் பெண் தொழிலாளர்களுக்கும் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கும் பெரும் நன்மை ஏற்படும் என்று மசோதா கூறுகிறது.

இந்தத் திருத்தத்தின்படி, இதுவரை இருந்த 8 மணி நேர வேலை, இனிமேல் ஓய்வு இடைவெளிகளை உள்ளடக்கிய கூடுதல் நேரம் மற்றும் நீட்டிக்கப்பட்ட நேரம் என மாற்றப்படும்.

இதன் பொருள் என்னவென்றால் காலையில் ஒரு மூன்று மணி நேரம், பிறகு இடைவெளி, மதியம் ஒரு மூன்று மணி நேரம், பிறகு இடைவெளி, இரவில் ஒரு இரண்டு மணி நேரம் என்று பிரித்து வேலை கொடுக்கலாம். எட்டு மணி நேரம் என்பது மாறாது. ஆனால் தொழிற்சாலைக்குள் 12 மணி நேரம் வரை தொழிலாளி இருந்தாக வேண்டும்.

தொழிலாளர்களுக்கு இது அதிக நன்மையை ஏற்படுத்தும் என்று அரசுக்கு யார் சொன்னது? முதலாளிகளும், முதலாளிகளின் சங்கங்களும் இப்படி கூறியதாக மசோதாவே சொல்கிறது. இது சரிதானா என தொழிலாளர்களிடமும், தொழிற்சங்கங்களிடமும் அரசு கேட்டிருக்க வேண்டாமா? ஒரு போதும் இதுபற்றிப் பேசப்படவில்லை. தொழிலாளர்களுக்கு நன்மை பெற்றுத் தருவதற்காகத்தான், முதலாளிகளின் சங்கம் தன்னிடம் பேசும் என்று நம்பும் அளவுக்கு அப்பாவியாகவா இந்த அரசு இருக்கிறது?!

இந்த மசோதாவை சட்டப்பேரவையில் விவாதிக்க விட்டிருந்தால், மாற்றுக்கருத்தை சொல்லவாவது வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால் தொழிலாளர் அமைச்சர் இதை முன்வைத்த உடனேயே குரல் வாக்கெடுப்பில் சில வினாடிகளில் இது நிறைவேற்றப்பட்டு விட்டது. 150 ஆண்டுகால உரிமைகளை பறிக்கும் தொழிலாளர் சட்டத் தொகுப்பை 40 வினாடிகளில் மோடி அரசு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது தான் இப்போது நினைவுக்கு வருகிறது.

அதை மசோதாவே ஒப்புக்கொள்கிறது. ஒன்றிய அரசு தொழிலாளர்களுக்கு விரோதமாக கொண்டு வந்துள்ள சட்டத் தொகுப்புகளில், தொழில், பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் பணி நிலைமைகள் சட்டத்தொகுப்பும் ஒன்றாகும். இதனை ஒன்றிய ஆளுங்கட்சியின் பிஎம்எஸ், தமிழ்நாடு ஆளும்கட்சியின் எல்பிஎப் ஆகிய சங்கங்கள் உட்பட அனைத்து தொழிற்சங்கங்களும் எதிர்க்கின்றன. தொழிலாளர்களின் தொடர் போராட்டத்தால் அவற்றை இன்னும் செயல்படுத்த முடியாமல் ஒன்றிய அரசு நிறுத்தி வைத்திருக்கிறது.

அப்படி நிறுத்தி வைத்திருப்பதால், அந்தச் சட்டங்களில் சொல்லப்பட்டு இருப்பவற்றை இப்போதே தமிழ்நாட்டில் அமுலாக்குவதற்காகவே இந்தச் சட்ட திருத்தம் என ஐயத்துக்கிடமில்லாமல் மசோதா தெளிவுபடுத்துகிறது. ஒன்றிய அரசு, கர்நாடகா, தமிழ்நாடு மாநில அரசுகளுக்கு கொடுத்த அழுத்தத்தினாலேயே இது அரங்கேறுகிறது.

பல்வேறு துறைகளில் பாராட்டத்தக்க சாதனைகள் செய்து வரும் இன்றைய தமிழக அரசு, தொழிலாளர் விஷயத்தில் மட்டும் தொடர்ந்து முதலாளிகள், கார்ப்பரேட்டுகள் சொற்படி நடந்து தொழிலாளர் உரிமைகளை பறிப்பதற்கு வழிவகை செய்து தருகிறது. பல்வேறு துறைகளில் தொழிலாளர்கள் கொதித்துப் போய் இருக்கிறார்கள் என்பது அரசின் கவனத்திற்கு சென்று சேர்ந்திருக்க வேண்டும். அதை அரசு அலட்சியம் செய்யக்கூடாது.

எட்டு மணி நேர வேலைக்காக நடத்தப்பட்ட போராட்டத்தின் நினைவாக மேதினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில், சென்னை கடற்கரையில்தான் சிந்தனை சிற்பி சிங்காரவேலர் முதல் முறையாக மேதினத்தை 1923ல் கொண்டாடினார். அதன் நூறாண்டு நிறைவு இந்த மே தினம். அதே கடற்கரையில் அமைந்திருக்கும் சட்டப்பேரவையில் 8 மணி நேர வேலையை அதிகரிக்கும் மசோதா, அவரை போற்றுபவர்களாலேயே நிறைவேற்றப்படுவது, பாதை மாறுகிறது என்பதன் அறிகுறி!

# தேசிய தகுதியை அளவிட சட்ட விதிகள் பொருத்தமற்றவை!


எஸ். சுதாகர் ரெட்டி

தேர்தல் ஆணையம் தருகிற ‘தேசிய கட்சி’ எனும் தகுதி, வெறும் சட்ட விதிகளால் அளக்கப்படுகிற ஒன்றுதான். ஒரு தேசிய கட்சி என்பது நாடு முழுவதும் இயக்கங்களை வழிநடத்தும் செயல் திறன் மிக்க கிளைகளைக் கொண்டதாகும். சிக்கிம், நாகாலாந்து தவிர அனைத்து மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில குழுக்களை கொண்டு இயங்குகிறது. அதன் உறுப்பினர்கள் நாடு முழுவதும் தீவிர இயக்கங்களை முன்னெடுத்து வருகின்றனர். வேறு கட்சிகளோடு ஒப்பிட முடியாத வகையில், நாடு முழுவதும் வலை பின்னல் போன்ற அமைப்புகளைக் கொண்டது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. இதன் தேசிய தகுதியை அளவிடுவதற்கு இந்திய தேர்தல் ஆணையத்தின் சட்ட விதிகள் பொருத்தமானவை அல்ல.

நாடாளுமன்ற மக்களவையில் ஒரு உறுப்பினர் கூட இல்லாத கட்சிகளுக்கும், ஒரு மாநிலத்தில் பெரிய கட்சியாக இருந்து பக்கத்து மாநிலங்களில் சில அமைப்புகளை உருவாக்கி வைத்திருக்கிற கட்சிகளுக்கும் தேர்தல் ஆணையம் தேசிய கட்சி என்ற அங்கீகாரத்தை தந்துள்ளது. அதன் சட்ட விதிகளுக்கு தேவைப்படுவது அவ்வளவுதான்.

அண்மைய தேர்தல்களில், பின்னடைவுகள் இருந்தபோதிலும், தற்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு, நாடாளுமன்றத்தின் மக்களவை மற்றும் மாநிலங்களவை இரண்டிலும் உறுப்பினர்கள் உள்ளனர். மேலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மூன்று மாநிலங்களில் ஆளும் கூட்டணியின் ஒரு பகுதியாக உள்ளது.

26 மாநிலங்கள் மற்றும் 9 யூனியன் பிரதேசங்களில் பரவி செயல்படும் இந்தக் கட்சி, சட்டமன்றங்களில் 21 உறுப்பினர்களையும், தவிர சட்ட மேலவை உறுப்பினர்களையும், உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளையும் கொண்டுள்ளது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்காக அர்ப்பணிப்போடு உழைக்கும் 6.5 லட்சம் செயல் துடிப்புள்ள உறுப்பினர்கள் உள்ளனர். மற்றும் அதன் வர்க்க வெகுஜன அமைப்புகளில் 2 கோடிக்கும் அதிகமான அனுதாபிகள் உள்ளனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஒரு பெருமைமிக்க வரலாற்றைக் கொண்டது. மக்களை வாழ்விப்பதற்கான அறிவியல் பூர்வமான கொள்கை கொண்டது. அரசியல் செயல்பாட்டில் நாடாளுமன்ற ஜனநாயகமும் ஒரு முக்கியமான அங்கம் தான். என்றாலும், கட்சி அனைத்து வடிவங்களிலும் போராட்டங்களை அனைத்து வடிவங்களிலும் தனது போராட்டங்களை புதிய வீரியத்துடன் தொடரும். கடந்த காலத்தில் இதைவிட கடுமையான நிலைமைகளில் அது தன் செயல்பாட்டால் மீண்டு எழுந்து இருக்கிறது. வெள்ளையர் ஆட்சி காலத்தில், அது தடை செய்யப்பட்டிருந்த போதும், அது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அடித்தளத்தையே அசைத்தது.

இந்தியாவின் முதல் பொதுத் தேர்தலில் சிபிஐ வேட்பாளர்கள் ரவி நாராயண ரெட்டி, சுங்கம் அச்சலு ஆகியோர் சிறைக்குள் இருந்து மக்களவைக்கு போட்டியிட்டு இந்தியாவிலேயே அதிக பெரும்பான்மை வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றனர்.

உலகிலேயே ஜனநாயக ரீதியில் வாக்குச்சீட்டுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அரசாங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அரசுதான். கேரள மாநிலத்தில் அதன் அரசு, பதவி நீக்கம் செய்யப்பட்ட போதிலும், நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுத்துறையை வலுப்படுத்துவதன் மூலம் இந்தியாவின் சமூக அடித்தளத்தையே மாற்றியமைத்த பெருமை கொண்டது.

இந்திய அரசியலில் சாதி மற்றும் வகுப்புவாதக் குழுக்கள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியபோது, நமது மதச்சார்பற்ற அரசியலமைப்பைக் காப்பாற்ற, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அந்த தீய சக்திகளுடன் நேருக்கு நேர் மோதி போராடியது. கடினமான சூழ்நிலையிலும் கூட 8 மணி நேர வேலை நாள் மற்றும் வாரந்தோறும் விடுமுறை, ஊதியத்துடன் கூடிய விடுப்பு போன்றவற்றை அடைய உறுதிமிக்க போராட்டங்களை நமது தோழர்கள் வழி நடத்தி வென்றெடுத்தனர்.

உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி, ஒரு சர்வதேசக் கட்சியே ஆகும். இது முதலில் துவக்கப்பட்ட இந்தியாவுக்கான கம்யூனிஸ்ட் கட்சி.

பிறந்த குடும்பத்தின் பொருளாதார நிலையை அடிப்படையாகக் கொண்டு, எந்தவிதமான கல்வியை விலை கொடுத்து வாங்க முடியும், உடல் நலம் காக்கும் மருத்துவத்திற்கு எவ்வளவு பணம் செலவழிக்க முடியும், மொத்தத்தில் எவ்வளவு காலம் ஒருவர் உயிரோடு இருக்க முடியும் என நிர்ணயிக்கப்படும் இந்த தேசத்தில்,

ஒவ்வொரு இந்தியனுக்கும் ஒரு சிறந்த தேசத்தை உருவாக்க தொடர்ந்து பாடுபடுவதன் மூலம் கட்சி மீண்டும் எழுச்சி பெறும்.

இந்துத்துவா சக்திகளை எதிர்த்துப் போராடி, மதச்சார்பின்மையை, தேசத்தின் அரசியலமைப்பு சாசனத்தை, ஜனநாயகக் கட்டமைப்பைக் காப்பாற்றும் வரலாற்றுப் பொறுப்பு நமக்கு உள்ளது.

## உ.பி.யில் 2 பசுக்களை நடுரோட்டில் வெட்டிக் கொன்று, பழியை இஸ்லாமியர்கள் மீது போட்ட இந்து மகா சபை!

உத்தரப் பிரதேசத்தில் ராம நவமியின் போது, பசுக்களைக் கொன்றவர்கள் ‘இந்து மகா சபை’ உறுப்பினர்கள்தானே தவிர, இஸ்லாமியர்கள் அல்ல என்ற உண்மை வெளிச்சத்திற்கு வந்துள்ளது. மதக்கலவரத்தை ஏற்படுத்தும் திட்டத்துடன், தாங்களே பசுக்களைக் கொன்று, பழியை இஸ்லாமிய இளைஞர்கள் மீது போட்டி ருப்பதாக ‘இந்து மகா சபை’யினர் போலீ சாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளனர். முன்னதாக, இந்த விவகாரத்தில் இஸ்லா மிய இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறை யில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், வெளி யாகியிருக்கும் இந்த உண்மை, அனைத்துத் தரப்பினர் மத்தியிலும் அதிர்ச்சியை ஏற் படுத்தியுள்ளது.

கடந்த மார்ச் 30 ராம நவமியையொட்டி, ‘ராமநவமி’ கொண்டாட்டம் என்ற பெயரில் சங்பரிவார அமைப்புகள் ஊர்வலங்களை நடத்தினர். இஸ்லாமியர்களின் வழிபாட்டுத் தலங் கள், குடியிருப்புகள் இருக்கும் பகுதிகளை தேர்ந்தெடுத்து, இந்த ஊர்வலங்கள் மூலம் ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட னர். இதில் பல்வேறு இடங்களில் வன்முறை வெடித்தது.

இந்தச் சூழலில்தான், உத்தரப் பிரதேச மாநிலம் ஆக்ராவில் உள்ளகவுதம் நகர் பகுதியில் ராமநவமியின் போது 2 பசுக்கள் நடு ரோட்டில் மர்மநபர்களால் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டன. இது, அப்பகுதி மட்டுமல்லாமல் உ.பி. முழுவதும் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதுதொடர் பாக, ‘இந்து மகா சபை’ என்ற அமைப்பின் ஜிதேந்திர குஷ்வாஹா, முஸ்லிம் இளை ஞர்கள் மீது புகார் அளித்தார்.

போலீசாரும் முகமது ரிஸ்வான், முகமது நக்கீம் மற்றும் முகமது ஷானு மற்றும் இம்ரான் குரேஷி ஆகிய நான்கு பேர் மீது ஆக்ரா போலீசார் வழக்குப்பதிவு செய்து, அவர்களைக் கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து, போலீசார் அவர் களைப் பிடித்து விசாரித்ததில், ‘தாங்கள்தான் பசுக்களை கொன்றோம்’ என அவர்கள் ஒப்புக்கொண்டனர். இந்து முஸ்லிம்கள் இடையே கலவரத்தை உருவாக்குவதற்காக அவர்கள் இப்படி செய்ததும் போலீஸ் விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து, ‘இந்து மகா சபை’ நிர்வாகிகள் 2 பேரை போலீசார் தற்போது கைது செய்துள்ளனர். பசுக்களைக் கொல்ல அவர்கள் பயன்படுத்திய வாளை யும் போலீசார் கைப்பற்றியுள்ளனர். மேலும், தலைமறைவான 7 பேரையும் போலீசார் தேடி வருகின்றனர்.

பசுக்களை கொன்று மதக்கலவரத்தை ஏற்படுத்தும் இந்த திட்டத்தின் முக்கியச் சதி காரராக சஞ்சய் ஜாட் கண்டறியப்பட்டுள்ளார். இந்து மகா சபையின் தேசிய செய்தித் தொடர் பாளரான இவர், மிரட்டிப் பணம் பறித்த வழக் கில் தற்போதுதான் ஜாமீனில் வெளியே வந்துள்ளார்.

இவரும் இவரது ஆதரவா ளர்களும் மாட்டிறைச்சி கொண்டு செல்லும் வாகனங்களை தடுத்து நிறுத்தி அவர்களிடம் பணம் பறிப்பதையே ஒரு தொழிலாகவே செய் ததாக போலீசார் தெரிவிக்கின்றனர்.



த.லெனின்

**குடிமைப் பணி மாணவர்களிடையே கடந்த ஏப்ரல் 6ஆம் தேதி பேசிய தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி நீண்ட நாட்களாக கிடப்பில் வைக்கப்பட்டுள்ள மசோதாக்கள் நிராகரிக்கப்பட்டதாகவே அர்த்தம். அலங்காரத்துக்காகவே அவை நிறுத்தி வைப்பு என்று சொல்கிறோம் என திருவாய் மலர்ந்துள்ளார்!**



# அத்துமீறலே ஆளுநர் ஆர்.என்.ரவியா?

ஆன்லைன் ரம்பி நடத்தியவர்கள் தங்களை நேரில் சந்தித்தனர். பணம் கை மாறியதாகப் பேச்சு எழுந்தது. இப்போது ஸ்டெர்லைட் நிறுவனத்தை கண்மூடித்தனமாக ஆதரிக்கிறீர்கள். நீங்கள் பணம் வாங்கி விட்டீர்களோ என்ற சந்தேகம் எழுகிறது.

அரசமைப்புச் சட்டப் பொறுப்பு வகிக்கும் ஒரு ஆளுநர் இப்படி தொடர்ந்து ஆணவத்தின் உச்சமாக பேசுவது கண்டனத்திற்குரியது!

தமிழக சட்டமன்றம் நிறைவேற்றிய அரசின் மசோதாக்களுக்கு ஆளுநர் உடனடியாக ஒப்புதல் தர ஒரு கால நிர்ணயம் அவசியம் என வலியுறுத்தி ஒன்றிய அரசுக்கும், குடியரசுத் தலைவருக்கும் ஒரு தீர்மானத்தை ஒருமனதாக இயற்றி அனுப்பி இருக்கிறது தமிழ்நாடு அரசு.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் நிறுவனத்துக்கு எதிரான போராட்டம் 100% வெளிநாட்டு நிதி உதவியுடன் நடைபெற்ற ஒன்று என்று அவர் பேசி இருப்பது ஆளுநரின் அறியாமையின் உச்சம்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டம் கடந்த 2018 பிப்ரவரி 13ஆம் தேதி குமரா ரெட்டியார்புரத்தில் தொடங்கி மே 22 ஆம் நாள் நூறாவது நாள் போராட்டத்தைக் கண்டது. அன்றுதான் துப்பாக்கிச் சூடும் நடந்து கொடூரமான முறையில் 13 பேர் கொல்லப்பட்டதும் நிகழ்ந்தது.

அப்போது அவர் தனிநாடு கேட்டு போராடிவரும் நாகாலாந்து போராளிக் குழுக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்த காலம்.

தூத்துக்குடியில் இப் போராட்டங்கள் நடைபெற்ற போது, அவர் நாகாலாந்து இந்தியாவின் ஒரு பகுதி அல்ல என்றும், தனி நாடு கேட்டும், போராடும் குழுக்களோடு தான் அவர் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தி வந்தார். அப்படி என்றால் இந்த குழுக்களுக்கு எந்த நாடு நிதி உதவி செய்தது? அப்படி நிதி உதவி பெற்ற குழுக்களோடு இவர் ஏன் பேச வேண்டும்? என்பதெல்லாம் கேள்வியாக வருகிறது.

தூத்துக்குடி போராட்டம் குறித்து 243 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அதை ஒரே வழக்காக சிபிஐ விசாரிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் வழிகாட்டியது. எந்த இடத்திலும் வெளிநாட்டு நிதி உதவி பெற்ற போராட்டம் என அது பதிவு செய்யவில்லை.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு குறித்து விசாரித்த அருணா ஜெகதீசன் ஆணையமும், வெளிநாட்டு நிதி குறித்து எதுவும் பேசாத நிலையில் ஆளுநர் ரவி பிதற்றுவது ஏன்?

கடந்த 05.04.2023 அன்று மாநிலங்களவையில் ஸ்டெர்லைட்டிற்கு எதிரான போராட்டத்திற்கு பின்னணியில் தி அதர் மீடியா என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் பங்களிப்பு இருக்கிறதா? என்ற கேள்விக்கு பதிலாக, உள்துறை அமைச்சகம் அளித்த பதிலில் கடந்த 2018லிருந்து ஐந்து ஆண்டுகளாக இதை விசாரித்து வருகிறோம். 2018 வரை எந்த நிதியும் வரவில்லை.

அடுத்த மூன்று ஆண்டுகளில் தி அதர் மீடியாநிறுவனத்திற்கு பல்வேறு பன்பாட்டிற்கு ரூ. 3.54 கோடி நிதி வந்ததாகவும், இதில் ரூ.2.79 கோடி செலவழிக்கப்பட்டதாகவும் கூறியிருக்கிறதே தவிர வேறு எதையும் கூறவில்லை. இதற்குத்தான் ஆளுநர் கதை கட்டி விட்டிருக்கிறார்.

அப்படி ஒரு வேளை வெளிநாட்டிலிருந்து நிதி வாங்கியிருந்தால் ஒன்றிய அரசின் எப்.சி.ஆர்.ஏ. உரிமத்தை ஏன் ரத்து செய்யவில்லை உள்துறை அமைச்சகம் என்ற கேள்வியும் வரும்.

ஸ்டெர்லைட் நிறுவனம் அது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே அதற்கு எதிரான போராட்டங்களும் தொடங்கிவிட்டன. 1996 இல் தேசிய சூழல் அமைப்பும், 1997ல் மதிமுக வின் பொதுச் செயலாளர் வைகோவும் நீதிமன்றத்தை நாடினர். அதன் பின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அப்போதைய மாவட்டச் செயலாளர் எம். அப்பாதுரையும், அதுபோலவே சிஐடியூ வின் அப்போதைய மாவட்டச் செயலாளர் கனகராஜும் இதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர்.

இந்தவழக்கின் தீர்ப்பாகத்தான் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எலப்பி தர்மா ராவ் மற்றும் பால் வசந்தகுமார் அடங்கிய அமர்வு ஆலையை மூட வேண்டும் என கடந்த 2010ல் உத்தரவிட்டது. இடைப்பட்ட காலத்தில் நடந்த விதிமீறல்கள், விபத்துக்கள், ஆடு, மாடுகள் கொல்லப்பட்டவை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு, அவர்கள் இத்தீர்ப்பை வழங்கினர்.

அப்போது நடைபெற்ற போராட்டங்களில் மக்கள் பெருமளவு பங்கேற்கவில்லை என்பதே உண்மை! ஆனால், அதற்குப் பின்பு ஸ்டெர்லைட் ஆலை நிறுவனத்தின் தொடர் அத்துமீறல்கள் உள்ளூர் மக்களை வெறுப்பு கொள்ள செய்தன.

பின்புதான் மக்கள் அந்நிறுவனத்தை எதிர்த்து போராட தலைப்பட்டனர். நீதிபதிகள் அந்நிய நாட்டிடம் கூலி பெற்றுதான் இதனை தடை செய்தார்களா? அரசமைப்புச் சாசன தலைமை பொறுப்பில் இருக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவி இதற்கு பதில் சொல்வாரா?

இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தடைபெற்ற பிறகு, ஸ்டெர்லைட் நிறுவனத்தின் அத்துமீறல்களும், அடாவடித்தனங்களும் மிகவும் அதிகரித்தன.

நிலம், நீர், காற்று மாசுபடுவதைப் பற்றி இந்நிறுவனம் கிஞ்சித்தும் கவலை கொள்ளவில்லை. இந்நிறுவனத்தில் உருவான தாமிரக் கழிவுகள் எந்தக் கருணையும் இல்லாமல் நீரோடைகளின் அருகில் கொட்டி வைத்த கொடூரத்தைச் செய்தது.

மதுரை, தூத்துக்குடி நான்கு வழிச் சாலையில் அதைப் பயன்படுத்தலாம் என்று யோசித்த போதுகூட சில மீட்டருக்கு அப்பால், கொட்ட சுற்றுச் சூழல் விதிகள் அனுமதிக்கவில்லை. இந்தப் பின்னணியில்தான் உள்ளூர் நபர்கள் பார்த்துவந்த ஒப்பந்தப் பணிகளையும், பணியாளர்களையும் நிறுத்திவிட்டு எல்–டி நிறுவனத்திடம் அப்பணிகளை ஒப்படைத்தது ஸ்டெர்லைட் நிறுவனம்.

இதற்கிடையில்தான் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி நான்கு மனுதாரர்கள் முன்பாக நீரி (ழிணிணிஸிமி) நிபுணர்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்று 2011 இல் தீர்ப்பளிக்கப்பட்டது.

நிலத்தடி நீர், குளத்தின் நீர் மாசுபட்டது, இரவு நேரங்களில் அருகில் உள்ள கிராமங்களில் தூங்குவோர், குழந்தைகள் முதலானோர் ஆலையால் வெளியிடப்பட்ட நச்சு வாயுக்களால் மூச்சு திணறி எழுவதும், பாதிப்படைவதும் தொடர்ந்தது.

இதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் ஆலை விரிவாக்கத்திற்கு அன்றைய அரசு அனுமதி அளித்தது. இதுதான் அந்தப் போராட்டம் பெரும் வீரியத்தோடு எழுவதற்கு உடனடி காரணமாக அமைந்ததுதான். பிறகுதான் 100வது நாள் போராட்டத்தின்போது பல்வேறு அமைப்புகள் கலந்து கொண்டன. இதில் கலந்துகொண்ட எந்த அமைப்பு அமைப்பாவது வெளிநாட்டிடம் பணம் பெற்றிருந்தால் அதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கட்டும்!

நம்முடைய கேள்வி பா.ஜ.க.வின் அன்றைய தலைவராக பொன். ராதாகிருஷ்ணன் இதே ஸ்டெர்லைட் ஆலையை இழுத்து மூட வேண்டும் என்று அன்று போராடினாரே, அவர் எந்த நாட்டில் நிதி பெற்று அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டார் என்பதையும் விளக்கினால் மிக்க நன்று!

இன்னும் சில கூடுதல் தகவல்கள் இருக்கின்றன. கலால் வரி ரூ.746 கோடி அளவிற்கு ஏமாற்றிய குற்றத்திற்காக கடந்த 2010 ஆம் ஆண்டு ஸ்டெர்லைட் நிறுவனத்தின் துணைத் தலைவர் வரதராஜன் கைது செய்யப்பட்டார். பொதுவாக தங்க கடத்தலை பற்றி நாம் அறிவோம். ஆனால் தங்கம் என்று அறிவிப்பு செய்து விட்டு அதைவிட விலை உயர்ந்த பிளாட்டினம், பல்லாடியம் போன்ற உலோகங்களை ஸ்டெர்லைட் நிறுவனம் ஒன்றிய அரசையும், மக்களையும் ஏமாற்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தது. அந்தப் பணம் எங்கே போனது? ஏன் அதைப்பற்றி நீங்களும், உங்கள் எஜமானர்களும், சங்க பரிவாரக் கும்பலும் பேச மறுக்கின்றன!

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வரதராஜனுக்கு ரூ.100 கோடி உத்திரவாதம் கேட்டதையெல்லாம் வசதியாக மறந்துவிட்டு வாய்க்கு வந்ததை பேசுவது ஆளுநருக்கு அழகா?

2018ல் ஸ்டெர்லைட் ஆலை மாசுக்கட்டுப்பாட்டு வாரிய விதிகளை மீறி விட்டது என்று கூறி மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மூட உத்தரவிட்டதும்,

2013 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் நீரை, நிலத்தையும், காற்றையும் மாசுபடுத்தி விட்டது ஸ்டெர்லைட் என்று ரூ.100 கோடி அபராதம் விதித்ததும், வெளிநாட்டு பணத்தின் விளைவா திரு. ஆர்.எஸ். எஸ்.ரவி?

ஆன்லைன் ரம்பி நடத்தியவர்கள் தங்களை நேரில் சந்தித்தனர். பணம் கை மாறியதாகப் பேச்சு எழுந்தது. இப்போது ஸ்டெர்லைட் நிறுவனத்தை கண்மூடித்தனமாக ஆதரிக்கிறீர்கள். நீங்கள் பணம் வாங்கி விட்டீர்களோ என்ற சந்தேகம் எழுகிறது.

இந்தியாவின் தேவைக்கு 40% தாமிரத்தை இந்த ஸ்டெர்லைட் ஆலைதான் உற்பத்தி செய்தது; இப்போது அது நின்று விட்டது என்று கண்ணீர் விட்டு இருக்கிறார் ஆர்.என்.ரவி. ஆனால் உண்மை என்னவென்றால் அப்போதும் கூட ஸ்டெர்லைட் உற்பத்தி செய்த பெரும் பகுதி தாமிரம் வெளிநாடுகளுக்குத்தான் ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதையும் மூடிமறைத்து விட்டார்.

தொடர்புக்கு: 94444 81703

## ஒரு புதிய அத்தியாயம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட்டும் இணைந்த பொதுக்கூட்டம் ஏப்ரல் 9 ஆம் தேதி ஹைதராபாத்தில் நடைபெற்றது.

இரு கட்சிகளின் பொதுச் செயலாளர்களான டி.ராஜா மற்றும் சீதாராம் யெச்சூரி ஆகியோரும், மாநிலம் முதல் மண்டல நிலை வரையிலான தலைவர்களும் சேர்த்து பங்கேற்கும் முதல் சந்திப்பு இதுவாகும்.

ஆர்எஸ்எஸ் – பிஜேபியை சித்தாந்த ரீதியாக கம்யூனிஸ்டுகளால் மட்டுமே எதிர்த்துப் போராட முடியும். ஆர்எஸ்எஸ், இந்தியாவை இந்து ராஷ்டிராவாக மாற்ற எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. வரும் தேர்தலில் பாஜகவை தோற்கடிக்காவிட்டால், நமது அரசியலமைப்பு, ஜனநாயகம், மதச்சார்பின்மை, நாட்டையும் பாதுகாக்க முடியாது.

2024 தேர்தலில் தோற்கடிக்கும் பொறுப்பு இடதுசாரி கட்சிகளுக்கும், மதச்சார்பற்ற, ஜனநாயக, முற்போக்கு கட்சிகளுக்கும் உள்ளது. பிற்போக்கு அரசியலுக்கு எதிராகப் போராட, சிபிஐ மற்றும் சிபிஎம் ஒற்றுமை என்பது காலத்தின் தேவை. இந்தத் திசையில், சிபிஐ மற்றும் சிபிஎம் இணைந்து நடத்திய இந்தக் கூட்டம் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறக்கிறது.

பல்லாயிரம் பேர் பங்கேற்ற இந்த கூட்டம், சிபிஐ மாநிலச் செயலாளர் குணம்நேனி சாம்பசிவ ராவ், சிபிஎம் மாநிலச் செயலாளர் தம்மினேனி வீரபத்ரம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் சிபிஐயின் தேசிய செயலாளர் டாக்டர் கே.நாராயணா, சிபிஎம் அரசியல் கட்சி உறுப்பினர் பி.வி.ராகவுலு, சிபிஐயின் மத்திய செயற்குழு உறுப்பினர் சாடா வெங்கட ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

(விரிவான செய்தி அடுத்த இதழில்)



# கோயபல்ஸ் வேலை செய்ய போலி வலைத்தளங்கள்



வ.மணிமாறன்

கம்ப்யூட்டர், ஸ்மார்ட் போன் போன்ற எந்த சாதனத்தையும் நெட்வொர்க்கில் இணைக்கும் போது, அவை ஒவ்வொன்றையும் அடையாளம் காண, தனி எண்கள் ஒதுக்கப்படுகின்றன. இது இணைய நெறிமுறை (இன்டர்நெட் புரட்டோகால்) முகவரி அல்லது ஐ.பி.முகவரி எனப்படும்.

இதேபோன்று வலைத்தளங்களுக்கு (வெப்சைட்) நாம் பெயர் வைத்திருந்தாலும், நெட்வொர்க்கில் அவற்றை இணைக்கும் போது, அதற்கும் தனி எண் வழங்கப்படும். எடுத்துக்காட்டாக, நமக்கு நன்கு அறிமுகமான கூகுள் வெப்சைட். இதன் ஐ.பி. முகவரி: 172.217.5.46

## அம்பலம்


பாஜக ஒன்றிய ஆட்சி அதிகாரத்தில் இருப்பதைப் பயன்படுத்தி, இப்படித் தனியாக ஐ.பி. முகவரி எதுவும் இல்லாமல், ஒரே ஐ.பி. முகவரியில் ஏராளமான வலைத்தளங்களை (வெப்சைட்டுகள்) வைத்திருந்தது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்த வலைத்தளங்களுடன் முகநூல் பக்கங்கள் இணைக்கப்பட்டு போலி நிறுவனங்களாக செயல்பட்டு வந்திருப்பதும் அம்பலமாகி உள்ளது.

செய்திகளின் உண்மைத் தன்மை குறித்து ஆய்வு செய்து வரும் ‘ஆல்ட் நியூஸ்’ இது குறித்து ஆய்வு மேற்கொண்டதில் பல அதிர்ச்சித் தகவல்கள் வெளிவந்துள்ளன. 13.232.63.153 என்ற ஒரே ஐ.பி. முகவரியில் 23 வலைத்தளங்கள் இயங்கி வருவதும்; இந்த வலைதளங்களின் வடிவமைப்புகள் ஒரே மாதிரியாக இருப்பதும் தெரிய வந்துள்ளது.

## போலி விளம்பரம்

இந்தப் போலி வலைதளங்களுடன் இணைக்கப்பட்ட முகநூல் பக்கங்கள் மூலம் எதிர்க்கட்சிகளை தாக்குவதற்கும் பொய்யான கருத்துக்களைப் பரப்புவதற்கும் பிப்ரவரி 2019 முதல் மார்ச் 2023 வரை 3.47 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.










இவற்றில் விளம்பரம் என பணம் கொடுத்து 48,930 செய்திகள் வெளியாகி உள்ளன. விளம்பரமாக இவை பெறப்பட்டது என பேஸ்புக் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

போலி வலைதளங்களுடன் இணைக்கப்பட்டுள்ள இந்த முகநூல் பக்கங்கள், எதிர்க்கட்சிகளையும் அதன் தலைவர்களையும் குறி வைத்துத்து தாக்கும் செய்திகளையே வெளியிட்டு வந்துள்ளன.

அண்மையில், “அமைதிக்கான நோபல் பரிசுப் போட்டியாளர்களில் பிரதமர் மோடி முதலிடத்தில் இருக்கிறார்” என நார்வே நோபல் தேர்வுக்குழு தெரிவித்திருப்பதாக இந்த முகநூல் பக்கங்களின் மூலம் பரப்பப்பட்டன. இதனை உண்மை என நம்பி செய்தித்தாள்களும் காட்சி ஊடகங்களும் செய்தியாக வெளியிட்டன.

செய்திகளின் உண்மைத் தன்மையை ஆய்வு செய்துவரும் அமைப்புகள், இதனைக் கண்டுபிடித்து அம்பலப்படுத்திய பின்னர் தான், பொய்யான தகவல் இது என்பது தெரியவந்தது. பொய்ப் பரப்புரையை மேற்கொண்ட பா.ஜ.க.வோ வழக்கம் போல தங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என ஏமாற்றுகிறது.

பால்ட் ஆத்மி கட்சி என்ற பெயரில் உள்ள முகநூல் பக்கம், அரவிந்த் கெஜ்ரிவால் மீதும், ஆம்ஆத்மி கட்சி மீதும் அவதூறு பரப்புவதை மட்டுமே வேலையாக செய்து வந்துள்ளது. இந்த முகநூல் பக்கத்திற்கு மட்டும் விளம்பரம் செய்ய 43 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இந்த முகநூல் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ள இமெயில் மற்றும் செல்போன் எண், பா.ஜ.க.தான் இவற்றை இயக்கி வந்திருக்கிறது என்பதை உறுதி செய்கிறது.

பாஜகவின் இந்த பரப்புரைத் தொழிற்சாலை, அவதூறுகளைப் பொழிந்து வெகு மக்களின் ஏற்பைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு பணியாற்றி வருகிறது. 23 போலி வலைத்தளங்களும், அவற்றுடன் இணைக்கப்பட்ட முகநூல் பக்கங்களும் ஒவ்வொரு கட்சியை, ஒவ்வொரு தலைவரை குறிவைத்து அவதூறுகளைப் பரப்பி வந்திருப்பதே இதற்குச் சான்றாகும்.

அரசியல் கருத்துக்களைப் பரப்புவது, வேறுபட்ட கருத்துக்களை விமர்சிப்பது என்பதற்கு மாறாக, அவதூறுகளாலும், பொய்கள் நிரம்பிய புனைவுகளாலும் கட்டமைக்கப்படும் பிம்பம் மூலம் வெகுமக்களின் ஏற்பைப் பெறுவது பாசிஸ்டுகளின் இயல்பு.

ஹிட்லருக்கு இதுபோன்று பிம்பக் கட்டமைப்பு செய்ய கோயபல்ஸ்கள் தேவைப்பட்டனர். மோடிக்கும் சங்கிகளுக்கும் கோயபல்ஸ்கள் செய்ய வேண்டிய வேலையை வலைத்தளங்களும் முகநூல் பக்கங்களும் செய்து வருகின்றன.

இதனை எதிர்கொள்ள என்ன செய்யப் போகிறோம்?

சிந்திப்போம்! செயல்படுவோம்!!

தொடர்புக்கு: 95000 01224

# பாடத்திட்டத்தில் ஒன்றிய அரசின் வரலாற்றுத் திரிபு

**“இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக உறுதிமிக்க தொடர் முயற்சிகளை மேற்கொண்ட மகாத்மா காந்தியின் போக்கு, இந்து தீவிரவாதிகளுக்கு கடும் அதிருப்தியினை ஏற்படுத்தியது. இதன் விளைவாக காந்திஜியை கொலை செய்வதற்கு பலமுறை அவர்கள் முயற்சித்தனர்”**

*“காந்திஜி படுகொலை செய்யப்பட்டது நாட்டில் நிலவிய வகுப்புவாத சூழலில், மின்னலைப் போன்ற தாக்கத்தை ஏற்படுத்தியது.”*

*“அன்று ஆட்சியிலிருந்த மத்திய அரசு மத வெறுப்புணர்வை பரப்பி வந்த அமைப்புகளை ஒடுக்கும் நடவடிக்கைகளை எடுத்தது. ஆர். எஸ். எஸ். போன்ற அமைப்புகள் சில காலத்திற்கு தடை செய்யப்பட்டன. “*

NCERT *என்ற ஒன்றிய அரசின் பாடத்திட்டக் குழு, 12 ஆம் வகுப்பு அரசியல் படத்திட்டத்தில் இடம்பெற்றிருந்த மேற்கண்ட பகுதிகளை நீக்கி 2023–24 ஆம் ஆண்டிற்கான பாடப்புத்தகத்தை வெளியிட்டுள்ளது.*

*இவையல்லாது, 3000 இசுலாமிய மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளான 2002 குஜராத் கலவரங்கள் பற்றி, இரண்டு பக்கங்களின் தரப்பட்டிருந்த செய்தி இரண்டு வரிகளாக சுருக்கப்பட்டிருக்கிறது.*

*மேலும் மிக மோசமாக, 400 ஆண்டுகால மொகலாயர்ஆட்சி பற்றிய முழு அத்தியாயமும் நீக்கப்பட்டிருக்கிறது. நக்சலைட் இயக்கம் பற்றியும் , 1975 அவசர நிலை பற்றியும் இருந்த பகுதிகளும் நீக்கப்பட்டிருக்கின்றன.*



ப. பா. ரமணி

*முன்னர் இந்தப் பாடத்திட்டங்களை தயாரிப்பதில் ஈடுபட்ட அறிஞர்களுடன் எவ்வித காலந்தாலோசனையும் செய்யப்படவில்லை. படத்திட்டங்களை சீரமைக்கிறோம் என்கிற பெயரால் இத்தகைய வரலாற்று நிகழ்வுகளை இருட்டடிப்பு செய்யும் சதி நடைபெற்றுள்ளது.*

*ஆர். எஸ். எஸ். அமைப்பின் இந்துத்வா கோட்பாட்டின் அடிப்படையில் இந்திய வரலாற்றை திருத்தி எழுத வேண்டும் என்ற நோக்கத்தில், மறைந்த வாஜ்பாயி பிரதமராக இருந்த போதிருந்தே இத்தகைய வேலைகள் நடத்திருப்பதை அறிவோம்.*

*தற்போது தனிப்பெரும்பான்மையடன் ஆட்சியிலிருக்கும் பா. ஜ. க. அந்த வாய்ப்பை பயன்படுத்தமலிருக்குமா? அதை திட்டமிட்டு செய்துவிட்டு,* NCERT *யின் இயக்குனர் டி. பி. சக்லானி வெகு சாமார்த்தியமாக “கவனக்குறைவு” என்று முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்கிறார்.*

*ஒன்றிய அரசின் பெரும்பான்மை மதம் சார்ந்த இந்த வகை போக்கினை உலகப் புகழ்பெற்ற வரலாற்று அறிஞர்கள் உள்ளிட்ட 250 ஆளுமைகள் வன்மையாக கண்டித்துள்ளனர். ஒற்றை கலாச்சார தேசியம் என்பது நாட்டின் தொன்று தொட்டு நிலவி வரும் பன்மைத்துவ மரபிறக்கு முரணானது என்பதையும் சுட்டிக்காடடியுள்ளனர்.*

*வரலாறு, சமூக அறிவியல், கலாச்சாரம் குறித்த பாடத்திட்டங்கள் சரியான ஆதாரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும்; புதிய தரவுகள் கிடைக்கும் போது அவை மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படலாம்.*

*ஆனால் குறுகிய மதவெறிப் பார்வையுடன் வரலாற்றை திருத்துவது உண்மைகளை இருட்டடிப்பு செய்வது அறிவு நேர்மையற்ற செயல் என்று,* THE HINDU, TIMES OF INDIA *ஆகிய ஆங்கில நாளேடுகள் தலையங்கம் வாயிலாக அறிவுறுத்தியுள்ளதை பா.ஜ.க. அரசு கண்டு கொள்ளவில்லையா?*

*“வெறுப்பரசியல் என்ற விஷசுழற்சியில் நாடு சிக்கித் தவிக்கிறது. அரசியலிலிருந்து மதத்தைப் பிரிப்பதே இதற்குத தீர்வாக இருக்கும். அதைச் செய்தால் இந்தக் கேடு முடிவுக்கு வரும் “ உச்ச நீதிமன்ற நீதிபதி கே. எம். ஜோசப் இவ்வாறு பேசியுள்ளதை ஒன்றிய அரசு கவனிக்குமா?*

*“சக்திவாய்ந்த வல்லரசாக நாம் வளர வேண்டும் என்பதற்கு முன் சட்டத்தின் ஆட்சியை மதிக்க வேண்டாமா? வெறுப்பரசியல் மனித மாண்புகளை அழித்து வருகிறது.”*

*“இந்தியாவை தங்களது தாய்நாடாக ஏற்றுக்கொண்டுள்ள கோடிக்கணக்கான முஸ்லிம்களை நாடற்றவர்களாக” அடையாளப்படுத்தி*

*“பாகிஸ்தானுக்கு போங்கள்” போன்று இந்திய மக்களை மத அடிப்படையில் பிளவுபடுத்தி, தேச ஒற்றுமையை சிதைப்பது சரியா? முஸ்லீம்களை எனது சகோதர சகோதரிகளாக நான் கருதுகிறேன். சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் பயணித்து விட்டோம். இனியும், வெறுப்புணர்வை வளர்க்கும் கீழ்மைக்கு ஒருபோதும் நாம் இடமளிக்கக் கூடாது” என்று நீதிபதி வேதனையுடன் குறிப்பிட்டுள்ளது ஒன்றிய அரசு மண்டையில் உரைக்குமா?*

*நான்கு மாத காலத்தில் ஓய்வுபெறக்கூடிய மூத்தநீதிபதியின்பொறுப்புமிக்கஅறிவுரையை கணக்கிலெடுத்து, பாடததிட்டங்களில் செய்துள்ள குளறுபடிகளை சரிசெய்வது சிந்திக்கும் மாணவர் தலைமுறையை உருவாக்கிட உதவும்.*

*அவ்வாறின்றி, அதிகாரம் எங்களிடம் உள்ளது; எதிர்ப்புகளை மதிக்கமாட்டோம் என்ற போக்கில் செயல்படுவோம் என்றால், மக்கள் அதிகாரம் அதற்கு பாடம் புகட்டும் என்பதே வரலாறு உணர்த்தும் உண்மையாகும்.*

தொடர்புக்கு: 9442878974

# கலாஷேத்ரா: கலை வளர்க்கவா? கண்ணியத்தை சிதைக்கவா?





ஜி.மஞ்சுளா

“பாலியல் துன்புறுத்தல் என்பது: நட்புபூர்வமான, பரஸ்பரமான செயல் அல்ல. காதலோ, காதல் தொடர்பானதோ அல்ல. ஒருவரது விருப்பத்திற்கு எதிரான, அதிகாரத்தில் சமநிலையில் இல்லாத இருவருக்கிடையிலான செயல்”

என்பதாக “பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் குறைதீர்ப்பு) சட்டம் 2013” சட்டத்தை எப்படி அமல்படுத்த வேண்டும் என இந்திய அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டி கையேடு வரையறை செய்துள்ளது. தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் ரேகா சர்மா இந்த வரையறையை அறியாதவர் என நாம் கருத முடியாது. ரேகா சர்மா மட்டுமல்ல. கலாஷேத்ரா நிர்வாகம், அங்கு அமைக்கப்பட்டிருந்த பாலியல் புகார் குழு அனைத்துமே பெண்களை பாதுகாக்கும் இச்சட்டத்திற்கு எதிராக செயல்பட்டுள்ளதையும், பெண்களை பாதுகாப்பதற்கான நிறுவனங்களே பெண்களுக்கு எதிராக செயல்பட்டுள்ளதும் இன்று வெட்டவெளிச்சமாகியுள்ளது.

கலாஷேத்ரா என்பது இந்திய கலையை, இசையை வளர்த்தெடுப்பதற்காக 1936 ல் டாக்டர் ருக்மணி தேவி அருண்டேல் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. 1993ல் மத்திய கலாச்சாரத்துறை அமைச்சகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

### மனித உரிமை மீறலே

கலாஷேத்ராவின் முன்னாள் மாணவர்கள் வழியாக அமெரிக்காவில் செயல்பட்டு வரும் ‘கேர்ஸ்பேசஸ்’ எனும் ஒரு அமைப்பு அனுபவங்களை பகிர 2022, டிசம்பர்25 அன்று ஒரு பாதுகாப்பான இணைய தளத்தை உருவாக்கி தந்துள்ளது. தங்கள் அடையாளம் பாதுகாக்கப்படும் என்பதால் தற்போது அங்கு படித்து வந்த மாணவர்கள் மட்டுமல்ல முன்னாள் மாணவர்கள் பலரும் தாங்கள் சந்தித்த பாலியல் துன்புறுத்தல்கள், மனித உரிமை மீறல்கள், அதிகார துஷ்பிரயோகம் அனைத்தையும் வெளிப்படையாக அதில் பகிர்ந்துள்ளனர்.

மார்ச்1ல் இருந்து அதற்கான இணையதள கையெழுத்து இயக்கத்தையும் ‘கேர்ஸ்பேசஸ்’ நடத்தியது. 706பேர் கையெழுத்திட்ட மனுவை தன் முகநூல் பக்கத்திலும் வெளியிட்டு தேசிய மகளிர் ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளது.

ஆனால் மார்ச்8 அன்று கலாஷேத்ராவில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வில், தங்களால் பாலியல் குற்றம்சாட்டப்பட்ட ஹரிபத்மனை கலாஷேத்ரா இயக்குனர் ரேவதி ராமசந்திரன் கௌரவப்படுத்தி சிறப்பு செய்ததை கண்டு மாணவர்கள் அதிர்ச்சியும் கோபமும் அடைகின்றனர்.

இந்நிலையில் தி பிரிண்ட் பத்திரிகை, மார்ச் 21 அன்று கலாஷேத்ராவில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தல் சம்பந்தமான விரிவான கட்டுரை வெளியிட்டது.

அதேநாளில் தேசிய மகளிர் ஆணையம் தனது டிவிட்டர் செய்தியில் “இந்த விஷயம் குறித்து கவனம் செலுத்துகிறோம். குற்றம் சாட்டப்பட்டுள்ள உதவி பேராசியர், அவரை காப்பாற்றிய கலாஷேத்ரா நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுக்க கோரி ஆணையத் தலைவர் ரேகா சர்மா, தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் சைலேந்திரபாபுவுக்கு கடிதம் எழுதியுள்ளார்” என தெரிவித்தது.

### தேசிய மகளிர் ஆணையம் மகளிருக்கு எதிரானதா?

ஆனால் மறுநாளான மார்ச் 25 அன்று, “உள்புகார் குழுவில் பாலியல் துன்புறுத்தல் இல்லை என பாதிக்கப்பட்டவர் கூறியதால் இந்த விஷயத்தை முடிப்பதாக தேசிய மகளிர் ஆணையம் முடிவுக்கு வந்துள்ளது” என ஆணையத்தின் டிவிட்டரில் செய்தி வெளியிடப்படுகிறது. தமிழக காவல்துறை இயக்குநருக்கும் கடிதம் அனுப்பப்படுகிறது. முடிந்து விட்டதாக கூறிய ஒரு விஷயத்தை விசாரணை செய்ய மார்ச் 29 அன்று ரேகா சர்மா கலாஷேத்ராவுக்கு வருகிறார். உள்ளே போய் விசாரணை நடத்திவிட்டு அந்தக் கட்டுரையில் சொல்லப்பட்ட விவரங்களுக்கு எந்த ஆதாரமும் இல்லை இந்த விவகாரத்தை மேற்கொண்டு தொடரவேண்டாம் என கூறிச் சென்றுவிடுகிறார்.

கலாஷேத்ரா நிறுவனம் மட்டுமல்ல. தேசிய மகளிர் ஆணையமும் குற்றவாளிகளை காப்பாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டதை தெளிவாக உணர்ந்தவுடன் தான் மார்ச் 30 அன்று மாணவிகள் தங்களுக்கு நியாயம் கேட்டு உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். அதன்பின் தமிழக ஊடகங்களில் இப்போராட்டம் முக்கிய செய்தியாக மாறுகிறது.

குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கும்வரை உள்ளிருப்புபோராட்டம் தொடரும் என முதலமைச்சருக்கு மின்னஞ்சல் அனுப்பி விட்டு அடுத்த நாளும் போராட்டத்தை மாணவர்கள் தொடர்ந்தனர். மாநில மகளிர் ஆணைத் தலைவர் குமாரி நேரில் சென்று புகார்களை பெற்று அதன் மீது நடவடிக்கை எடுப்பதாக கூறிய பின் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

கலாஷேத்ரா நிர்வாகம் ஹரிபத்மனை தற்காலிக பணியிடை நீக்கம் செய்துள்ளது. சஞ்சித் லால், ஸ்ரீநாத், சாய் கிருஷ்ணா ஆகியோர் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். பாலியல் குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை நடத்த முன்னாள் நீதிபதி கே.கண்ணன், முன்னாள் டிஜிபி லத்திகா சரண், டாக்டர் ஷோபா வர்த்தமான் அடங்கிய விசாரணைக் குழுவையும் கலாசேத்திரா நிர்வாகம் அமைத்துள்ளது. தற்போது உதவி பேராசிரியர் ஹரிபத்மன் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கலாஷேத்ரா பெண்களின் போராட்டம் பகுதியளவு வெற்றியை பெற்றிருப்பது மகிழ்வளிக்கிறது. இருப்பினும் அனைத்து பணியிடங்களிலும் பாலியல் புகார் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என பெண்கள் அமைப்புகள் ஒருபுறம் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் மறுபுறம் புகார் குழுக்களே பெண்களுக்கு பாதகமாக நடந்து கொண்டிருப்பதை இப்போராட்டம் வெளிக்கொணர்ந்துள்ளது.

> பாலியல் துன்புறுத்தல் என்பது உடல்சார்ந்த, உளவியல்சார்ந்த துன்பங்களோடு நின்று விடுவதில்லை. பள்ளி, கல்லூரிகளில் கண்ணியத்துடன் படிப்பதையும், பணியிடங்களில் கண்ணியத்துடன் வேலை செய்வதற்கான, வாழ்வதற்கான உரிமையை பாலியல் துன்புறுத்தல்கள் பெண்ணிடமிருந்து பறித்து விடுகின்றன.

“பாதிக்கப்பட்ட பெண்ணால் கொடுக்கப்பட்டுள்ள புகாரின் மீது விசாரணை தொடங்கும் முன்பே, பாதிக்கப்பட்ட பெண்ணும் புகாருக்கு ஆளானவரும் பேசி பிரச்சனையை இணக்கமாக தீர்த்து கொள்ளலாம்” என்ற சட்டத்தின் பாதகமான அம்சத்தை பயன்படுத்தி பெண்ணை வலுக்கட்டாயமாக புகாரை திரும்பபெற வைப்பதற்கான முயற்சிகள் தான் கடந்த காலங்களில் நடந்துக் கொண்டிருந்தது.

### புகார் அளிக்க சட்டபூர்வ உரிமை உள்ளது

ஆனால் இப்போதோ புகார் அளிப்பதற்கு பெண்களுக்கு உள்ள சட்டபூர்வமான உரிமையை பறித்து, புகார் குழுவையே தங்களுக்கு சாதகமாக நிறுவனங்கள் மாற்றிக் கொள்கின்றன என்பது இப்போராட்டத்தால் வெளிவந்துள்ளது.

### உளவியல் ரீதியான துன்பம்

பாலியல் துன்புறுத்தலை பெண்கள் வெளியே பேசத் தயங்கும் நிலைதான் இன்றளவிலும் காணப்படுகிறது. தனக்கு நடந்ததை பற்றி அவமானம் மற்றும் வெட்கம், நடந்த விஷயத்திற்கு ஆதாரம் இல்லாததால் தான் சொல்வதை நம்ப மாட்டார்களோ என்ற அச்சம், மற்றவர்கள் புறம் பேசுதலுக்கு ஆளாகி விடுவோமோ என்ற பயம், துன்புறுத்தலுக்கு ஆளானதற்கு தனது நடத்தையே காரணம் என்று சொல்லப்பட்டு விடுமோ என்ற அச்சம், நிறுவன உரிமையாளர் தன்னை பாதிக்கும்படியான நடவடிக்கை எடுத்துவிடுவாரோ என்ற கலக்கம் என பெண்கள் உளவியல்ரீதியான துன்பங்களுக்கு ஆளாகின்றனர். அதையும் மீறி தான் ஒரு பெண் வெளியே சொல்ல ஒருகட்டத்தில் தயாராகின்றார்.

### கைது நடவடிக்கை வரவேற்கத் தக்கதே

தமிழக அரசும், மாநில மகளிர் ஆணையமும் இந்த விஷயத்தில் விரைந்து செயல்பட்டதும், விசாரணை, குற்றவாளிகள் கைது என உடனடி நடவடிக்கை எடுத்ததும் வரவேற்கத்தக்கவை. பாராட்டுக்குரியவை. அதேசமயத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் என்பது கலாஷேத்ராவில் தொடங்கவும் இல்லை. அதோடு முடியப்போவதும் இல்லை. சொல்லப்போனால் போராடிய மாணவிகள் தங்கள் கல்லூரிக்காக மட்டும் போராடவில்லை. அந்த வளாகத்தில் செயல்பட்டுவரும் மற்ற இருபள்ளி மாணவர்களுக்கும் சேர்த்து போராடியதையும் அப்பள்ளிகளில் பயிலும் சிறுகுழந்தைகளும் இந்த கொடுமைகளில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்று அக்கறையுடன் பேசியுள்ளதை அவர்கள் அளித்துள்ள பேட்டிகள் நமக்கு தெரியப்படுத்துகின்றன.

பாலியல் துன்புறுத்தல் என்பது உடல்சார்ந்த, உளவியல்சார்ந்த துன்பங்களோடு நின்று விடுவதில்லை. பள்ளி, கல்லூரிகளில் கண்ணியத்துடன் படிப்பதையும், பணியிடங்களில் கண்ணியத்துடன் வேலை செய்வதற்கான, வாழ்வதற்கான உரிமையை பாலியல் துன்புறுத்தல்கள் பெண்ணிடமிருந்து பறித்து விடுகின்றன. பள்ளி, கல்லூரிகளில் இருந்து அல்லது பணிசெய்யும் இடங்களில் இருந்து இப்பிரச்சனை காரணமாக வெளியேறும் நிலையில் தங்கள் பொருளாதார வாழ்விற்கான வாய்ப்புகளை அவர்கள் இழக்க நேரிடுகிறது.

இந்த அடிப்படையில் இருந்து பாலியல் துன்புறுத்தல்களை எதிர்கொள்வது குறித்து அரசு கவனமாக செயல்பட வேண்டும். பிரச்சனைகள் வரும் போது தலையீடு செய்வது மட்டுமல்ல ஒரு அரசின் பணி. தமிழக அரசு பெண்கள், குழந்தைகள் புகார் தெரிவிக்க சில உதவி எண்களை ஏற்படுத்தியுள்ளதையும், ஒன்றிய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்பு திட்டமான ‘சகி’ என்ற ஒருங்கிணைந்த சேவை மையத்தை பற்றிய விவரங்களை தனது மகளிருக்கான கொள்கை அறிக்கையில் கூறியுள்ளது. இவைமட்டும் போதுமானதல்ல.

### விழிப்புணர்வு முக்கியம்

பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மாவட்டவாரியாக உள்ளூர் புகார்குழுக்களை அமைத்தல், அவர்களுக்கு பயிற்சி, உள்புகார் குழுவின் செயல்பாடுகளை கண்காணித்தல், சட்டத்தை முறையாக அமல்படுத்தாத நிறுவனத்தின் உரிமைரத்து செய்யப்படுதல் உள்ளிட்ட சட்டபூர்வமான நடவடிக்கைகள் அனைத்தையும் அரசு தொடர்ச்சியாக செய்ய வேண்டும்.

தொடர்புக்கு: 9790752080

**சுற்றுச் சூழல்**



அருண் நெடுஞ்செழியன்

## இந்திய வனங்கள் கார்ப்பரேட்டுகளுக்கு தாரை வார்ப்பு

அதானியின் பங்குச் சந்தை ஊழல் மீதான விசாரணை கோரி, நாடாளுமன்றத்தை எதிர்க்கட்சிகள் முடக்கி வருகிற நிலையில்,சத்தமில்லாமல் இந்திய வனங்களை கார்பரேட்களுக்கு தாரை வார்க்கிற வகையிலே வனப்பாதுகாப்பு சட்டம்(1980) திருத்த வரைவை சுற்றுச்சூழல்,வன மற்றும் காலநிலைமாற்றத் துறை (விஷீணிதிசிசி), அமைச்சர் பூபேந்தர் யாதவ் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

வனப் பாதுகாப்பு சட்டம் 1980 இல் திருத்தம் கொண்டு வருகிற புதிய வனப்பாதுகாப்பு சட்டம் 2023 மசோதாவானது, முன்னாள் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெயராம் ரமேஷை தலைவராகக் கொண்ட நாடாளுமன்ற நிலைக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பாமல்,நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளதும் எதிர்க்கட்சிகளின் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

புதிய திருத்த வரைவில் “வனப் பகுதி” குறித்து நடைமுறையில் உள்ள வரையறையை மாற்றியமைப்பதால், இனி எந்த வித அனுமதியும் கட்டுப்பாடும் இன்றி லட்சக்கணக்கான ஹெக்டர் காடுகளை சூறையாடலாம். காடு வளர்ப்பு என்ற பெயரில் தனியாருக்கு காட்டுப் பகுதிகளை தாரை வார்க்கலாம்.காட்டு நிலங்கள் இனி காடுகள் சாராத நிலங்களாக மாற்றப்படுவதால்,காடழிப்பு சட்டப்பூர்வ வடிவில் மேற்கொள்ளப்படும்!

புதிய சட்ட வரைவில்” பொருளாதார தேவை” க்காக காட்டின் வளத்தை பயன்படுத்துவது என்ற பொருளிலான வாசகங்கள் வருகிறது.யாரின் பொருளாதார தேவைக்காக காடு பயன்படப்போகிறது என்பதே இங்கு கேள்வி.

புதிய சட்ட வரைவின்படி சர்வதேச எல்லைகளில் இருந்து 100 கி.மீ. தூரம் வரையிலான வனப் பகுதிகளில் அரசின் பாதுகாப்பு நலனிற்காக எந்த வித அனுமதியும் இல்லாமல் கட்டுமானங்கள் மேற்கொள்வதற்கு(தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற வரையறையில்) விலக்கு வழங்கப்படுகிறது.

ரயில் மற்றும் சாலை அருகாமை பகுதிகளில் இருந்து 10 ஹெக்டேர் காட்டு நிலங்களுக்கு கட்டுமானம் மேகொள்ள விலக்கு அளிக்கப்படுகிறது.

காடுகளில் சுற்றுலா(சபாரி) செல்கிற பகுதிகளும் காடுகள் அல்ல என்ற வரையறைக்குள் கொண்டு வரப்படுகிறது.

முன்னதாக டி.என். கோதவர்மன் எதிர் இந்திய ஒன்றியம் வழக்கொன்றின் உச்ச நீதிமன்ற தீர்ப்பில்(1996),காடு என்பதற்கான வரையறையை டிஷ்னரி விளக்கம் கொண்டு அணுகாமல், அரசின் ஆவணங்களின் எங்கெல்லாம் காடுகள் என்றுள்ளதோ அவை அனைத்துமே காடுகள்தான் எனக் கூறியது.அது தனியார் வசமோ அல்லது அரசின் வசமோ காடுகள் என்ற அரசின் ஆவணமே போதுமானது என்றது.

தற்போதைய சட்டத் திருத்தமானது மேற்கூறிய உச்ச நீதிமன்ற வரையறைகளை துடைத்தெறிந்துவிட்டது. மேலும் பழைய வனப் பாதுகாப்பு சட்டங்கள் வழங்கிய குறைந்தபட்ச வன மற்றும் பழங்குடிகள் பாதுகாப்பு அம்சங்கள் ஒன்றுகூட மேற்கோள் காட்டப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் எந்தவித அனுமதியும் இல்லாமல் காட்டுப் பகுதிகளை, காடுகள் சாராத பகுதிகள் என்று கூறி பெரும் கார்ப்பரேட்களின் வணிக நலன்களுக்கு காட்டுப் பகுதிகளை திருப்பி விடுவதே இந்த திருத்தத்தின் நோக்கமாக உள்ளது.

மறுபக்கம் காடழித்து மரம் வளர்ப்போம் என்கிற கதையாக காலநிலை மாற்ற சிக்கலுக்கு தீர்வு காண்பதாக செயற்கையான,போலியான காடு வளர்ப்பு திட்டங்களின் மூலமாக ஓரினப் பயிர்த் தோட்டங்களை வளர்த்து அதைக் காடு எனக் கூறப் போகிறார்கள்.

ஆக,பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளை வணிகமயப்படுத்துவதற்கும், வனங்களில் பழங்குடிகளின் உரிமைகளை பறித்து அவர்களை வனங்களை விட்டு வெளியேற்றுவதற்குமே புதிய வனப் பாதுகாப்பு சட்டத் திருத்தத்தை ஆளும் பாஜக அரசு கொண்டு வருகிறது.

மேலும் இந்த சட்டத் திருத்த வரையறை யாவுமே பிராந்திய மொழிகளில் வெளியிடாமல் ஆங்கிலத்தில் வெளியிட்டும், யாருமே பேசாத சமஸ்கிருதத்தில் வலிந்து சில வார்த்தைகளை சேர்த்தும் தனது மொழித் திணிப்பு கொள்கையை வெளிப்படுத்தியுள்ளது.

காட்டை அழிப்பதோடு, மொழித்திணிப்பையும் சேர்த்து ஒன்றிய அரசு செயல்படுத்துகிறது.

காடுகளைப் பாதுகாப்போம்.

தொடர்புக்கு: 9842391963

# பல வகைப்பட்ட பள்ளிகள் ச
# நிர்வாகப் பொறுப்பிற்

**தமிழ் நாட்டில் இயங்கும் பல வகைப்பட்டப் பள்ளிகள் கல்வித் துறையின் நிர்வாகப் பொறுப்பின் கீழ் கொண்டு வரப்படும் என்ற பட்ஜெட் அறிவிப்பு ஆதரவும், எதிர்ப்பும் பெற்று வருகிறது.**

நம் சமுதாயத்தில் ஆயிரம் ஆண்டுகளாகக் கொடுமையாக வஞ்சிக்கப்பட்டு, சொல்லணா அடக்கு முறைகளுக்கும், உழைப்புச் சுரண்டலுக்கும் உள்ளாக்கப்பட்ட சமுதாயத்தின் ஆதாரத் தேவையான கல்வி குறித்து இங்கு பேசுகிறோம்.

### செல்ல வேண்டியது வெகுதூரம்

இப் பள்ளிகளை நரகத்திலிருந்து மீட்டு, சொர்க்கத்திற்குக் கொண்டு செல்லும் முயற்சி அல்ல இது. அவைகள் இன்று நரகத்தில் அல்லலுறுவது உண்மை. ஆனால், கல்வித் துறையின் கீழ் கொண்டு வருவது சொர்க்க வாசல் திறப்பது அல்ல. கல்வித் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளிலும் ஏராளமான அவலங்கள்.

அரசுப் பள்ளிகளை உயர்த்துவதற்கு, மாணவர்கள் தரமான கல்வி பெறுவதற்கு ஏராளமான மக்கள் இயக்கங்கள், கல்வியாளர்கள் பெரும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறனர். அவற்றில் மாணவர்களின் நிலை இன்று புதிதாக இணைக்கப்படப் போகும் பள்ளி மாணவர்களை விட ஒரு சிறு அளவுதான் உயர்ந்திருக்கின்றது. அனைத்து வகைப்பட்டப் பள்ளிகளும் செல்ல வேண்டியது வெகு தூரம்.

இணைக்கப்படப் போகின்றன என்ற பட்ஜெட் அறிவிப்புத் தவிர மற்ற விவரங்கள் தெரியவில்லை.

இணைக்கப்படப் போகும் 1,834 பள்ளிகளில் மிகப் பெரும்பானவை, 1138 ஆதி திராவிட நலத் துறைப் பள்ளிகள். இணைக்கப்படும் மொத்த மாணவர் 1.6 லட்சம் பேரில் 95,013 ஆதி திராவிடர் நலத் துறைப் பள்ளிகளைச் சேர்நதவர். அடுத்து பழங்குடியினர் பள்ளிகள் 328, மாணவர் 31,153.

இதில் முக்கியமாக மனதில் கொள்ள வேண்டியது என்னவென்றால், SC, ST மாணவர்கள் மிகப் பெரும்பாலோர் கல்வித் துறை நடத்தும் பள்ளிகள், மற்ற பல வகைப்பட்ட பள்ளிகள், தனியார் பள்ளிகளிலும் படிக்கிறனர்.

அனைத்து வகைப்பட்டப் பள்ளிகளிலும் படிக்கும் மொத்த SC, ST மாணவர், 31.1 லட்சம் பேர். அதில் ஒரு சிறு பகுதி, 1.26 லட்சம் பேர்தான் ஆதி திராவிடர், பழங்குடியினரின் தனிப்பட்ட பள்ளிகளில் படிக்கின்றனர். அதிலும், இந்தத் தனிப்பட்ட பள்ளிகளில் அப் பிரிவினைச் சாராத மற்ற மாணவரும் படிக்கின்றனர். அவர்களை விட்டுவிட்டால், இந்த எண்ணிக்கை இன்னும் குறையும்.

அதாவது, மொத்த எஸ். சி / எஸ். டி. மாணவரில் 4% க்கும் குறைவானவர்தான் தனிப்பட்ட, ஆதி திராவிட, பழங்குடியினர் பள்ளிகளில் படிக்கின்றனர்.

இந்தப் பள்ளிகளின் அவல நிலை, அங்கு நடக்கும் சீர்கேடுகள் வெகு காலமாகச் சுட்டிக் காட்டப்பட்டு இந்த இணைப்பு வேண்டும் என்ற கோரிக்கை எழுந்திருந்தது.

### நிர்வகிப்பது யார்?

எஸ்சி/எஸ்டி பள்ளிகளை நிர்வாகம் செய்வது அந்த எஸ்சி/எஸ்டி துறையில் இருக்கின்ற ரெவின்யூ இன்ஸ்பெக்டர், (RI), தாசில்தார், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அலுவலர் மட்டுமே. இவர்கள் அனைவரும் வருவாய் துறை சார்ந்தவர்கள். இவர்களுக்கும் கல்வித்துறைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மேலும் இவர்களுக்கு ஏராளமான மற்ற வேலைகளின் பளு உண்டு.

அவர்களால் பள்ளிகளுக்கு செல்வதும், விடுதிகளுக்குச் சென்று, மேலாண்மை செய்வதும், பாடங்களை ஆசிரியர்கள் முறையாக எடுக்கின்றார்களா? மாணவர்களுடைய கல்வித் தரம் எப்படி இருக்கிறது? என்பதைப் பற்றி எல்லாம்




ஆய்வு செய்வதற்கான வாய்ப்பு மட்டுமல்ல, அதற்கான பயிற்சியும் அவர்களுக்கு இல்லை என்பதும் நடைமுறை உண்மை. ஆகவே கல்வித் துறையைச் சார்ந்தவர்கள், கல்வியாளர்கள் மட்டுமே பள்ளிகளை ஆய்வு செய்ய முடியும்.

### திருப்பப் பார்ப்பதில்லை

ஆனால் பலர் குறிப்பிடுவது எஸ்சி/ எஸ்டி பள்ளிகளில் அந்தந்த சமூகத்தைச் சார்ந்தவர்களையே ஆசிரியர்களாக, விடுதிக்காப்பாளர்களாக, உதவியாளர்களாக நியமித்தால்தான் அது சிறப்பாக இருக்கும் என்பது. ஆனால் நடைமுறையில் அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களும், படித்து வேலை வாய்ப்பு பெற்று, நல்ல வருவாய் பெற்ற பிறகு அவர்களுடைய சமூகத்தை திரும்பிப் பார்ப்பதில்லை. அதில் ஒரு சிலர் மட்டும்தான் தங்களுடைய சமூகத்தினுடைய மேம்பாட்டிற்கு வேலை செய்பவர்களாக இருக்கின்றார்கள். பெரும்பகுதியானவர்கள் அப்படி இல்லை என்பது நடைமுறை உண்மை.

டாக்டர் அம்பேத்கர் கூட தன்னுடைய இறுதி காலத்தில் வேதனைப் பட்டார். தலித் சமூகத்தினுடைய மேம்பாட்டிற்காக இட ஒதுக்கீடு உட்பட பல்வேறு திட்டங்களைக் கொண்டு வருவதற்காகப் போராடி, அவர்களுக்கான கல்வி, வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்து, அவர்கள் படித்து வேலை வாய்ப்பு பெற்று, கை நிறைய வருவாய் ஈட்டுகின்ற காலங்களில் தங்களுடைய சமூகத்தினுடைய மேம்பாட்டுக்காகப் பணியாற்றவில்லை என்பது தனக்கு மிகுந்த வருத்தத்தை கொடுக்கிறது என்று டாக்டர் அம்பேத்கர் குறிப்பிட்டிருப்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

**அந்தந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அந்த சமூகத்தினுடைய மேம்பாட்டிற்குப் பணியாற்றுவார்கள் என்பது நடைமுறையில் இல்லை.**

# ல்வித் துறையின் கு மாற்றுதல்



வே. வசந்தி தேவி

ஆகவே உண்மையாகவே அடித்தட்டில் வாழுகின்ற ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, அடர்ந்த வனங்களில் வாழுகின்ற பழங்குடி மக்களுக்காக தனது அரசுப் பணிக் காலத்தில் அர்ப்பணிப்பு உணர்வோடு சமூக சேவையாற்ற வேண்டும் என்ற உணர்வுள்ள ஆசிரியர்களைக் கண்டறிந்து, அதே போல் சமையலர்களை, உதவியாளர்களை, விடுதிக்காப்பாளர்களைக் கண்டறிந்து நியமிப்பதின் மூலம் தான் அவர்களுக்கான நல்ல கல்வி கிடைக்கும் என்பதுதான் உண்மை.

### இன்றைய அவலங்கள்

இத்தகையப் பள்ளிகளில் இன்று நிலவும் சில அவலங்கள்:

◆ தலைமையாசிரியர் மற்றும் விடுதிக்காப்பாளர் ஒருவராகவே இருப்பது

◆ ஒரே விடுதிக்காப்பாளர் பல விடுதிகளுக்குப் பொறுப்பேற்பது.



பலவகைப் பள்ளிகளை கல்வித்துறை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதில் உள்ள தீமைகளைப் பட்டியலிட்டு, பேரா. கதிரவனின் கட்டுரை சென்ற இதழில் வெளிவந்தது. போற்றுதலுக்குரிய கல்வியாளர் டாக்டர் வசந்தி தேவி அவர்கள், இதிலுள்ள நன்மைகள் குறித்து ஜனசக்திக்கு இந்தக் கட்டுரையை அனுப்பியுள்ளார். இவை ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல. இருவேறு கோணங்களில் ஒரே பிரச்சினையை பார்க்க முடியும். இதுவும் வெளி யிடப்படுகிறது. குணம் நாடி குற்றமும் நாடி அவற்றில் மிகை நாடி மிக்க கொளல் என்பது வள்ளுவர் வாக்கு.

– ஆசிரியர் குழு

◆ விடுதிக்காப்பாளர் விடுதியில் தங்குவதில்லை. ஆதலால் பல விடுதிகளில் மாணவர்களும் இரவில் தங்குவதில்லை.

◆ குழந்தைகள் விடுதிகளில் தங்கும் நிலைமை இல்லை. 4.00 மணிக்கு மேல் வீட்டிற்குப் போய் விடுகிறார்கள்.

◆ பழங்குடி மாணவிகளுக்கான விடுதிகள் செயல்படுவதில்லை. அதற்குப் பெண் விடுதிக்காப்பாளர்கள் நியமிக்கப்படவில்லை.

◆ பழங்குடி விடுதியில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 50 தான். பல பள்ளிகளில் விடுதியில் தங்குகின்ற, தங்குவதற்கான பட்டியலில் உள்ள மாணவர்களுடைய எண்ணிக்கை 50 க்கு கீழே இருந்தாலும் 50 என்று பதிவிடப்பட்டு அதற்குரிய உணவுக் கட்டணம் மற்ற பொருட்களை வாங்குவதற்கு உரிய பணத்தை எடுத்துக் கொள்வது நடைமுறையில் இருக்கிறது

◆ அந்தந்தப் பகுதியில் வாழும் பழங்குடிகளின் தாய் மொழி தெரிந்தவர்கள் ஆசிரியர்களாக இருப்பதில்லை. அதனால் மாணவர்கள் பள்ளியில் இருந்து இடைநிற்பதற்கு (Drop out) அது காரணமாகவும் இருக்கிறது.

◆ ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர், சமையலர், உதவியாளர்கள் எல்லோரும் தொலைதூரத்தில் இருந்து அந்தப் பள்ளிகளுக்கு வரக்கூடியவர்களாக இருப்பதால் தொடர்ந்து பள்ளிகள் செயல்படுவதற்கு இடையூறாக இருக்கிறது.

◆ பள்ளியின் செயல்பாடுகளை, விடுதியின் செயல்பாடுகளை மேலாண்மை செய்வது, சூப்பர்வைஸ் செய்வது பழங்குடி நலத் துறையில் உள்ள வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் மட்டுமே. இவர்களுக்கும் கல்விக்கும் பெரும் தொடர்பு இல்லை. செயல்பாடுகள் முறையாக மேலாண்மை செய்யப்படாமல் இருக்கின்றன.

பொதுப் பள்ளிகளில் படிக்கும் இப் பிரிவு மாணவர் பாகுபாடுகளை சந்திக்கின்றனரா? என்றால், ஆங்காங்கே சந்திப்பது உண்மைதான்.

**சாதியத்தில் மூழ்கிக் கிடக்கும் சமுதாயத்தில் இத்தகைய கொடுமைகள் நடக்கும் போது, இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும்.**

கடுமையான நடவடிக்கை எடுத்து, குற்றம் புரிந்தவர் தண்டிக்கப்பட வேண்டும்.

அதற்குத் தீர்வாக அனைத்து எஸ்.சி./ எஸ்.டி. குழந்தைகள் தனிப்பட்டப் பள்ளிகளில் படிக்க வேண்டும் என்ற நிலையை எடுக்க முடியாது. சாதி ஒழிப்பிற்கு, தனிப் பள்ளிகள் தீர்வல்ல. அவர்கள் இன்னும் தனிமைப் படுத்தப்படுவதற்கு, அவர்களது ghettoization க்கு வழி வகுக்கும்.

அப்படியென்றால், பள்ளிகள் இணைப்பை எதிர்ப்பது மாணவர் நலன் காக்கவா? அல்லது வேறு காரணங்களுக்காகவா என்ற கேள்வி தவிர்க்க முடியாதது.

### அடிப்படைத் தேவைகள்

சில அடிப்படைகளைத் தேவைகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

◆ கல்வித் துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து, ஒவ்வொரு வகைப்பட்டப் பள்ளிகளுக்கும், தனித் தனி Joint Directors நியமிக்கப்பட வேண்டும்.

◆ இப் பள்ளிகளில் தற்பொழுது படிக்கும் மாணவர்களுக்குக் கிடைக்கும் அனைத்து சலுகைகளும் தொடர வேண்டும். மற்ற மாணவரை விட கூடுதல் எண்ணிக்கையில் சீருடை, ஆண்டு தோறும் சுற்றுலா போன்றவை இவை.

◆ எஸ்சி/எஸ்டி துறைக்காக, கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதியை விடுதியில் எத்தனை மாணவர்கள் தங்கினாலும் (தற்போது 50 என்ற எண்ணிக்கையை நீக்கி)அவர்களுக்கான உணவு வசதி, நல்ல தரமான உணவு கொடுப்பது, அவர்களுக்கான ஆடை, அவர்களுக்கான இணையதள வசதி, அவர்களுடைய மேம்பாட்டிற்கான தொழில்கல்வி போன்றவற்றிற்கு சிறப்பு சலுகைகள் கிடைப்பதற்கும், நிதி ஒதுக்கீட்டைக் கூடுதலாக்குவதற்கும் அரசை வலியுறுத்த வேண்டும்.

◆ வருடம் தோறும் எஸ்சி எஸ்டி துறைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி திருப்பிக் கொடுக்கப்படுவது ஏன் என்ற பெரிய கேள்விக்கு நாம் விடை காண வேண்டும். பல திட்டங்களை வகுத்து, அந்த மக்களினுடைய பொருளாதார மேம்பாட்டிற்கு அந்த நிதியை திருப்பி விடுவதற்குத் திட்டமிட வேண்டும்.

Special Component Plan என்று சொல்லக்கூடிய சிறப்புக் கூறுத் திட்டம் பல்வேறு துறைகளுக்குப் பிரித்து அனுப்பப்படுகிறது. அதன் மூலம் அந்த நிதி முறையாக அந்த மக்களுக்குக் கிடைப்பதும் இல்லை. மேலும் இந்த துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதி வேறு பல்வேறு திட்டங்களுக்கு மடை மாற்றுவதையும் அரசு செய்து கொண்டிருக்கிறது.

ஆக இவற்றையெல்லாம் தடுத்து முறைப்படுத்தினாலே, இந்த மக்களினுடைய பொருளாதார, கல்வி, தொழில் மேம்பாட்டிற்குப் பெரும் உதவியாக இருக்கும் என்பதையும் நாம் வலியுறுத்த வேண்டும்.

### என்ன செய்ய வேண்டும்?

◆ பழங்குடிப் பள்ளிகளைக் கல்வித் துறையோடு இணைத்து விடுவதால் மட்டுமே மலைப் பகுதி மாணவர்களுக்கு, குறிப்பாக பழங்குடிகளுக்கு நல்ல கல்வி, விடுதிகள் உருவாகிவிடும் என்று சொல்லிவிட முடியாது.

பொதுவாகவே மலைப்பகுதியில் செயல்படுகின்ற, கல்வித் துறைப் பள்ளிகளாக இருந்தாலும், அந்தப் பள்ளிகளில் அங்கேயே சென்று தங்கி மாணவர்களுக்கு உரிய கல்வியை கொடுப்பதற்கான தியாக உணர்வும் அர்ப்பணிப்பும், அந்த மொழியைத் தெரிந்து கொண்டவர்களுமான ஆசிரியர்களைத் தேர்வு செய்து நியமிப்பதால் மட்டும்தான் அவர்களுக்கு சிறந்த கல்வி கிடைக்கும்; விடுதியும் செயல்படும்

◆ மலைப்பகுதி மாணவர்களுக்கு வனம் குறித்த, சுற்றுச்சூழல் குறித்த பாடத்திட்டம், வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கிற பாடத்திட்டம் தேவைப்படுகிறது.

## வினாடி - வினா

1. ஆளுநரின் செயல்பாடுகள் குறித்தோ, ஆளுநரின் பெயரைப் பயன்படுத்தியோ சட்டப்பேரவையில் பேசுவதற்கு தளர்த்தப்பட வேண்டிய பேரவை விதிகள் எவை?
2. ஆளுநரைப் பற்றி பேசுவதற்குத் தடை விதிக்கும் பேரவை விதிகள், தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஏற்கனவே ஒரு முறை தளர்த்தப்பட்டது யாருடைய ஆட்சியில்?
3. தமிழ்நாட்டு ஆளுநரின் செலவு கணக்கில் விதிமீறல் நடந்திருக்கிறது என குற்றம்சாட்டிய அமைச்சரின் பெயர் என்ன?
4. ‘வால்காவிலிருந்து கங்கை வரை’ என்ற புகழ்பெற்ற புத்தகத்தை எழுதிய நூலாசிரியரின் பெயர்?
5. தேசப் பாதுகாப்பு என்ற பெயரில் ஒன்றிய அரசு விதித்த தடையை நீக்கி, ஒளிபரப்பு உரிமம் வழங்குமாறு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்த தொலைக்காட்சியின் பெயர்?
6. தமிழ்நாட்டில் உருவாகி, புகழ்பெற்ற குளிர்பானத்தை (கூல்ட்ரிங்ஸ்) ரிலையன்ஸ் நிறுவனம் வாங்க இருக்கிறது. அதன் பெயர்?

– விடைகளை 10 ஆம் பக்கத்தில் பார்க்கவும்

## ஐஞ்சு சின்ன பசங்க. எல்லாருமே மூச்சுக்கு திணறி தண்ணில மூழ்கறாங்க.



நல்லா நின்னு வேடிக்கை பாத்தத கூட நீச்சல் தெரிலயோ, பதட்டமோ அந்த நொடில முடிவெடுக்க முடிலயோன்னு நானே எனக்கு முட்டு தந்துக்கிட்டு, (உடம்புல பதட்டத்த கூட காணோம் அந்த வீடியோல) கடந்து போனா...

யாரைக்கூப்டுக்கணும்னு பகவானுக்கு தெரியும்ங்கறான் ஒருத்தன் பங்குனி உத்தரத்துல பகவான் கைங்கரியத்துல சாகறது புண்ணியம்ங்கறான் ஒருத்தன்..

இதனால் தான் இந்த பக்திமான் ஆனியன்கள நினைச்சா பத்திக்கிட்டு வருது. கடவுள் இல்லேங்கறவன்ட்ட வர்ற துளிப்பதட்டமாவது இவனுகளுக்கு வருதா...

அவன் வீட்டு புள்ளைன்னா பகவானுக்கு அனுப்பி வச்சிட்டு தான் அடுத்த வேலை பாப்பானுகளோ?

இந்த தடிமாடுகள தூக்காம சின்னபுள்ளைங்கள தூக்கினதுக்கு அந்த கடவுள் இருந்தா அந்த கடவுளைத்தான் மொதல்ல வச்சு சாத்தணும்..

திரும்ப திரும்ப சொல்றது இதனாலத்தான். வளர்ற பசங்க கிட்ட .. மதம் சாதிலாம் ஒருநாளும் மனிதநேயத்தையோ அன்பையோ சொல்லித்தராது.

நாசமா போறதுக்கான ஒரு வழியாத்தான் இருக்கும். இத்தனை வக்கிரத்தை மதமும் வழிபாடும் தான் தந்திருக்கு.

– ஷோபனா நாராயணன்

<u>வடமாநில தொழிலாளர் குறித்து வதந்தி</u>

## தூத்துக்குடி காவல் நிலையத்தில் பா.ஜ.க. நிர்வாகி ஆஜர்

வடமாநில தொழிலாளர் குறித்து வதந்தி பரப்பிய வழக்கு தொடர்பாக பாஜக நிர்வாகி பிரசாந்த் உம்ராவிடம் தூத்துக்குடி போலீஸார் தீவிர விசாரணை நடத்தினர்.

தமிழகத்தில் வடமாநில தொழிலாளர்கள் தாக்கப்பட்டது போன்ற ஒரு வீடியோ அண்மையில் சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. இதனால் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில், வடமாநில தொழிலாளர் குறித்து வதந்தி பரப்பியதாக உத்தரபிரதேசத்தை சேர்ந்த பாஜக செய்தி தொடர்பாளர் பிரசாந்த் உம்ராவ் மீது தூத்துக்குடி மத்தியபாகம் போலீஸார் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 153, 153(ஏ), 504, 505(1)(பி), 505(1)(சி), 505(2) பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தனர். இதைத் தொடர்ந்து அவரைகைது செய்வதற்காக திருச்செந்தூர் டிஎஸ்பி வசந்தராஜ் தலைமையிலான போலீஸார் டெல்லிக்கு சென்றனர்.

இதனிடையே பிரசாந்த் உம்ராவ் உச்ச நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றுள்ளார். அவர் விசாரணை அதிகாரி முன்பு ஆஜராக வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருச்செந்தூர் டிஎஸ்பி வசந்தராஜ், ஆய்வாளர் அய்யப்பன் ஆகியோர் விசாரணை நடத்தினர்.

## வாடகை முறையை ரத்து செய்து பகுதி முறையை அமல்படுத்திடுக

# கோயில் மனையில் குடியிருப்போர் சங்கத்தின் மாநிலம் தழுவிய கண்டன முழக்க ஆர்ப்பாட்டம்

வாடகை முறையை ரத்து செய்து முந்தைய குத்தகை முறையை அமல்படுத்தப்பட வேண்டும்,

முந்தைய ஆட்சியில் புகுத்தப்பட்ட 34கி,நி,சி,ஞி, சட்டபிரிவுகளை ரத்து செய்து கலைஞர் கருணாநிதி அறிவித்து 2016 வரை நடைமுறையிலிருந்த அரசாணை 456/298 தொடர வேண்டும்.

அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள நீதிமன்றங்களை பொது கட்டுபாட்டிற்கு கொண்டுவரவேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோயில் மனையில் குடியிருப்போர் சங்கத்தினர் தமிழ்நாடு முழுவதும் ஏப்.11 அன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.






**திருத்துறைப்பூண்டி:** திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் அண்ணா சிலை அருகில் உள்ள பிறவிமருந்தீஸ்வரர் ஆலயம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. திருத்துறைப்பூண்டி சட்ட பேரவை முன்னாள் உறுப்பினர் கோ. பழனிச்சாமி கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். சங்க மாவட்ட செயலாளர் பி.வி.சந்திரராமன் உட்பட 300க்கும் மேற்பட்ட குடியிருப்புவாசிகள் கலந்துகொண்டனர். முன்னதாக திருத்துறைப்பூண்டி நகர வர்த்தக சங்க தலைவர் எம்.வி.கே.செந்தில்குமார் ஆர்ப்பாட்டத்தினை துவக்கிவைத்தார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றிய செயலாளர் கோ.ஜெயபால் நன்றி கூறினார்.

**முத்துப்பேட்டை:** முத்துப்பேட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர் கலந்துகொண்டு கோரிக்கைகளை விளக்கிப் பேசினார். 1000க்கும் மேற்பட்ட குத்தகைதாரர்கள், தோழர்கள் கலந்துகொண்ட இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஆர்.சந்திரசேகர ஆசாத், முருகையன், உமேஷ்பாபு ஒன்றிய செயலாளர், மார்க்ஸ், ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

**செங்கல்பட்டு:** செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி பகுதியில் பரசுராமன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

இதில் மாநில பொருளாளர் எஸ். ஏழுமலை பங்கேற்று நிறைவுரையாற்றினார்.

மாவட்ட துணைசெயலாளர் வி.வீராசாமி, மாவட்ட குழுஉறுப்பினர் கே.வி. சேகுவாராதாஸ் உள்ளிட்டோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரம் நகரில் உள்ள புரீமுத்தீஸ்வரர், லல்லிஸ்வரர், காடுகாளியம்மன், கச்சபேஸ்வரர் ஏகாம்பரேஸ்வரர், பணாமுத்தீஸ்வரர், வளத்தீஸ்வரர் போன்ற பகுதிகளில் உள்ள குடியிருப்போர் நல சங்கங்கங்கள் இணைந்து பிள்ளையார்பாளையம் கிருஷ்ணன் தெருவில் உள்ள வன்னீஸ்வரர் திருக்கோவில் வாயில் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதில் ஏ.மூர்த்தி, எல்.தங்கராஜ், எஸ்.ஜோதிலிங்கம்பி, குமார், செல்வராஜ், கிருஷ்ணன், திருநாவுக்கரசு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**திருச்சி:** திருச்சி மாவட்டம், சோமரசம்பேட்டை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் அலுவலகம் முன்பாக ஒன்றிய பொறுப்பாளர் எஸ்.முத்தழகு தலைமையில் ஆர்ப்பாட்டம்நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் எஸ். சிவா உரையாற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் சி.செல்வகுமார், ஒன்றிய செயலாளர் எம்.ஆர்.முருகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**பேராவூரணி:** பேராவூரணியில் பெரியார் சிலையருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை மாவட்ட குழு உறுப்பினர் துரை.பன்னீர் செல்வம் துவக்கி வைத்தார். விதொச மாவட்ட துணை செயலாளர் ராஜமாணிக்கம் நிறைவு செய்தார். ரவி,ஜெயரா, மூர்த்தி கருணாமூர்த்தி உள்ளிட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# அறிவியலும் – விடுதலையும் தோற்றதாக சரித்திரம் இல்லை!

நூற்றவர், ஆயிரம் எம்மவர்
பச்சை நரம்புகளில்
நெய்ததிந்த – விடுதலை!
விடுதலை அறியா – வீணர் அவர்

விண்மீன்கள் இல்லாத –
வானமில்லை
கம்யூனிஸ்ட்கள் இல்லாத
ஊருமில்லை – நாடுமில்லை

இந்திய பரப்பில் எட்டு திக்கும்
– எங்கள் மூச்சு!
நாள்தோறும் – நாட்டின் நலனே
எங்கள் பேச்சு

நூற்றாண்டு பயணத்தில்
குருதி கொட்டி – கொள்கை
காத்தோம்!
சதி வழக்கு – தூக்கு மேடை
துச்சமென கடந்து சென்றோம்!

சூரியனைக் காண்பதற்கு
அகல் விளக்கா?
தாய்நாட்டில் வாழ்வதற்கு
கடவுச் சீட்டா?
கம்யூனிஸ்டை அளப்பதற்கு
தேர்தல் தானா?

சாமி – மதம், காசு – பணம்
ஏதுமில்லா தேர்தல் ஒன்றை
நடத்திக் காட்டு!?
யாருக்கு வெற்றி என்று
உலகு சொல்லும்!

தோழர்களே! தீரர்களே!
சூழ்ந்து நிற்கும் – வகுப்புவாதம்
துவள்வதற்கோ – சோர்வதற்கோ
நேரமில்லை!

அறிவியலும் – விடுதலையும்
தோற்றதாக சரித்திரம் இல்லை!

– மு.வீரபாண்டியன்



## நிலக்கரி எடுக்க அனுமதிக்கப்பட்ட பகுதிகளை

# ஏல அறிவிப்பு பட்டியலில் இருந்து நிரந்தரமாக நீக்க வேண்டும்

**ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

நிலக்கரி எடுக்க அனுமதிக்கப்பட்ட பகுதிகளை ஏல அறிவிப்பு பட்டியலில் இருந்து நிரந்தரமாக நீக்க வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

டெல்டா மாவட்டங்கள், நதிநீர் பாசனம் மற்றும் ஆழ்குழாய் நீரை நம்பி பிரதான தொழில் வருமானமாக வேளாண்மை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகிறது.

ஒன்றிய அரசு கொண்டுவந்த புதிய சட்ட திருத்தத்தின்படி மத்திய சுற்றுச்சூழல் துறையின் அனுமதியை மட்டுமே பெற்று மாநிலங்களில் இப்படியான திட்டங்களை தொடங்கலாம். மாநில சுற்றுச்சூழல்துறை அனுமதி தேவையில்லை. இப்படி அமல்படுத்தப்படும் திட்டம். செயலாக்கத்தின் பொழுது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அந்த கம்பெனியே பொறுப்பு ஏற்க வேண்டும் என்கிற ஒரு புதிய திருத்தத்தின்படி இந்த திட்டம் அமலாக்கப்படுவதாக தெரிகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசை மதிக்காத இப்படியான சட்ட திருத்தத்தை அன்றைக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் எதிர்த்தது. இந்த நிலையில் தமிழக முதல்வர் சட்டமன்றக் கூட்டத்தில் இதை அனுமதிக்க மாட்டோம் என்று உத்தரவாதம் அளித்தார்.

ஒன்றிய அரசுக்கு இந்த திட்டத்தை ரத்துசெய்திட வேண்டும் என்பதுடன் இப்படியான திட்டங்களை மாநில அரசை கலந்து ஆலோசிக்காது அறிவித்தது சரியல்ல என உடனடியாக கடிதம் அனுப்பியதற்கும், அதன்படி திட்டத்தை கைவிட செய்வதற்கு ஒரு நிர்பந்தத்தை கொடுத்த தமிழ்நாடு முதல்வரை பாராட்டி நன்றி கூறுகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# வினாடி வினா விடைகள்

1. சட்டப்பேரவை விதி 92(7) மற்றும் விதி 287 ஆகியவை.
2. ஆளுநராக இருந்த சென்னாரெட்டியை விமர்சிப் பதற்காக ஜெயலலிதா ஆட்சியில் பேரவை விதிகள் 92(7) மற்றும் 287 நிறுத்திவைக்கப்பட்டது.
3. நிதி அமைச்சர் பிடிஆர். பழனிவேல் தியாகராஜன்
4. ராகுல சாங்கிருத்தியாயன்
5. கேரளாவைச் சேர்ந்த 'மீடியா ஒன்' தொலைக்காட்சி மீதான தடையை உச்சநீதிமன்றம் நீக்கியது. வலுவான ஜனநாயகத்திற்கு ஊடக சுதந்திரம் அவசியம் என்றும் அறிவுறுத்தியது.
6. தென்தமிழ்நாட்டில் புகழ்பெற்ற காளி மார்க்கின் பவன்டோ குளிர்பானத்தை ரிலையன்ஸ் நிறுவனம் வாங்க உள்ளது.

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டுக்குழு முன்னாள் உறுப்பினர்

# சோமு மனைவி மறைவு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டுக்குழு முன்னாள் உறுப்பினர் மறைந்த தோழர் ஆசிரியர் சோமு அவர்களின் துணைவியார் லட்சுமி ஏப்ரல் 11 அன்று மறைந்து விட்டார் என்பதை வருத்தத்துடன் பகிர்கின்றோம். மறைந்த தோழருக்கு ஜனசக்தி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

# சங்கே முழங்கு!



## கோமியத்தில் ஆபத்தான கிருமிகள்: ஆய்வில் எச்சரிக்கை



பசு மூத்திரத்தில் ஆபத்தான கிருமிகள் இருப்பதால், அதை அப்படியே குடிப்பது ஆபத்தானது என ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தின் (Indian Veterinary Research Institute -IVRI) தொற்று நோய்கள் பிரிவுத் தலைவரான போஜ் ராஜ் சிங் தலைமையில் ஒரு ஆய்வு நடைபெற்றது. இதன் முடிவுகள் புகழ்பெற்ற ‘ரிசர்ச்கேட்’டில் வெளியாகி உள்ளன..

பசு மாட்டு மூத்திரம், எருமை மாட்டு மூத்திரம் மற்றும் மனிதர்களின் சிறுநீர் என 73 வகை மாதிரிகளை சேகரித்து அவர்கள் ஆய்வு செய்தனர். இதில், ‘‘ஆரோக்கியமான பசு மற்றும் காளைகளின் மூத்திரத்தில் (மூத்திரம் என்றாலும் கோமியம் என்றாலும் ஒன்றுதான்) 14 வகை பாக்டீரியாக்கள் இருக்கின்றன. இவற்றில் ஈகோலி போன்ற பாக்டீரியாக்கள், பசு மூத்திரம் குடிப்பவர்களின் வயிற்றில் ஆபத்தான நோய்த்தொற்றுகளை ஏற்படுத்தும்‘‘ என ஆய்வில் கண்டுபிடித்துள்ளனர்.

ஆபத்தான பாக்டீரியாக்களுக்கு எதிராக மருந்தாக கோமியம் செயல்படுமா என்றும் இந்தக்




குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். அதில் ‘‘பசு மூத்திரத்தைவிட எருமை மாட்டின் மூத்திரத்தில் பாக்டீரியா எதிர்ப்புத்தன்மை அதிகமாக இருக்கிறது’’ என்பதும் தெரியவந்துள்ளது.

‘’கோமியம் நோய்களைத் தீர்க்கிறது என்ற கருத்து மிகைப்படுத்தப்பட்டது. பசு மட்டுமல்ல, எந்த மாட்டின் மூத்திரத்தையும் அப்படியே குடிப்பது மனிதர்களுக்கு ஆபத்தானது’’ என எச்சரிக்கிறது போஜ் ராஜ் சிங் தலைமையிலான ஆய்வுக்குழு.

இந்த ஆய்வு முடிவுகள் சங்கிகள் வட்டாரத்தை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. ஏற்கனவே, பசு மூத்திரத்தில் இருந்து மருந்துகள் தயாரிக்கும் ஆராய்ச்சிகளைச் செய்வோம் என உத்தரப் பிரதேச மாநில அரசு அறிவித்தது.

பசு மூத்திரம் குடிப்பது கொரோனாவைத் தடுக்கும் என இந்து மகா சபை அறிவித்து, பசு மூத்திரம் குடிக்க வைக்கும் நிகழ்வுகளை நடத்தியது. அண்மையில் குஜராத் மாநில நீதிபதி சமீர் வியாஸ், ‘மருந்துகளால் குணப்படுத்த முடியாத பல நோய்களை பசு மூத்திரம் குடித்து குணப்படுத்தலாம்‘ என தீர்ப்பில் கூறியிருந்தார்.

இப்படி எல்லாம் பசு மூத்திரத்திற்கு புனிதம் கற்பித்து வந்த இந்துத்துவ வாதிகள், இந்த ஆய்வு முடிவுகளுக்கு எல்லாம் அஞ்சப்போவதில்லை. தாங்கள் சொல்வதுதான் அறிவியல் என பொய்யும் புனைவுமாக அடித்து விடுவார்கள்.

### ஆன்லைன் அபராதத்தை கைவிடக் கோரி

## ஆட்டோ தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்






ஆன்லைன் மூலம் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் அபராதம் விதிக்கும் முறையினை போக்குவரத்து காவல்துறையினர் கைவிட வேண்டும்,

புதிய மோட்டார் வாகன திருத்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டும்,

ஆட்டோ ஓட்டுனர் அனைவரும் நல வாரியத்தில் பதிவு செய்வதை உறுதிப்படுத்த தொழிலாளர் துறை முகாம்கள் நடத்த வேண்டும்,

58 வயது கடந்த ஆட்டோ ஓட்டுனர் அனைவருக்கும் ரூபாய் 6000 ஓய்வூதியம் வழங்க வேண்டும்,

எளிய மக்கள் பயன்படுத்தும் ஆட்டோக்களுக்கு பயன்படும் பெட்ரோல், டீசல், எரிவாயு சிலிண்டர்களுக்கு மானியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஏப்.11 அன்று தமிழ்நாடு ஆட்டோ தொழிலாளர் சம்மேளனம்(ஏஐடியூசி) தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

**திருப்பூர்:** திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மோட்டார் சங்கத்தின் மாவட்ட தலைவர் வி.எஸ்.சசிகுமார் தலைமை தாங்கினார். ஏஐடியுசி அகில இந்திய துணைத் தலைவர் கே.சுப்பராயன் எம்பி, ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.ஆர்.நடராஜன், மாவட்ட தலைவர் மோகன், மோட்டார் சங்க பொதுச் செயலாளர் கே.சுரேஷ் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர்.

ஆர்ப்பாட்டத்தில் சிபிஐ மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, ஏஐடியுசி மாநிலச் செயலாளர் என்.சேகர், ஏஐடியூசி மாவட்ட பொருளாளர் வி.சௌந்தரராஜன் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட ஆட்டோ ஓட்டுநர்கள் கலந்து கொண்டனர்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் தலைமை அஞ்சலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் எஸ்.பாலகிருஷ்ணன், மாவட்ட செயலாளர் இரா.செந்தில் நாதன் ஆகியோர் தலைமை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தினை ஏஐடியுசி தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.சந்திரகுமார் துவக்கி வைத்து உரையாற்றினார். மாநில செயலாளர் ஆர்.தில்லைவனம் ஆர்ப்பாட்டத்தினை நிறைவு செய்து உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியுசி மாவட்ட தலைவர் வெ.சேவையா, மாவட்ட செயலாளர் துரை. மதிவாணன் உள்ளிட்டோர் பங்கேற்று கண்டன உரையாற்றினர்.

**செங்கல்பட்டு:** செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி பேருந்து நிலையம் அருகில் மாவட்ட ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்திகள் ஓட்டுநர்கள் சங்கத்தினர் மாவட்ட துணை செயலாளர் இரா. சுப்பிரமணியம் தலைமையில் கோரிக்கை கோஷங்களை முழங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் எம்.ஜஹாங்கீர் ஆர்ப்பாட்டத்தினை துவக்கி வைத்தார்.

ஆட்டோ சங்க மாவட்ட செயலாளர் க.ஜெகதீசன் முடித்து வைத்து நிறைவுரை யாற்றினார்.

**பரமக்குடி:** பரமக்குடி எமனேஸ்வரத்தில் ஏஐடியூசி ஆட்டோ தொழிற்சங்கத்தின் சார்பில் மாபெரும் கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் அம்மன் ஆட்டோ சங்கத்தின் பொறுப்பாளர் கே முனியசாமி தலைமையில் நடைபெற்றது. ஜி.பாஸ்கர், கே.ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆட்டோ தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் ஏஐடியூசி தொழிற்சங்க பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் என். கே.ராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் என்.எஸ். பெருமாள், ஏஐடியூசி மாவட்ட தலைவர் எஸ்.பி.ராதா உள்ளிட்ட தோழர்கள் பேசினர்.

## கலை இலக்கிய அரங்கம்



### நூல் விமர்சன கூட்டம்

த.க.இ.பெ விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் கிளையில் கண்மணி ராசா எழுதிய ‘என் பெயரெழுதிய அரிசி’ கவிதை நூல் விமர்சன கூட்டம் ஏப்.2 அன்று வயமா பள்ளியில் நடைபெற்றது. ஏராளமான பெண் கவிஞர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் கவிஞர் கண்மணி ராசா ஏற்புரை வழங்கினார்.

### பல்லாவரத்தில் புதிய கிளை

காஞ்சிபுரம் மாவட்டம் பல்லாவரத்தில் த.க.இ.பெ புதிய கிளை ஏப். 2ல் துவக்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் கவிஞர். இராமலிங்கம் கிளையை துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார். மாவட்டத் தலைவர் ஜீவா மணிக்குமார் வாழ்த்து கூறினார். கிளைச் செயலாளராக மருத்துவர் ஏ.ஆர்.சாந்தி, தலைவராக எஸ்.தனவந்தன், பொருளாளராக பி.காளிதாசன் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

### பறை இசை பயிற்சி முகாம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், காஞ் சிபுரம் மாவட்டம் சிங்கப்பெருமாள் கோவில் கிளை சார்பில் இரு நாள் பறை இசை பயிற்சி முகாம் மார்ச் 25, 26 தேதிகளில் நடைபெற்றது. இலக்கிய பேராசான் தோழர் ஜீவா அவர்களின் மகன் ஜீவாமணிக்குமார் நிகழ்வை துவக்கி வைத்தார். மையம் கலைக்குழுவின் தோழர்கள் இரண்டு நாட்களும் பயிற்சியை நடத்தினர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் ராஜ்குமார் த.க.இ.பெ மாநில செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.நடராஜன், கிளைச் செயலாளர் தேவா நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

### வேதாரண்யத்தில் புதிய கிளை

நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் த.க.இ.பெ சிறப்பு கூட்டம் ஏப். 7 அன்று நடைபெற்றது. மாவட்டத் தலைவர் புயல் குமார், மாவட்டச் செயலாளர் தென்னாடார் அம்பிகாபதி, மாநிலக் குழு உறுப்பினர் எம்.ஆர்.சுப்பிரமணியம் கலந்து கொண்டனர். கிளையின் தலைவராக இள.தொல்காப்பியன், செயலாளர் த.குழந்தைவேலு, பொருளாளர் சு.பாலாஜி தேர்வு செய்யப்பட்டனர்.

### நூல் வெளியீட்டு விழா

த.க.இ.பெ மாநிலக் குழு உறுப்பினர் கவிஞர். நான்சி கோமகன் குழந்தைகளுக்காக கதை வடிவில் எழுதிய ‘வளையாபதி’ நூல் வெளியீட்டு விழா ஏப்.9 அன்று திருப்பூரில் நடைபெற்றது. நொய்யல் இலக்கிய மையம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

## சூயஸ் குடிநீர் விநியோகத் திட்டத்தை ரத்து செய்யக்கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மனு

கோயம்புத்தூர் மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் சூயஸ் குடிநீர் விநியோகத் திட்டத்தை ரத்து செய்யக்கோரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களிடம் மனு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம். எக்ஸ்.எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், மாவட்ட துணைச் செயலாளர் ஜே.ஜேம்ஸ், மேற்கு மண்டலச்செயலாளர் என்.சந்திரன், 41 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருத்துறைப்பூண்டியில்
## ஜனசக்தி, தாமரை சந்தா சேர்ப்பு திட்டமிடல் சிறப்பு கூட்டம்

**100 ஆண்டு சந்தாக்கள் வழங்கப்பட்டன**



திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் 2023 ஆம் ஆண்டிற்கான ஜனசக்தி மற்றும் தாமரை சந்தா சேர்ப்பு திட்டமிடல் சிறப்புக்கூட்டம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்ட குழுவின் சார்பில் திருத்துறைப்பூண்டியில் நடைபெற்றது.

கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் கலந்து கொண்டார். சிறப்பு கூட்டத்திற்கு கட்சியின் மாவட்ட செயலாளர் வை. செல்வராஜ் தலைமையேற்று நடத்தினார். மாவட்டத்திற்கு 2600 ஆண்டு சந்தாக்களும், 200 ஆயுள் சந்தாக்களும், 500 தாமரை ஆண்டு சந்தாக்களும் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

**முதல்கட்டமாக திருத்துறைப்பூண்டி ஒன்றிய குழுவின் சார்பில் 100 ஆண்டு சந்தாக்களும், 25 ஆயுள் சந்தாக்களும், 25 தாமரை ஆண்டு சந்தாக்களும் பதிவு செய்யப்பட்டு அதற்கான தொகை மாநில செயலாளரிடம் வழங்கப்பட்டது.**

**திருத்துறைப்பூண்டி நகரக் குழுவின் சார்பில் 25 ஆண்டு சந்தாக்களும், கொரடாச்சேரி 20, முத்துப்பேட்டை 10 ஆண்டு சந்தாக்கள் வழங்கப்பட்டன.**

**மாவட்டத்தின் சார்பில் மொத்தமாக 155 ஆண்டு சந்தாக்கள் பதிவு செய்யப்பட்டு மாநிலசெயலாளரிடம் வழங்கப்பட்டது.**

கூட்டத்தில் கட்சியின் தேசிய குழு உறுப்பினர் வை.சிவபுண்ணியம் எக்ஸ்.எம்.எல்.ஏ., மாநில கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் கோ. பழனிச்சாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலபொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி, கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., அ.பாஸ்கர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் மற்றும் ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர், கட்சியின் மாவட்ட துணை செயலாளர் எஸ்.கேசவராஜ் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்தனர். நகர பொறுப்பாளர் எஸ்.குமார் நன்றி கூறி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

## த.வி.தொ.ச. வத்திராயிருப்பு வட்ட மாநாடு




விருதுநகர் மாவட்டம் குன்னூர் வீரபத்திரன் திருமண மண்டபத்தில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க வத்திராயிருப்பு வட்ட மாநாடு நடைபெற்றது. இராமதாசு தலைமை வகித்தார். சிபிஐ தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி ,மாவட்ட செயலாளர் பி.லிங்கம், பொன்னுபாண்டியன், வட்ட செயலாளர் கோவிந்தன் ஆகியோர் உரையாற்றினர். தலைவராக இராமதாசு, செயலாளராக மணிக்குமார், பொருளாளராக கூடலிங்கம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். 100 நாள் வேலைக்கு அதிக நிதி மற்றும் அதிக நாள் ஒதுக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## மீஞ்சூர் ஒன்றிய மாநாடு

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஒன்றிய மாநாடு வாயலூர் சமுதாயக் கூடத்தில் நடைபெற்றது. மாநாட்டை இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பி.வி.செந்தில் துவக்கி வைத்தார். சங்கத்தின் மாவட்டத் துணைத் தலைவர் கே.வி.செங்கொடிச் செல்வன் சிறப்புரையாற்றினார். சி.பி.ஐ. மீஞ்சூர் ஒன்றியச் செயலாளர் எம்.பார்த்திபன், வாயலூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஜி.கோபி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

அதானியின் காட்டுப்பள்ளி துறைமுக விரிவாக்கத்திற்காக அரசு தரிச நிலங்களை விவசாயிகளிடமிருந்து பறிக்காதே என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஒன்றிய தலைவராக குடியரசு, செயலாளராக ஜி.அகல்யா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

### பணி நிரந்தரம், ஊதிய உயர்வு கோரி
# டயாலிசிஸ் டெக்னீசியன்கள் ஆர்ப்பாட்டம்




கடந்த 2021 ஆண்டு மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமிக்கப்பட்ட 160 டயாலிசிஸ் டெக்னிசியன்களை, முதல்வர் மருத்துவக் காப்பீடு மூலம் அவுட்சோர்சிங் முறைக்கு தமிழ்நாடு அரசு மாற்றியுள்ளதை உடனடியாக கைவிடவேண்டும்.

அது மட்டுமின்றி, அவர்களின் ஊதியமும் ரூபாய் 20 ஆயிரத்திலிருந்து 8 ஆயிரமாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த ஊதியக் குறைப்பு நியாயமற்றது. குறைந்த பட்ச ஊதிய சட்டத்திற்கு எதிரானது. எனவே, உடனடியாக ஊதிய உயர்வும் வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் சென்னை மாவட்ட ஆட்சியரகம் அருகில் ஏப்.12 அன்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, தமிழ்நாடு டயாலிசிஸ் டெக்னிஷியன்கள் நலச்சங்கங்கத்தின் மாநிலத் தலைவர் பி.வி.செந்தில் குமார் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு மருத்துவத் துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி ஆர்ப்பாட்டத்தை தொடக்கி வைத்து உரையாற்றினார்.

கூட்டமைப்பின் மாநில செயல் தலைவர் பி.காளிதாசன், பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச்சங்கத்தின் மாநில துணைத் தலைவர் எஸ்.தனவந்தன், பி.புருசிலி, பி.மணிவேல் மற்றும் நிர்வாகிகள் கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினர்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து உரையாற்றினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 150 க்கும் மேற்பட்ட டயாலிசிஸ் டெக்னீசியன்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் சங்க மாவட்ட மாநாடு

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் சங்க செங்கல்பட்டு மாவட்ட மாநாடு திருப்போரூர் தண்டலம் பகுதியில் மா.முருகன் மற்றும் பி. அன்பரசு தலைமையில் நடைபெற்றது. சிபிஐ மாநிலக்குழு உறுப்பினர் டாக்டர் ஆர்.சாந்தி சங்க கொடி ஏற்றினார்.

சிபிஐ மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணை செயலாளர் நா.பெரியசாமி, கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் ஜி.பழனிசாமி, முன்னாள் மாவட்டச் செயலாளர் எல்.மேகநாதன், செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார், மாவட்ட துணை செயலாளர் வி.வீராசாமி, காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் ப.கார்த்திக் உள்ளிட்டோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். ஜனசக்தி வார இதழின் ஆண்டு சந்தா தொகையை மாநில செயலாளரிடம் மாவட்ட ஜனசக்தி பொறுப்பாளர் கே.வி.சேகுவேராதாஸ் வழங்கினார்.

## நிலக்கரி சுரங்க ஏல அறிவிப்பை நீக்காவிட்டால் மே மாதம் போராட்டம்

**காவேரி படுகை பாதுகாப்பு கூட்டு இயக்கம் முடிவு**

தஞ்சாவூரில் ஏப்.9 அன்று காவிரி படுகை பாதுகாப்பு கூட்டியக்கத்தின் கூட்டம் நடந்தது. தமிழ்நாடு அரசின் கருத்தறியாமல், குறிப்பாக சட்டமன்ற தீர்மானத்தின் மூலம் அமையப்பெற்ற காவிரி டெல்டா வேளாண் பாதுகாப்பு மண்டலத்தில் நிலக்கரி சுரங்கங்கள் அமைக்க ஒப்பந்த புள்ளி கோரி இருப்பது என்பது கண்டிக்கத்தக்கது. உடனடியாக தமிழக த்தில் எழுந்த எதிர்ப்பு மற்றும் தமிழக முதல்வரின் வலியுறுத்தலின் காரணமாக ஒன்றிய சுரங்கத் துறை அமைச்சர் இத்திட்டத்தை கைவிடுவதாக அறிவித்துள்ளார். இதற்கு காரணமான தமிழக முதல்வருக்கு கூட்டத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை அதிகாரப்பூர்வமாக செயல்படுத்திட, சுரங்க ஏல திட்டத்திலிருந்து இதை நீக்கி ஏப்ரல் மாத இறுதிக்குள் வெளியிட வேண்டும். இல்லையேல் மே மாதம் கூட்டியக்கம் கூடி தொடர் போராட்டத்தை நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள்சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் பி.சண்முகம், பொதுச்செயலாளர் சாமி. நடராஜன் மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தஞ்சை மாவட்ட தலைவர் வீர.மோகன், தேசிய குழு உறுப்பினர்கள் பி.மாதவன், அ.பன்னீர்செல்வம் மற்றும் மாவட்ட செயலாளர்கள், தலைவர்கள் மற்றும் பிற சங்க பொறுப்பாளர்கள் பெருமளவில் பங்கு கொண்டனர்.

### தூய்மைக் காவலர்களுக்கு ஊதிய உயர்வு
## தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி!

**ஈரோடு மாவட்ட ஏஐடியூசி தொழிலாளர் சங்கம் தீர்மானம்!**

சத்தியமங்கலம், ஜீவா அரங்கத்தில், தாளவாடி, சத்தியமங்கலம், பவானிசாகர் ஆகிய ஒன்றியங்களைச் சேர்ந்த கிராம ஊராட்சி தூய்மைக்காவலர் சங்கத்தின் கூட்டம், சங்கத்தின் தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சங்க நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர். மாவட்ட சங்க நிர்வாகி கே.சக்திவேல் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:

"திடக் கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் சுமார் 66,000 தூய்மைக்காவலர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் வெளி முகமை அடிப்படையில் எவ்வித பணிப்பாதுகாப்பு மற்றும் சட்ட பாதுகாப்புகளுமின்றி பணியாற்றுகிறார்கள். கொரோனா நோய்த்தொற்று காலத்தில் இத்தொழிலாளர்கள் எவ்வித எதிர்பார்ப்புமின்றி செய்த சேவையை உலகமே பாராட்டியது. ஆனால் இத்தொழிலாளர்கள் மாதம் 3600 ரூபாயை மட்டுமே ஊதியமாக பெற்று வந்தனர்.

ஏஐடியூசி தொழிலாளர் சங்கமும், ஏஐடியூசி சங்கத்தின் மூத்த தலைவரும், நடாளுமன்ற உறுப்பினருமான கே.சுப்பராயன் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு தூய்மைக்காவலர்களின் மாத ஊதியத்தை 3600லிருந்து 5000ஆக உயர்த்தி அறிவித்துள்ளது.

இதற்காக தமிழ்நாடு முதலமைச்சருக்கு சங்கம் தனது நன்றியையும்,பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறது.

அதே சமயம் இத்தொழிலாளர்களை பணிநிரந்தரம் செய்து கால முறை ஊதியம் வழங்க வேண்டுமெனவும், அதுவரை மாதம் 21000 ரூபாயை தொகுப்பூதியமாக வழங்க வேண்டுமெனவும் தமிழ்நாடு அரசை சங்கம் வேண்டுகிறது."

## புரட்சியாளர் ஜோதி ராவ் பூலே பிறந்தநாள் ஏப்.11

உலகத்தின் ஆகப்பெரிய சாதனைகளுக்கெல்லாம் அவமானங்களே ஆணிவேராக இருந்திருக்கின்றன. அகிலத்தையே புரட்டிப்போட்ட அத்தனைப் புரட்சிகளையும் தோண்டி எடுத்து பார்த்தால், அவற்றின் அடி நாதமாக அவமானம் இருப்பதைக் காணமுடியும். ஆம்... அவமானத்தின் வலிகளால் நிரம்பி வழிந்த அந்தக் கணங்களில்தான் இந்திய தேசத்தினுடைய சமூகப் புரட்சியின் தந்தை என்றழைக்கப்படும் மகாத்மா ஜோதிராவ் புலே உருவானார்.

மாற்றத்திற்காக எழுதிக்குவித்தவர்!

ஜோதிராவ் சமூகப் புரட்சியாளர் மட்டுமல்ல; ஏராளமாக எழுதி குவித்திருக்கும் எழுத்தாளர்; கவிஞர். ஜாதி ஒழிப்பு, கல்வி, தாழ்த்தப்பட்டோருக்கான ஆலோசனைகள் போன்றவை குறித்த நூல்கள், துண்டு பிரசுரங்கள், கையேடுகளை ஏராளமாக வெளியிட்டார். பாடல்கள் மூலம் எளிய மக்களிடம் சீர்திருத்த கருத்துகளைக் கொண்டு சேர்க்க முடியும் என்று நம்பி, நிறைய பாடல்களை எழுதினார். பிற்கால இந்திய வரலாற்றில் புரட்சியாளர்களுக்கும் தேசபக்தர்களுக்கும் பெரும் ஊக்கச் சக்தியாக திகழ்ந்த வீர சிவாஜியின் புகழை ஆங்கிலேய ஆட்சியில் பாடிய முதல் கவிஞர் ஜோதிராவ் தான்.

# தோழர் பி.சீனிவாசராவ் 118வது பிறந்தநாள்



## இரா.முத்தரசன் பங்கேற்பு

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் மறைந்த தோழர் பி. சீனிவாசராவ் 118 வது பிறந்த தின நிகழ்ச்சி நடைபெற்றது.

பி.எஸ்.ஆர். மணிமண்டபத்தில் அவரது உருவப்படத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., மாநிலக் குழு உறுப்பினர் கே. உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., அ.பாஸ்கர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் மற்றும் கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பி.வி.சந்திரராமன், இரெ.ஞானமோகன், கே.ஆர்.ஜோசப், கே.ராஜா, வி.ஜவஹர் ஒன்றிய செயலாளர், மாவட்டக் குழு உறுப்பினர்கள் எம்.முருகேசன், வி.முத்துக்குமரன், டி.பி.சுந்தர் நகர செயலாளர் மற்றும் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு பி.எஸ்.ஆர். உருவப்படத்திற்கு மரியாதை செலுத்தினர்.

முன்னதாக அரசின் சார்பில் சுதந்திர போராட்ட வீரர் பி.சீனிவாசராவ் அவர்களுக்கு திருவாரூர் மாவட்ட அதிகாரிகள், கிராம நிர்வாக அதிகாரிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**தென்காசி மாவட்டம்:** தென்காசி மாவட்டம் சிவகிரியில் பி. சீனிவாசராவ் பிறந்தநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. விவசாய சங்க, விவசாய தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# தேசத்தை பாதுகாப்போம்: கண்டனப் பொதுக்கூட்டம்



தேசத்தை பாதுகாப்போம் பாஜக ஆட்சியை அகற்றுவோம் என்ற முழக்கத்துடன் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி கட்சிகள் பங்கேற்ற கண்டன பொதுக்கூட்டம் அம்பத்தூர் பகுதி குழு செயலாளர் இரா. விஜயகுமார் தலைமையில் ஏப். 6 அன்று கொரட்டூர் பஸ் நிலையம் அருகில் நடந்தது.

மாவட்ட துணைச் செயலாளர் பி.மாரியப்பன் வரவேற்புரை ஆற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் கண்டன உரை நிகழ்த்தினார்.

தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் பி.கே. மூர்த்தி, அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் எம்.டி. ஆர்.நாகராஜ் மற்றும் திமுக 84 ஆவது வட்டச் செயலாளர் மு.விஜயகுமார், காங்கிரஸ் நிர்வாகிகள் இ. மோகன் குமார், இரா.மோகனரங்கம், பி.டி. ரோமியோ, மதிமுக நிர்வாகி எம்.தாமோதரன், சிபிஎம் மாவட்ட குழு உறுப்பினர் சு.லெனின் சுந்தர், விசிக நிர்வாகிகள், மனிதநேய மக்கள் கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி, ஏஐடியூசி மாநில துணைத் தலைவர் ஏ.எஸ்.கண்ணன் எக்ஸ் எம்எல்ஏ, ஏஐடியூசி கட்டிட தொழிலாளர் சங்கம் மாநில செயலாளர் ஆர்.துரைசாமி, எம்.பி. ஜெகநாதன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

# செறிவூட்டப்பட்ட அரிசியை மக்களிடம் திணிக்காதே! 2023 செப்டம்பரில் மாநில மாநாடு

## தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலக்குழு முடிவு

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின்மாநில நிர்வாக குழு, மாநிலக் குழு சிவகங்கையில் இராமநாதன் நினைவகத்தில் மாநில தலைவர் எஸ்.குணசேகரன் முன். எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், மாநில செயற்குழு உறுப்பினர் வை.சிவபுண்ணியம் பங்கு கொண்டு இன்றைய அரசியல் நிலைகள் குறித்தும், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் அமைப்பு நிலை கடமைகள் குறித்தும் உரையாற்றினர்.

சி.பி.ஐ.மாவட்டசெயலாளர் எம்.கண்ணகி, வி.ச. மாவட்ட செயலாளர் ஜி.காமராஜ், மாநிலத் துணைத் தலைவர்கள் எம்.லகுமய்யா, சி. எம்.துளசிமணி மற்றும் கே.உலகநாதன் முன்.எம்.எல்.ஏ., தேசியக்குழு உறுப்பினர்கள் இரா.முல்லை, அ. பன்னீர்செல்வம், பி.மாதவன் மற்றும் மாநில நிர்வாக குழு மாநிலக் குழு உறுப்பினர்கள் பங்கு கொண்டனர்.

வேளாண் நிதி நிலை அறிக்கை மற்றும் வேளாண் பொது குறிப்புகளை சங்க செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி அறிக்கையாக முன்வைத்து ஏற்கப்பட்டது. பின்கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

2023 செப்டம்பரில் மாநில மாநாட்டை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

பன்றித் தொல்லைகளை கட்டுப்படுத்த வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தில் இருந்து காட்டுப்பன்றிகளை நீக்கிட வேண்டும்.

மேலும் வனவிலங்குகளால் பாதிக்கப்படும் வேளாண்மை பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கிட வேண்டும். ஒன்றிய அரசே செறிவூட்டப்பட்ட அரிசியை திணிக்காதே; தமிழக அரசே விநியோகத்தை நிறுத்திடு!

ஊட்டச்சத்து குறைபாட்டை குறைத்திட நமது பாரம்பரிய உணவுகளை பயன்படுத்திட சிறப்பு திட்டம் கொடுத்தாலே போதும்.

பொது வெளியில் எந்த அறிவியல் பூர்வமான ஆய்வும் செய்யாமல், கருத்து கேட்பு ஏதும் இல்லாமல் நுகர்வோர் உயிரோடு ஒன்றிய அரசு விளையாடக் கூடாது. இந்த செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத்தை உடனடியாக நிறுத்திட வேண்டும்.

உரிய அளவு பருவ மழையின்மையால் தென்மாவட்டங்கள் வறட்சி பாதிப்பு என அறிவித்து நிவாரணம் வழங்கிட வேண்டும்.

அரசு கையகப்படுத்தும் நிலங்களுக்கு ஐந்து மடங்கு இழப்பீடு மற்றும் தகுதிக்குரிய நிரந்தர பணிவாய்ப்பு வழங்கிடவேண்டும்.

ஆவின் நிறுவன பால் கொள்முதல் விலையை ரூ.10 உயர்த்தி கொள்முதல் செய்திட வேண்டும்.

மா மர விளைச்சலை பாதித்த கல்டர் மருந்தை தடை செய்து, மகசூலை இழந்துள்ள விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கிட வேண்டும்.

காவிரி, வைகை, குண்டாறு நதிநீர் இணைப்பு திட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து விரைவில் முடித்திட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காஞ்சிபுரத்தில்

# கைத்தறி நெசவாளர்கள் ஆர்ப்பாட்டம்




காஞ்சிபுரம் மாவட்ட கைத்தறி நெசவாளர் சங்கம் (ஏஜடியுசி) சார்பில் மாவட்ட செயலாளர் ஏ.மூர்த்தி தலைமையில் காஞ்சிபுரத்தில் நடைபெற்றது.

தலைவர் எஸ்.வி.சங்கர் முன்னிலை வகித்தார். மாவட்ட துணை செயலாளர் எல்.தங்கராஜ் துவக்கி வைத்தார். பி.வி. சீனிவாசன், டி.கங்காதரன், எம்.காவேரி, பாண்டியன், பாஞ்சாலை கோபி மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் மாவட்ட ஆட்சியரை சந்தித்து அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவில்,

வீடு இல்லாத நெசவாளர்களுக்கு அரசு தொகுப்பு வீடு கட்டித் தர வேண்டும், மாதந்தோறும் ரூ.6 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும், கைத்தறிக்கு என ஒதுக்கப்பட்ட ரகங்களை விசைத்தறியில் புகுத்தக் கூடாது, கூட்டுறவு சங்க முறைகேடுகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு

# ரம்ஜான் போனஸ் உடன்பாடு!

ஈரோடு வி.பி.ஆர். காலேஜ் பீடி கம்பெனிக்கும், ஏஐடியூசி தொழிற் சங்கத்திற்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ரம்ஜான் பண்டிகை போனஸ் உடன்பாடு ஏற்பட்டது.

2022–2023 ஆம் ஆண்டுக்கான போனஸாக, அனைத்து பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கும், 1000 பீடிகளுக்கு ரூ.30 வீதம் கணக்கிட்டு வழங்கப்படும். இந்த போனஸ் தொகை ரம்ஜான் பண்டிகைக்கு ஒரு வாரத்திற்கு முன்பாக வழங்கப்படும். இது கடந்த ஆண்டைவிட 1000 பீடிகளுக்கு ரூ.2 கூடுதலாகும்.

தகுதியான அனைத்து தொழிலாளர்களையும் பி.எப். மற்றும் ஈ.எஸ்.ஐ. திட்டத்தில் சேர்க்க வேண்டும், 1948ஆம் ஆண்டின் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ், தொழிலாளர் துறை ஆணையர், சென்னை அவர்கள் அறிவித்துள்ள, 2023–2024 ஆம் ஆண்டுக்கான அகவிலைப்படி (டி.ஏ) உயர்வான, 1000 பீடிகளுக்கு ரூ. 8.94 ஐ 1.4.2023 முதல் அனைத்து பீடித் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதுள்ளிட்ட சங்கத்தின் கோரிக்கைகள் குறித்தும் விவாதித்து முடிவுகள் எடுக்கப்பட்டன.

இப்பேச்சு வார்த்தையில் ஏ.ஐ.டி.யூ.சி. சார்பில் சங்கப் பொதுச்செயலாளர் எஸ்.சின்னசாமி, சங்க துணைத் தலைவர்கள் கே.எம்.யூசுப், ஏ.ஜிலானி, சங்க செயலாளர்கள் கே.எச்.அஷ்ரப் அலி, எம்.மன்சூர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# போக்குவரத்து ஏ.ஐ.டி.யூ.சி. ஆர்ப்பாட்டம்




மணப்பாறை, துவாகுடியில் அரசு போக்குவரத்து கழக ஆளும் சங்க நிர்வாகிகளின் அத்துமீறல்களை கண்டித்து ஏ.ஐ.டி.யூ.சி.சார்பில் ஆர்ப்பாட்ட வாயிற்கூட்டம் இருபகுதிகளின் பணிமனை முன்பு நடைபெற்றது.


மணப்பாறை பணிமனை முன்பு நடைபெற்ற வாயிற்கூட்டத்திற்கு ஏ.ஐ.டி.யூ.சி. கிளை தலைவர் சரவணன் தலைமை வகித்தார்.

போக்குவரத்து கழக ஏ.ஐ.டி.யூ.சி. மாநில துணைப் பொதுச் செயலாளர் சுப்ரமணியன், மாநில பொருளாளர் நேருதுரை, உள்ளாட்சி ஏ.ஐ.டி.யூ.சி.சங்க திருச்சி மாவட்ட செயலாளர் த.இந்திரஜித், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் ஜனசக்தி உசேன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

துவாக்குடி

துவாக்குடி பணிமனை முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கிளையின் தலைவர் சுந்தரவேலு தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார், திருவரம்பூர் ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி, துணை செயலாளர் ராதாகிருஷ்ணன், பி.ஹச்.ஈ.எல் ஏ.ஐ.டி.யூ.சி, கங்காதரன், ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளரும், மாமன்ற உறுப்பினருமான சுரேஷ், மாவட்ட பொருளாளர் ராமராஜ் சி.ஐ.டி.யூ சண்முகம் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

## கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை பயில்வதற்கான குறிப்புக் கையேடு




மார்க்சிய தத்துவ ஆசான்கள் காரல் மார்க்ஸ், எங்கல்ஸ் இணைந்து ,கம்யூனிஸ்ட் லீக் என்ற அமைப்பின் வேலை திட்டமாக எழுதிய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை, இன்றைய இளம் தலைமுறையினர் எளிதாக புரிந்து கொள்வதற்காக மார்க்சிய அறிஞர் தேவ பேரின்பன் அவர்களால் எழுதப்பட்ட நூல் இது.

நவீன கால கம்யூனிஸ்ட் இயக்கம் முழுவதற்கும், உலகெங்கும் உள்ள கம்யூனிஸ்டுகள் அனைவருக்கும் இந்த அறிக்கையே அடிப்படையான முதல் தத்துவ ஆவணமாய் திகழ்கிறது. அறிக்கையின் பொது சிந்தனை போக்கே அனைத்து கம்யூனிஸ்ட் கட்சிகளின் தேசிய வேலை திட்டங்களுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. கம்யூனிசத்தை நோக்கிய மனித குலத்தின் வரலாற்று பயணத்தை மார்க்சியம் இந்த அறிக்கை மூலம் துவக்கி வைத்தது.

மார்க்சும், எங்கல்சும் அவர்கள் வாழ்ந்த காலத்தில் இருந்த கற்பனைவாத சோசலிசம், முதலாளிய அரசியல் பொருளாதாரம், ஜெர்மனிய தத்துவங்கள் ஆகியவற்றை விமர்சன பூர்வமாக ஆராய்ந்து. விஞ்ஞான சோசியலிசத்திற்கான அடிப்படைகளை உருவாக்கினார்கள். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை .மார்க்சிய உலக கண்ணோட்டத்தை மேதமைத்தன்மையோடு விளக்கும் நூலாகும். அது சமூக வளர்ச்சியை பற்றிய இயக்கவியல் பொருள் முதல் வாதத்தை சிறப்பாக எடுத்துரைக்கிறது. வர்க்க போராட்டம் குறித்த புரட்சிகர தத்துவத்தை முழுமையாக எடுத்துரைக்கிறது. கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் படைப்பாளியாக பாட்டாளி வர்க்கத்தை அடையாளம் காட்டி, அதன் வரலாற்று பாத்திரத்தை வலியுறுத்துகிறது. கம்யூனிசத்தின் அடிப்படை கோட்பாடுகளை வரவேற்கிறது.

உலகை மாற்றியமைப்பது குறித்த நோக்கை நிறைவேற்றும் வகையில், தத்துவத்துக்கும், நடைமுறைக்குமான ஒற்றுமை வலியுறுத்தப்படுகிறது. இதன் வழியே கட்சி அறிக்கை கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு உலகு தழுவிய இருப்பையும் நெடிய வரலாற்றுப் பயணத்தையும், இனிவரும் வரலாற்று சகாப்தங்களிலும் தலைமை ஏற்று செயல்புரியும் தன்மையும் அளித்துள்ளது. அனைவரும் வாங்கி படிக்கவும்.

– இன்சுவை பாரதி

நூலாசிரியர் : தேவ பேரின்பன்
பக்கம் : 16 விலை : 20
வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50

## நூல் நயம்

## சிங்காரவேலரும் பகுத்தறிவும்




இந்தியாவின் தலைசிறந்த பகுத்தறிவாளர்களில் மிக முக்கியமானவர் சிந்தனை சிற்பி சிங்காரவேலர் ஆவார். தமிழ் சமுதாயத்தில் புற்றுநோய் போல் புரையோடிப் போயிருந்த சாதி பேதங்களையும், மூட பழக்க வழக்கங்களையும்,இறை நம்பிக்கையும் எதிர்த்து பிரச்சாரம் செய்தார். பல்வேறு கட்டுரைகளையும் எழுதி உள்ளார். இவர் தாக்கம் தமிழ் சமூகத்தில் மிக அதிகமாக இருந்துள்ளது.

பிறர்க்கென வாழ்ந்த சிங்காரவேலர் ஆங்கில ஆட்சி காலத்தில் பிறந்து, அந்த ஆட்சியை எதிர்த்து பல போராட்டங்களை நடத்தியவர். தொழிலாளர் உரிமைகளுக்காக உரத்து முழங்கியவர். 21ம் நூற்றாண்டிலும் கூட நமது மக்கள் ஜாதி, மதம் என கட்டுண்டு கிடக்கிற இந்த காலத்தில். 150 ஆண்டுகளுக்கு முன்னால் அவற்றை எதிர்த்து கேள்வி எழுப்புவது என்பது சாதாரணமான விஷயம் அல்ல. ஆனால் துணிந்து பகுத்தறிவு பிரச்சாரத்தில் ஈடுபட்டவர் சிங்காரவேலர் ஆவார். இந்திய தேசிய காங்கிரஸ் தனது வேலை திட்டங்களில் ஒன்றாக சமதர்மத்தை சேர்த்துக்கொண்டு அதற்கென உழைக்க வேண்டும் என்று 1921 லே உலகறிய காந்தியருக்கு பரிந்துரைத்தவர் சிங்காரவேலர் ஆவார். சுதந்திரம், சமதர்மம், சமத்துவம் ஆகிய இம்மூன்றும் ஒன்றிணைந்தவை ஆகும். இவற்றில் எந்த ஒன்றையும் இழந்து நல்வாழ்வு வாழ இயலாது. இம்மூன்றையும் இயக்குவது பகுத்தறிவை என உரத்து முழங்கியவர் சிங்காரவேலர்.

“பல துறை அறிவு பெற்று, பன்முகத் தொண்டாற்றிய சிங்காரவேலர் சிறந்த பகுத்தறிவுவாதியாக வாழ்ந்ததை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். மந்திரத்தால் மாங்கா விழாது. பேய், பிசாசு புரட்டு என்பதை அவர் அறிவியல் அடிப்படையில் விளக்குகிறார். அவற்றை பொதுமக்களுக்கு அறிமுகம் செய்யவும் வேண்டும்“ என கல்வியாளர் நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள் தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தெள்ளிய அறிவின் கலங்கரை விளக்கமாக திகழ்ந்த சிங்காரவேலரின் பகுத்தறிவு பார்வை இன்றைய சமூகத்தின் மாற்றத்திற்கு மிக மிக தேவை. சிறந்த இந்நூலை நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள் எழுதியுள்ளார் அனைவரும் வாங்கி படிக்கவும்

–சமரன்

நூலாசிரியர் : நெ.து.சுந்தரவடிவேலு
பக்கம் : 64 விலை: 100
வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50

சுழலும் உலகம்

## ரஷ்யாவிடம் சரணடைந்த தனது சொந்த வீரர்களைக் கொன்றது உக்ரைன்

ரஷ்யாவிடம் சரணடைந்த தனது நாட்டு வீரர்களை உக்ரைன் ராணுவம் குண்டுகளை வீசிக் கொலை செய்த அதிர்ச்சியான தகவல்கள் வெளியாகியுள்ளன. உக்ரைன் மீதான போரில் ரஷ்யா தொடர்ந்து முன்னேறி வருகிறது. சில பகுதிகள் ரஷ்ய வசம் வந்துள்ளன. அமெரிக்காவும், ஒட்டு மொத்த ஐரோப்பாவும் ஆயுதங்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றன.

மேலும் ஆயுதங்கள் தேவை என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கோரி வரு கிறார். அதற்கும் நிதி ஒதுக்கீடு செய்ய இந்த நாடுகள் தயார் நிலையில் உள்ளன.

இந்நிலையில், உக்ரைனின் அவ்டீவ்கா நகருக்கு அருகில் ரஷ்யா மற்றும் உக்ரைன் படைகளுக்கு இடையில் கடும் சண்டை ஏற்பட்டது. ரஷ்யாவின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் வேறு வழியின்றி, 14 உக்ரைன் படை வீரர்கள் ரஷ்ய ராணுவத்திடம் சரண் அடைந்தனர்.

இரவு நேரமானதால் அவர்களை ஒரு பதுங்குகுழியில் தங்க வைத்தனர். மறுநாள் காலையில் அவர்களை வேறு இடத்திற்கு மாற்ற திட்டமிட்டிருந்தனர். ஆனால், இரவு நேரத்தில் உக்ரைன் ராணுவம் இந்தப் பதுங்குகுழியைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தியது. குண்டு மழை பொழிந்தனர். அவர்களின் இலக்கு சரணடைந்த தங்கள் வீரர்களைக் கொல்வதிலேயே இருந்தது.

அந்த இடத்திற்கு அருகில் வேறு வழியில் ஊடுருவதைப் போன்றதொரு வேலையைச் செய்து, இங்கிருந்த ரஷ்ய வீரர்களைத் திசைதிருப்பினர். சரணடைந்த தங்கள் வீரர்கள் 14 பேரையும் கொன்றுவிட்டே அந்த இடத்தை விட்டு உக்ரைன் வீரர்கள் திரும்பினர்.

15 ம் பக்கத் தொடர்ச்சி

மூலம் தகவல் தருகிறான். மொத்த ஊரையும் போலீஸ் பிடித்து வைத்துக் கொண்டு சித்திரவதை செய்து கொண்டிருக்கிறது. அப்போதும் கதாநாயகன் பல நாட்களுக்கு முன்னால் பார்த்த அதே வீட்டிலேயே அந்தப்படையினரும், அவர்களுடைய தலைவரும் தங்கியிருக்கிறார்கள் என்றும், உடனே கதாநாயகன் போகிறார் பிடிக்கிறார் என்றும் லாஜிக் இல்லாத வகையில் காட்சிகளை அமைத்து முடிக்கிறார். இது போன்ற கதைகளின் பலமே க்ளைமேக்ஸ்தான், அதை இப்படி ஒப்பேத்தியதற்கு காரணம், ஒருவேளை இரண்டாம் பாகத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்பதாகக் கூட இருக்கலாம்.

இறுதிக் காட்சிகளில் காதலியைக் காப்பாற்ற துப்பாக்கி கூட இல்லாமல் நேரடியாக படையினரை எதிர்கொள்ள துடிக்கும் கதாநாயகன் பறப்பதும், விழுவதும், உடனே எழுவதும், சரியான நேரத்தில் துப்பாக்கியை எடுப்பதும், படபடவென பலரையும் சுடுவதுமென இது போன்ற காட்சிகளும், பிடிபட்டு நிர்வாணமாக்கப்பட்ட பிறகு மக்கள்படைத் தலைவர் கால் மேல் கால் போடுகின்ற காட்சிகளும், இன்னும் தமிழ் சினிமா ரசிகர்களை பஞ்ச் டயலாக் விரும்பிகளாகவே நினைக்கிறார் வெற்றிமாறன் என்பதற்கான சாட்சிகளாக அமைகிறது.

அதிகாரவர்க்கத்தை ஆதரிக்கிற படைப்பாளிகள் மொத்தமாக அதிகாரவர்க்கத்தை ஆதரித்தே பேசிக் கொண்டிருக்க மாட்டார்கள், அவர்களின் தந்திரங்களையும், வக்கிரங்களையும் அவ்வப்போது காட்டுவார்கள், அந்த வகையில் உருவாக்கப்பட்ட ஒரு காட்சியில், போலீசின் நடவடிக்கைக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்த அனுமதிக்கக் கூடாது என காவல்துறை தரப்பில் வாதிடுகிறார்கள். ஆனால் அதை அனுமதிக்க வேண்டிய அவசியம் குறித்து அதிகாரவர்க்கத்தின் தந்திரத்தை தலைமைச் செயலாளர் விளக்குகிறார் அந்தக் காட்சியில் அவ்வாறு அனுமதிப்பதன் மூலம் ஒட்டு மொத்த அரசுக்கு எதிராக உருவாகிற கிளர்ச்சி சிந்தனையை மடை மாற்றுவதற்கும், அதை நீர்த்துப் போகச் செய்வதற்கும், அதை பயன்படுத்தி மக்கள் படையை பிடிப்பதற்கான காலத்தை நீட்டிப்பு செய்வதற்கும் அது போல அனுமதிப்பது பயனளிக்கும் என்று தலைமைச் செயலாளர் கூறுவதாக காட்சிப்படுத்தியிருப்பார்.

ஆனால் இந்தக் காட்சிகள் அதிகார வர்க்கத்தின் தந்திரத்திற்கெதிரானதாக அமைகிறதா அல்லது அதிகாரவர்க்கத்தின் புத்திக் கூர்மையை அங்கீகரிப்பதாக அமைகிறதா என்பதை பார்க்க வேண்டியுள்ளது. அந்தத் தந்திரங்களுக்கு எதிரான வலுவான விவாதத்தைக் காட்டாமல் விட்டதன் மூலம், அதுவும் இந்தப் படத்தில் அதிகாரவர்க்கத்தின் அறிவுக்கூர்மையாக எடுத்துக் கொள்ளவும், அது போலீசினுடைய அராஜகத்தை நியாயப்படுத்தவும் தான் காரணமாகிறது.

ஒரு காட்சியில் வசனங்களை விட காட்சி மொழியின் மூலமாக மக்களுக்கு உணர்த்துவது என்கிற திரை மொழி கிட்டத்தட்ட மிகப் பெரும்பாலான தமிழ் இயக்குனர்களுக்கு கைகூடவே இல்லை. அதிலும் வன்முறைக் காட்சிகளைப் பொருத்தவரை மிகவும் வக்கிரமாக காட்சிகளை அமைப்பது இயக்குநர்களுடைய திறமை என்றாகிவிட்டது. இவ்வாறு வன்முறைகளை அதி தீவிரமாகக் காட்டி மக்களை அதற்குப் பழக்கி அதை நார்மலைஸ் செய்வது சமூகத்திற்குப் பேராபத்து.

இப்போது இந்தப் போக்கு மிகவும் ஆபத்தான அளவில் பெருகி வருகிறது, இத்திரைப்படத்தில் வரும் காட்சியமைப்புகளும் அவ்வாறேதான். இது போன்ற வன்முறைக் காட்சிகளைப் பார்த்து சமூகம் சாதாரணமாகக் கடந்து போவது அதைவிட ஆபத்தானது.

அதிதீவிர இடது அரசியலை மார்க்சியப் பார்வையிலிருந்து விமர்சிப்பதற்கும், முதலாளித்துவ வணிக சினிமா விமர்சிப்பதற்குமுள்ள வேறுபாட்டை அறிந்தவர்களால் இது நக்சலைட் படமல்ல, போலீஸ் படம் என்பதைத் துல்லியமாக உணரமுடியும். அதோடு கூடுதலாக இன்னொரு செய்தி நக்சலைட்டுகளை கேவலப்படுத்தி எழுதிய ஜெயமோகனின் சிறுகதைதான் இது என்று அவருக்கு நன்றி தெரிவிக்கிறார் வெற்றிமாறன், இதையும் கவனத்தில் கொண்டு இக்கேள்வியை அணுகினால் விடை எளிது.

இரண்டாவது விமர்சனம், இக்கதை குறிப்பாக காட்சி அமைப்புகள், கதைக்களம் போன்றவை “தோழர் சா. பாலமுருகன்” எழுதிய ‘சோளகர் தொட்டி’ என்ற நாவலை மையப்படுத்தியதாகவும், அதிலிருந்து எடுக்கப்பட்டதாகவும் இருக்கிறது என்பது அவருக்கு உரிய அங்கீகாரம் அளிக்கப்படவில்லை என்ற விமர்சனத்திற்கு இயக்குநர் பதிலளிக்க வேண்டும். அதோடு மக்கள் போராட்டங்களை மையப்படுத்துகிற கதைகள் மற்றும் காட்சியமைப்புகளை அதே மக்களுக்கு எதிரானதாக, அரசு இயந்திரத்திற்கு ஆதரவானதாக மாற்றி எழுத யாருக்கும் உரிமையில்லை என்ற விமர்சனத்தையும் நாம் எழுப்ப வேண்டும்.

கடந்த சில வருடங்களாக காவல்துறை அத்துமீறல்கள் குறித்த திரைப்படங்கள் பரவலாக கவனம் பெறுகின்றன. அவை வெற்றியும் பெறுகின்றன.

திரைப்படத் தயாரிப்பு என்பது கார்ப்பரேட்டுகளின் கைக்குச் சென்றுவிட்ட பிறகு, யார் வேண்டுமானாலும் எந்தக் கதையை வேண்டுமானாலும் படமாக எடுத்து வெளியிடலாம் என்ற நிலைமைகள் சற்றேறக்குறைய காணாமல் போய்விட்ட சூழலில், சிறிய தயாரிப்பாளர்கள் இருக்கிறார்களா இல்லையாவென்று தேடுகிற நிலைமையில் தான் இன்று தமிழ் திரைத்துறை உள்ளது.

மேற்கண்ட சூழல்களும், தயாரிப்பு நிறுவனங்களான அந்தக் கார்ப்பரேட்டுகளுக்கும் அரசியலுக்குமுள்ள தொடர்புகளும் வெளிப்படையாக இருக்கும் போது, காவல்துறை அத்துமீறல்கள் குறித்த திரைப்படங்களை இந்நிறுவனங்களே எடுப்பது மிகப்பெரிய நகைமுரண். நிச்சயம் இவை பொது மக்களுடைய அல்லது தனி மனிதர்களுடைய உரிமைகள் சார்ந்து எடுக்கப்படுவதில்லை.

இதில் பெரும்பாலும் காவல்துறையை நியாயப்படுத்துவதும், காவல்துறை என்ற அமைப்பு சரியானதுதான் ஆனால், அதிலுள்ள சில தவறான தனி மனிதர்களால் தான் அந்த அமைப்பு சிதைந்து போயிருக்கிறது என்று காட்டுவதும், ஏதாவது ஒரு வகையில் போராட்டத்தை விட சட்டம் சிறந்தது, சட்டத்தின்படியே இங்கு ஆட்சி நடப்பதால், அதையே பின்பற்றுங்கள் என்று கூறுவதற்குமான முயற்சி தான் அதற்குள் அடங்கி இருக்கிறது.

போராட்டங்களை விட சட்டத்தின் வழியே சிறந்தது என்று சொல்வது, ஆயுதப் போராட்டங்களுக்கு மட்டுமல்ல, மற்ற எல்லா விதமான சாத்வீகப் போராட்டங்களுக்கும் எதிரானதே. எல்லாவிதமான போராட்டங்களை காட்டிலும் சட்டப்படி அணுகுவதே, சட்டத்தை அணுகுவதே சிறந்தது என்கிற கருத்தை அழுத்தம் திருத்தமாக பதிய வைப்பதற்காகத்தான் இந்த படங்கள் முயற்சி செய்கின்றன.

விடுதலையும் அதைப்போன்றதொரு படமே!!!

தொடர்புக்கு: 9003664446

# கலை இலக்கியப் பூங்கா

அந்த அப்பாவி நல்ல போலீஸ் நேர்மைக்காக தனது மேலதிகாரியையே எதிர்க்கிறார் என்று பல காட்சிகளை அமைக்கிறார் இயக்குநர்.



தா.சந்திரன்

**தமிழ் சினிமாவில் யதார்த்த இயக்குநர் பல விருதுகளுக்கு சொந்தக்காரர், இரண்டு நாவல்களை அடிப்படையாக வைத்து திரைப்படம் எடுத்தவர். என்று அறியப்பட்ட வெற்றிமாறன் இயக்கியுள்ள திரைப்படம் விடுதலை.**

இந்தப் படம் நக்சலைட்டுகளைப் பற்றிய படமா? இல்லை. இது நக்சலைட்டுகளின் நடவடிக்கையை முன்வைத்து எடுக்கப்பட்ட ஒரு போலீஸ் படம். போலீஸ்காரர்களின் நடவடிக்கையை மையப்படுத்தி, நியாயப்படுத்தி காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

“வறுமையாலும், ஒடுக்குமுறையாலும் பாதிக்கப்பட்ட மூன்று மாவட்டங்களில் தமிழர் மக்கள் படை என்ற ஆயுதம் தாங்கிய அமைப்பால் எந்தத் தொழில் வளர்ச்சியும் அங்கு உருவாகவில்லை, ஏற்கெனவே தொழில் நடத்திக் கொண்டிருந்தவர்களும் ஆலைகளை மூடிவிட்டு வெளியேறி விட்டனர், அரசும் முதலாளிகளும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், எந்தவித வளர்ச்சியும் வசதியுமற்ற அந்த மக்களில் பத்தாயிரம் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை தருவதாக உறுதியளித்து சுரங்க தொழிலை கொண்டு வர முயற்சிக்கிறார்கள். அதையும் தமிழர் மக்கள் படையினர் தடுக்கிறார்கள்.” என படம் துவங்கும்போதே இயக்குநர் தன் குரலில் அறிமுகம் செய்கிறார்.

வறுமை மிகுந்த மாவட்டத்தில், அவர்களுடைய வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் வசதி ஏற்படுத்தும் வகையில் பத்தாயிரம் பேருக்கு வேலை தந்து வளமாக்கும் சுரங்கத் தொழிலை கொண்டுவரும் அரசுக்கும், அதைத்தடுக்கும் ஆயுதம் தாங்கிய படைக்கும் இடையிலான போராட்டம்தான் இயக்குநரின் திரைப்படம். இதை உறுதிப்படுத்தும் வகையில் முதல் காட்சியே மக்கள் படையினரின் குண்டுவெடிப்புக் காட்சி. குண்டுவெடிப்பின் பாதிப்பு, ஓலம், பாதிக்கப்பட்ட மக்களின் பரிதவிப்பு எனத் தொடங்கி, அவர்களைக் காப்பாற்றப் படாதபாடு படும் அப்பாவி போலீஸ்காரர்கள் என்று கட்டமைப்பதன் மூலம் அப்பாவிப் பொதுமக்கள் மீதான மக்கள் படையினரின் கொடூரத் தாக்குதல் மற்றும் போலீசாரின் உதவி என்பதை நீண்ட நேரம் காட்சிப்படுத்தி, அரசு இயந்திரத்திற்கு அப்படிப்பட்ட ஒரு கதாபாத்திரத்திற்கும், கதாநாயகனுக்கும்தான் முரண்பாடு.

சுரங்கத் தொழிற்சாலையை நிறுவியே தீரவேண்டுமென்கிற அரசு, மக்கள் படையை எதிர்கொள்ள இங்கிருக்கிற போலீஸ்காரர்களால் இயலாது என்கிற முடிவுக்கு வருகிறது. உடனே வெளியில் இருந்து ஒரு அதிகாரியை தலைமைச்

# விடுதலை




## திரை விமர்சனம்

செயலாளர் இறக்குமதி செய்கிறார்.

அவர் வந்தவுடன் ஏற்கெனவே இருக்கிற போலீசின் நடவடிக்கைக்கு பதிலாக மக்களோடு நெருங்குவதாகக் காட்டுகிறார். மக்களுக்கு பல நன்மைகள் செய்வதன் மூலம் மக்களை அரசின் பக்கம் அதாவது, போலீசின் பக்கம் சேர்த்துக் கொண்டு படையை பிடித்து விட முடியும் என்கிற யுத்தியைக் கையாளுகிறார். இந்த யுக்தி உலகெங்கும் இருக்கிற அதிகார வர்க்கத்தின் பொதுவான யுக்திதான்.

இவ்வளவு நடவடிக்கைகளுக்குப் பிறகும் பொதுமக்கள் போலீசோடு இல்லை. சுரங்கத் தொழிற்சாலைக்காக சாலை அமைக்கும் பணியின் போது வாகனங்களை வெடிவைத்துத் தகர்க்கும் நடவடிக்கையால் கடும் கோபம் கொள்ளும் காவல்துறை, பொதுமக்களை தாக்கத் தொடங்குகிறது, இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியதென்னவெனில், காவல்துறை பல நன்மைகளைச் செய்வதன் மூலம் தங்களோடு நிற்க வேண்டும் என்று அரசின் அதிகாரவர்க்கம் அவர்களிடம் எதிர்பார்க்கிறது, அப்படி அரசோடு நிற்கவில்லை என்று அவர்கள் முடிவெடுத்துவிட்டால், நன்மைகள் செய்யும் நாடகத்திற்கு முன்னால் நடந்ததை விட, கூடுதல் வன்முறையில் அரசு இயந்திரம் ஈடுபடும் என்பதைத்தான் அந்தக் காட்சிகளில் சொல்ல இருக்கிறார்.

இந்த இடத்தில் இயக்குநர் அரசப்படைகளின் வன்முறையைக் காட்டி மக்களுக்கு அவற்றின் மீது வெறுப்பை வரவழைக்கும்படி செய்ய முயற்சிக்கவில்லை, மாறாக போலீஸ்காரர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் போது, அரசு சுரங்க நிறுவனத்தை நடத்த எடுக்கும் முயற்சிக்கு தொடர்ந்து தடை இருந்துகொண்டே இருக்கும்போது போலீஸால் என்னதான் செய்ய முடியும் என்ற கேள்வியை திரைப்படம் எழுப்புகிறது. எனவே காவல்துறை மக்கள் படையை பிடிக்க வேண்டும், இல்லையென்றால் பிடிக்கும் வரை அவர்களுக்கு ஆதரவானவர்களைக் கொடூரமாக சித்திரவதை செய்ய வேண்டும் என்று நியாயப்படுத்தும் வகையில்தான் காட்சிகளை அழுத்தம் திருத்தமாக இயக்குநர் அமைத்திருக்கிறார்.

அதாவது அரசு மக்களை எவ்வளவு பாதிப்புக்கு உள்ளாக்கினாலும் மக்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும், அவ்வாறு பொறுத்துக் கொள்வதற்கு எந்தக் காலவரையறை குறித்த எல்லையும் கிடையாது, ஆனால் அரசு அதன் தேவைக்காக ஒரு வாய்ப்புத் தரும்போது, அதை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும், இல்லையென்றால், இன்னும் கொடூரமான வன்முறைக்கு ஆளாக்கப்படுவார்கள், என்பதுதான் இங்கு நியதி என்று பார்வையாளர்களை ஏற்றுக் கொள்ள வைக்கிறார் இயக்குநர்.

அந்த அப்பாவி நல்ல போலீஸ் நேர்மைக்காக தனது மேலதிகாரியையே எதிர்க்கிறார் என்று பல காட்சிகளை அமைக்கிறார் இயக்குநர். சாதாரண காவல்நிலையங்களிலேயே கடைநிலைக் காவலர்களின் நிலையென்ன என்பது ஊரறிந்த ரகசியம். இதுபோன்ற சிறப்பு ஆயுதப் படைகளில் கற்பனை கூட செய்ய முடியாத ஒன்றை காட்சியாக்கி தமிழ் ரசிகர்களின் ஹீரோயிச விருப்பத்திற்கு தீனி போடுகிறார்.

போலீஸ் அராஜகத்தினால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகும் பெண்ணுக்கு எதிராக போலீஸைக் கொல்வது என்று மக்கள் படை தரப்பு நியாயங்களையும் பேசுகிறார். இதை அனுமதிக்காமல் விட்டிருந்தால் இது போலீஸ் டாக்குமெண்டரி ஆகியிருக்கும்.

ஆனாலும் இறுதியில் மக்களுக்காகப் பாடுபடும் ஆயுதம் தாங்கிய நல்ல தலைவனுக்கும், வன்முறையான அரசு இயந்திரத்திலே இருக்கும் அப்பாவி நல்ல போலீசுக்குமிடையில் நடக்கும் போராட்டத்தில் அப்பாவி நல்ல போலீஸ் வெற்றி பெறுகிறார். அதுவரை காட்சிகளை உரிய கால அவகாசத்தில் சீராக, திரைக்கதை மூலம் நகர்த்தி வந்த இயக்குநர், கடைசி கட்டத்தில் அவசரப்பட்டு காட்சிகளை முடிக்கிறார். அதாவது கதாநாயகன் தொடர்ந்து மக்கள் படைத் தலைவரை போலீசிடம் காட்டிக் கொடுக்க முயற்சிக்கிறார் என்று மக்கள் படையினருக்குப் போலீஸ் உளவாளி

ஆதரவாக பார்வையாளர்களின் மனப்பாங்கை கட்டியமைக்கிறார்.

தமிழ் இயக்குநர்களும் இந்தக் கதைக்குச் சொந்தக்காரராகக் குறிப்பிடப்படும் ஜெயமோகன் போன்ற பிற்போக்கு, வலதுசாரிப் படைப்பாளிகளும் ஒட்டுமொத்த அமைப்பைக் குறை சொல்ல மாட்டார்கள். அதிலிருக்கும் மோசமான சில மனிதர்களைத்தான் குறை சொல்வார்கள். இதிலும்

தொடர்ச்சி 14ம் பக்கம்

## மார்க்சிய விமர்சனம்

இலக்கிய விமர்சனத்தில் நியூ கிரிட்டிசம் என்பது ஒரு அமெரிக்க சிந்தனைப் பள்ளி. அதாவது, என்ன உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதன் உள்நின்று, அதன் கூறுகளை விளக்கிப் பேசுவது.

மார்க்சிய விமர்சனம் என்பது இதுவல்ல.

படைப்புக்கு முன்னும் பின்னும் படைப்பினுள்ளும் இருந்து பேசுவது. இந்த முன்னும் பின்னும் என்பது என்ன? படைப்பின் ஆதாரமும் படைப்பின் விளைவும் குறித்துப் பேசுவதற்காக நமக்குக் கொடுக்கப்பட்டதை சமூக உறவுகளில் வைத்துப்பேசுவது. இதற்கு முன்நிபந்தனை, பிரச்சினைக்கு நேர்மையாக இருக்க வேண்டுமேயொழிய, படைப்பாளி குறித்த பிரமை அல்ல.

வெற்றிமாறனின் விடுதலையை முன்வைத்து வந்த 100 விமர்சனங்களை எடுத்து வாசியுங்கள். ஆரம்ப லாங் சிங்கிள் ஷாட், இளையராஜா இசை, ஒரு நகைச்சுவை நடிகர் கதாநாயகன் ஆன அற்புதம், காதல் காட்சி உருவாக்கம், பாலியல் வன்முறைக் காட்சி படமாக்கப்பட்ட விதம், விஜய் சேதுபதிக்கு முன் சூரி துப்பாக்கி நீட்டும்போது தியேட்டரில் எழும் கைதட்டல் என இன்னபிற விஷயங்கள்தான் கூடக்குறையப் பேசப்பட்டிருக்கும். மிஞ்சினால் கேரக்டர்களின் உருவாக்கம் பற்றிப் பேசப்பட்டிருக்கும். இதன் பெயர்தான் சினிமா நியூகிரிட்டிசிசம்.

இது மார்க்சிய விமர்சனம் அல்ல.

படம் ஆயுதப் போராட்டம் எனும் அரசியல் பற்றியது. காவல்துறை எனும் அமைப்பு பற்றியது. அரசு, காவல்துறை, மக்கள் போராளி அமைப்புகளுக்கிடையிலான முரண் பற்றியது. இது பற்றிப் பேசும்போது எந்தக் கோணத்தை, எதன் ஆதாரத்தில் இருந்து இயக்குனர் தேர்கிறார் என்பது முக்கியம். இந்த மூன்றும் குறித்த ஆவணப்பதிவுகள், இலக்கியப் படைப்புகள், மனித உரிமை அறிக்கைகள் இல்லையா?

பிரச்சினை குறித்த படைப்பாளனின் அக்கறை அவனது முதல் தேர்விலேயே துவங்கிவிடுகிறது.

வெற்றிமாறன் தேர்ந்தெடுத்த கோணமும் படைப்பு ஆதாரமும் இதுவரையிலும் நக்சல் பிரச்சினை தொடர்பாக பேசப்படாத கோணம். அது என்ன? எந்தவிதத்திலும் உண்மையற்ற, கருணையே வடிவமான காவல்துறை ஊழியர் ஒருவரை அவர் சித்தரித்தது. காரணம், அமைப்பின் பகுதியாக இருக்கும்போது அரசு இயந்திர அமைப்பில் ஒருவர் அப்படி இயங்கவே முடியாது. அது ஒரு பேன்டசி.

இங்கிருந்தே நாம் விமர்சனத்தைத் துவங்கவேண்டும். கேரக்டர் அனாலிசிஸ், பிலிம் மேக்கிங் என 100 பக்கங்களும் எழுத முடியும். அதற்கு நமக்கு அவசியமில்லை. காரணம், 100 விமர்சனங்களில் 99 விமர்சனங்கள் அப்படித்தான் எழுதப்படுகின்றன.

–_யமுனா ராஜேந்திரன்

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 15.04.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

◆ மோடி ஆட்சியில் பறிக்கப்படும் ஜனநாயக உரிமைகளை மீட்க போராடுவோம்!

◆ அதானி குழும மோசடிகளை விசாரிக்க நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைத்திடு!

# ஆகஸ்ட் 9 மாநில தலைநகரங்களில் பெருந்திரள் அமர்வில் தொழிலாளி வர்க்கப் படை குவியட்டும்






## ஏ.ஐ.டி.யு.சி. தேசிய நிர்வாகக் குழு அறைகூவல்

ஏ.ஐ.டி.யு.சி.யின் தேசிய நிர்வாக குழு கூட்டம் 2023 ஏப்ரல் 8,9 தேதிகளில் லக்னோவில், சியானோ தங்கும் விடுதி கூட்ட அரங்கில் தலைவர் ரமேந்திர குமார், செயல் தலைவர் பினய் விஸ்வம் எம்.பி. ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

துணைத்தலைவர் வித்யாசாகர் கிரி அஞ்சலி தீர்மானம் முன்மொழிந்தார்.

அரசியல் ஆய்வு அறிக்கை மற்றும் செயல்பாட்டு அறிக்கையை விளக்கி பொதுச்செயலாளர் அமர்ஜித் கவுர் பேசினார். பினய் விஷ்வம் எம்.பி. தேசிய செயலாளர்கள் சுகுமார் தாம்லே, வகிதா நிஜாம், ஸ்ரீகுமார் உள்ளிட்டோர் தீர்மானங்களை முன் மொழிந்து பேசினர். தமிழ்நாடு ஏஐடியுசி தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன்,பொதுச் செயலாளர் ம. இராதா கிருஷ்ணன் உட்பட நாடு முழுமையிலும் இருந்து நிர்வாக குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

### ஆக.9 பெருந்திரள் அமர்வு

மத்திய தொழிற்சங்கங்கள் இணைந்து நடத்தும் நாடு தழுவிய பிரச்சாரம், அதன் நிறைவாக ஆகஸ்ட் 9 அன்று மாநில தலைநகரங்களில் நடைபெற உள்ள பெருந்திரள் அமர்வு இயக்கங்களில் லட்சக்கணக்கான தொழிலாளர்களை பங்கேற்கச் செய்வதென முடிவு செய்யப்பட்டது.

### தொழிற்சாலைகள் சட்ட திருத்தம்!

கர்நாடக மாநில அரசு நாள் ஒன்றுக்கு 12 மணி நேரம் வேலை, பெண்களை இரவு ஷிப்ட்டில் வேலைக்கு அனுமதிப்பது, மிகை நேரப் பணி நேரத்தை காலாண்டுக்கு 144 மணி நேரமாக உயர்த்துவது போன்ற தொழிலாளருக்கு விரோதமாக தொழிற்சாலைகள் சட்டத்தை திருத்தி உள்ளது. இது சம்பந்தமாக கர்நாடக தொழிலாளர் ஆணையர் கூட்டிய கூட்டத்தில் தொழிற்சங்கங்கள் கேள்வி எழுப்பியது.

அதற்கு அவர் “ஆப்பிள், ஐபோன், விஸ்ட்ரான், ஃபாக்ஸ்கான் ஆகிய கார்ப்பரேட் நிறுவனங்கள் வலியுறுத்தியதன் பேரில் பிரதமர் அலுவலகத்தில் இருந்து கர்நாடகம் மற்றும் தமிழ்நாட்டில் இத்தகைய சட்ட திருத்தம் மேற்கொள்ள அழுத்தம் தரப்பட்டதாக வெளிப்படையாக தெரிவித்தார். கர்நாடக மாநிலத்தில் அனைத்து தொழிற்சங்கங்கள் நடத்திய ஒரு நாள் வேலை நிறுத்தத்தை கூட அம்மாநில அரசு பொருட்படுத்தவில்லை.

தமிழ்நாட்டிலும் விஸ்ட்ரான், ஃபாக்ஸ்கான் நிறுவனங்கள் இயங்குகின்றன. ஆப்பிள் நிறுவனம் துவக்கப்பட உள்ளது. பன்னாட்டு நிறுவனங்களுடன் கைகோர்த்து ஒன்றிய மோடி அரசின் அழுத்தத்தின் விளைவாக இது போன்ற தொழிலாளர் விரோத சட்ட திருத்தம் தமிழ்நாட்டில் வந்துவிடாமல் விழிப்புடன் இருந்து தமிழ்நாடு தொழிலாளர்கள் தடுக்க வேண்டும் என்று கூட்டம் எச்சரித்தது.

புலம்பெயர் தொழிலாளர் பிரச்சினையில் பா.ஜ.க.வின் விஷமப்பிரச்சாரத்தை அம்பலப்படுத்தியும், புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பாக திகழும் தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாட்டு மக்களையும் பீகார் தோழர்களும் மற்றவர்களும் பாராட்டினர்.

### அதானி முறைகேடு! கூட்டுக்குழு விசாரணை தேவை

அதானி குழும நிறுவனங்களின் முறைகேடுகள் குறித்து பாராளுமன்ற கூட்டுக் குழு மூலம் விசாரணை நடத்த வேண்டும்.

அமைப்பாக திரட்டப்படாத தொழிலாளிகளை அமைப்பு ரீதியாக திரட்ட ஏஐடியுசி வழிகாட்டியுள்ளபடி, தகவல் தொழில் நுட்பத் துறையில் அணி திரட்ட வேண்டும.

புதிய ஒய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு மீண்டும் பழைய ஒய்வூதிய திட்டத்தை அமலாக்க வேண்டும். புதிய ஓய்வூதியத் திட்டத்தில் தொழிலாளர்களுக்கு ரூ. 3000 க்கு மேல் ஓய்வூதியம் கிடைப்பதில்லை. பழைய ஓய்வூதிய திட்டம் மீண்டும் கொண்டுவரப்படும் என பாஜக அல்லாத நான்கு மாநில அரசுகள் கூறியுள்ளன.

தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தால் பொருளாதார பாதிப்பு ஏற்படும் என தவறாக சொல்லி வருகிறார்கள். ஆனால் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியமானது, மீண்டும் புழக்கத்திற்கே வருவதால் சந்தைக்கும் நல்லதாகும். எனவே,இந்திய அரசாங்கமானது, தனது வரவு செலவுத் திட்டத்தில் ஓய்வூதிய திட்டத்திற்கு போதுமான நிதி ஒதுக்க வேண்டும்.

கடந்த ஒன்பதரை ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் ஜனநாயகத்திற்கான இடம் என்பது தொடர்ந்து சுருக்கப்படுகிறது.

புதிய ஓய்வூதிய திட்டத்திற்கு எதிராக போராடுகின்ற தொழிலாளர்களை ஒன்றிய அரசு மிரட்டுகிறது. போராடிவரும் உத்திரப்பிரதேச மின்வாரிய தொழிலாளர்களை உயர்நீதி மன்றம் விமர்சனம் செய்கிறது. பாராளுமன்றம் இந்த தொடர் முழுவதும் முடக்கப்பட்டுள்ளது. நீதித்துறைக்கு அரசு நிர்வாகம் பகிரங்க சவால் விடுகிறது. விவாதம் இன்றி சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. இவ்வாறு ஜனநாயக உரிமைகள் சுருக்கப்படுவதை ஏற்க முடியாது. எனவே தொழிலாளி வர்க்கமானது, இந்த வகையான தாக்குதல்களை எதிர்த்து குரல் கொடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

### சம்மேளன மாநாடுகள்

ஜீன் 10,11 தேதிகளில் லக்னோவில் முனிசிபல் தொழிலாளர் சம்மேளனத்தின் மாநாடு, கர்நாடகத்தில், ஜூலையில் சாலை போக்குவரத்து தொழிலாளர் சம்மேளனத்தின் மாநாடு, பெங்களூருவில் ஐடி தொழிலாளர் தேசிய கருத்தரங்கம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் உத்தரப் பிரதேச மாநில இப்டா தோழர்களின் பகத்சிங் நாடகம் நடைபெற்றது. கூட்ட ஏற்பாடுகளை உ.பி. ஏஐடியுசி தோழர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

**எம்.ராதாகிருஷ்ணன்**
**பொதுச்செயலாளர்**
**தமிழ்நாடு ஏஐடியுசி**

## அரசியல் கட்சிகளின் அங்கீகாரம்:

## தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பு! இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு கூட்டம் 11.04.2023 அன்று புதுடெல்லியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அண்மைக்கால அரசியல் வளர்ச்சிப் போக்குகள் குறித்து கட்சியின் பொதுச் செயலாளர் து. ராஜா எடுத்துரைத்தார்.

அரசியல் கட்சிகளின் அங்கீகாரம் குறித்த தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பு தொடர்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள செய்தி அறிக்கை பின்வருமாறு:

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புகழ்மிகு வரலாற்றையும், பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான போராட்டத்திலும், சுதந்திர இந்தியாவில் தேசிய செயல்திட்டத்தை வடிவமைத்ததிலும் கட்சி வகித்த முன்னணி பாத்திரத்தையும், இந்திய தேர்தல் ஆணையம் உரிய முறையில் கவனத்திற் கொண்டு, பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்க வேண்டும்.

தேசத்தின் ஜனநாயகப்பூர்வ அரசியலமைப்பு முறையை வலுப்படுத்துவதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முன்களத்தில் நின்று போராடியுள்ளது.

வெகுமக்களின் பேராதரவுடன், அகில இந்திய அளவில் இயங்கி வரும், மிக மூத்த அரசியல் கட்சிகளில் ஒன்றாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திகழ்ந்து வருகிறது. தேசத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்றிட, சமூக நீதி, மதச்சார்பின்மை, சோசலிசம் உள்ளிட்ட அரசியலமைப்பின் இலட்சியங்களைப் பாதுகாத்திட, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மகா உன்னதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது.

மக்களின் உரிமைப் போராட்டங்கள், தேசநலனுக்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து அர்ப்பணிப்புடன் தொடர்ந்து இயங்கும்.

தேசிய கட்சி என்ற அங்கீகாரத்தைத் தேர்தல் ஆணையம் திரும்பப் பெற்றிருந்தாலும், மேலும் தீவிரமாக, அர்ப்பணிப்புடன், நாடு முழுவதிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து மக்களிடையே பணியாற்றிடும்.

அதே நேரத்தில், விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை, தேர்தல் நிதி பத்திரங்கள் ஒழிப்பு, இந்திரஜித் குப்தா கமிட்டி பரிந்துரைத்தபடி அரசே தேர்தல் செலவுகளை ஏற்பது உள்ளிட்ட விரிவான தேர்தல் சீர்திருத்தங்களுக்காக, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அதன் பரப்புரையைத் தீவிரமாக மேற்கொள்ளும்.

இது போன்ற சவால்களை எதிர்கொண்டு முறியடித்து, மீண்டெழும் ஆற்றலும், உறுதியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு உண்டு.

இவ்வாறு செய்தி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.